
# மருதமுகிழ்

2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

## கரைச்சி பிரதேச சபை- கிளிநொச்சி

## பொது சன நூலகம்

### கிளிநொச்சி/முரசுமோட்டை/ வட்டக்கச்சி/ ஸ்கந்தபுரம்

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில், கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல், அழுக்குப் படியவிடல் மற்றும் ஊறுபடுத்தல்களைச் செய்யவேண்டாமென மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் பொழுது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். இல்லையேல் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன் ஊறுபடுத்தல்களுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்க வேண்டி ஏற்படும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HB Wili

# மருதமுகிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதமுகிழ்

013576

வெளியீடு:
**கலாசாரப் பேரவை**
பிரதேச செயலகம், வவுனியா வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


நூலின் பெயர்
**மருதமுகிழ்**

நூலின் வகை
**கலாசார மலர்**

வெளியீடு
**கலாசாரப் பேரவை,**
**பிரதேச செயலகம், வவுனியா வடக்கு.**

பக்கங்கள்
**100**

பிரதிகள்
**200**

பதிப்புரிமை
**பிரதேச செயலகம், வவுனியா வடக்கு**

நூல் வடிவமைப்பு
**எஸ்.விஜய்**

வெளியீடு
**27.மார்கழி, 2016**

தொடர்பு
**பிரதேச செயலகம், வவுனியா வடக்கு.**

அச்சகம்
**விஜய் அச்சுப் பதிப்பகம்**
**172, மில் வீதி, வவுனியா.**
**077 900 9491 / 024 222 5799**

ISSN
2345-0977-2016




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்குழு

திரு.ஜெகதீசன் கோபிநாத்
(மலராசிரியர், மேலதிக மாவட்டப் பதிவாளர்)

திருமதி.நிவேதிகா கேதீசன்
(உதவிப் பிரதேச செயலாளர்)

திருமதி.விஜிதா செல்வகுமார்
(கலாசார உத்தியோகத்தர்)

திருமதி.பிருந்தா கௌதமன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

திரு.செ.இலக்சுமிகாந்தன்
(ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரில் முகிழ்பவை


| | |
|---|---|
| இலங்கையும் இராவணனும் | 01 |
| தொன்மையைத் தேடும் பயணம் | 09 |
| சிறந்த தொடர்பாடலே வெற்றியின் இரகசியம் | 13 |
| முல்லை மண்ணின் பழுத்த ஆளுமை கலாநிதி முல்லைமணி வே.சுப்பிரமணியம் அவர்கள் | 18 |
| முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் கொண்டாட்டம் | 21 |
| நவீன கவிதை மனம் | 24 |
| இரு கவிதைகள் | 28 |
| இரண்டு ஆயுதம் | 30 |
| வன்னி வளங்கூறும் பள்ளுப்பாடல்கள் | 32 |
| தமிழ் வளர்த்த வெளிநாட்டுப் பேரறிஞர்கள் | 35 |
| சமூகப் பண்புத்தரமும் விழுமியக்கல்வியின் தேவையும் | 40 |
| நன்னீரை வாழி அனிச்சமே | 45 |
| தமிழர் நாம் சிந்திப்போம் | 49 |
| அழிந்துபோகும் தமிழ் பண்பாட்டின் மீளெழுச்சி | 51 |
| மனித வாழ்வில் இலக்கியம் | 53 |
| மனிதம் மரித்துப் போவது ஏன்? | 58 |
| பண்பாட்டை பாதுகாப்போம் | 61 |
| கலை, கலாசாரம், பண்பாடு | 63 |
| புத்துயிர் | 65 |
| நிலையான எதிர்காலத்துக்கு வலுவான பெண்கள் | 68 |
| ஆசிரியர் | 72 |
| காயத்திரி மந்திரம் | 73 |
| காகமும் பாட்டியும் | 76 |
| என்ன நடக்கிறது | 79 |
| வேண்டுகைக் கொத்து | 81 |
| சீதனம் | 84 |
| மனித வாழ்வும் கலாசாரமும் | 85 |
| உயிர்வாழ பயிர் வளர்ப்போம் | 87 |
| தொலைந்த நம் உரிமை | 89 |
| சிறகடிக்கத் துடிக்கும் சிலுவை மைந்தர்கள் | 91 |
| கலை இலக்கிய விழா - 2016, போட்டி முடிவுகள் | 93 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீச
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்குப் பிரதேச கீதம்

வாழ்க நெடுங்கேணி வளம் நிறை நகருறை
வளர் பிரதேசற் செயலகமே!
வன்னி நிலத்தழகெண்ணி மகிழ்ந்திட
வாய்த்தநற் பிரதேச செயலகமே!
(வாழ்க...)

வற்றா ஊற்றின் வளம்மிகு கேணிகள்
பெற்றாய் தாயே புகழ் பெற்றாய்!
அற்றார் அழிபசிதீர்க்கும் அரசியின்
நற்றாய் நீயே நலம்மிக்காய்!
(வாழ்க...)

முல்லையும் மருதமும் முயங்கிய நிலமாய்
மூத்த நிலம் எனப் பெயர் பெற்றாய்!
எல்லை இலாப்புகழ் கொண்ட நம் தாயே
என்றும் வாழ்கவென வாழ்த்துகிறோம்!
(வாழ்க...)

ஈழ வளத்திருநாட்டின் இதயமாய்
இலங்கு புகழ்வன்னி எழிலரசே!
காலநிலை கனவளம் தரும்
நன்மைபெறு வன்னி நிலத்தரசே
(வாழ்க...)

குளமும் வயலும் குளிர்தரு சோலையும்
வளமாய் அமைந்த நம் உயிர்த்தாயே!
அழகும் கலைகளும் அரியபால் தேனும்
அன்று போல் மீண்டிட உயிர்த்தாயே!
(வாழ்க...)

பொன்னென வழியும் வியர்வையில் நனையும்
பூமித்தாயே நம் தாயே!
அன்னமளித்துயர் விருந்தில் மகிழ்ந்திடும்
அன்னை தாயே வணங்குகின்றோம்!
(வாழ்க...)

வவுனியா மாவட்ட வடக்குப் பிரிவாம்
வளம்மிகு நெடுங்கேணிப் பிரதேசம்!
அவனியில் சிறப்புற அனைவரும் வாழ்த்தி
அடிபணிந்தே நாம் போற்றிடுவோம்!
(வாழ்க...)

அடங்காப் பற்றென அன்றொரு பேர்கொள்
அன்னையெம் தாயே வாழ்த்துகிறோம்!
திடங்கொள் பண்டாரவன்னியன் ஆண்ட
தேசமே உன்னை வணங்குகின்றோம்!
(வாழ்க...)

-கவிஞர் கலாநிதி அகளங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா வடக்கு கலாசார பேரவையின்
## கலைத்தாய் வாழ்த்து

கலைத்தாயைப் பணிவோமடா!
கலைத்தாயைப் பணிவோமடா!
அலைகடலாய் ஆர்ப்பரிக்கும்
தலைமகளாம் தமிழ் மகளின்
(கலைத்தாயைப்..)

மேடை பல காண்போம்!
மேவு புகழ் கொள்வோம்!
தேவைமிகு கலை பெருக்கி
தேனினிய தமிழ் வளர்க்க
(கலைத்தாயைப்..)

காடுவளர் சோலை!
கானமயில் ஆடும்!
மானினங்கள் கூடும் எங்கள்
வவுனியா வடக்கினிலே
(கலைத்தாயைப்..)

இயற்றமிழை வளர்ப்போம்!
இசைத்தமிழை வளர்ப்போம்!
நாடகத் தமிழ் கலந்து
நானிலம் செழித்திடவே
(கலைத்தாயைப்..)

பாடல் பலபாடி - பரதம்
ஆடல் இசை ஆடி!
வீடும் நாடும் நலம் பெறவே
கோடியின்பம் தருபவளாம்
(கலைத்தாயைப்..)

வித்தை பல கற்போம்!
சத்தியத்தைக் காப்போம்!
நித்தமதைக் கடைப்பிடித்து
தர்மமதாய் கொள்வதற்கு
(கலைத்தாயைப்..)


காவியங்கள் படைப்போம்! - கலைத்
தேவிபுகழ் சொல்வோம்
மேவுமிசை நாடகத்தால்
மேன்மை பெறும் வாழ்வதனால்
(கலைத்தாயைப்..)

பரதக் கலை வளர்ப்போம்! - சத்திய
விரதமொன்று கொள்வோம்!
சிரமம்தனையே சாய்த்து - கலை
அரும் புகழை உலகறிய
(கலைத்தாயைப்..)

-ஞானக்கதிரோன் பரந்தாமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

ஒவ்வொரு பிரதேசத்தினது கலை, பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் பாரம்பரியங்களை எமது எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்வதற்கும் அப்பகுதிகளில் வாழ்ந்த எமது மூதாதையர்களின் உயர்வான வாழ்வியல் முறைமைகள், அவற்றின் உயர்வுகள் பற்றி தெரிந்தும் அறிந்தும் கொள்வதற்கு ஆவணப்படுத்தல்கள் தேவை நிறைந்ததாக அமைகின்றது.

அந்த வகையில், வடமாகாணத்தில் தங்கள் பகுதிகளுக்குட்பட்ட சிறப்புக்களையும் மற்றும் விசேட அம்சங்களையும் நூல் வடிவாக்கி, பிற்கால சந்ததியினருக்கு வழங்கும் ஒரு இனிய கைங்கரியத்தில் பிரதேச செயலகங்கள் அவர்களின் கலாசார பேரவையின் உதவியுடன் ஈடுபட்டிருப்பது போற்றுதற்குரியது.

வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் "மருதமுகிழ்" சஞ்சிகை வன்னிப் பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் காணப்படும், வன்னி மக்களின் கலாசாரங்கள், உணவு முறைகள், பழக்க வழக்கங்கள், கற்றல் முறைமைகள், போன்ற இன்னோரன்ன விடயங்கள் பற்றி எடுத்தியம்பவிருக்கின்றது என அறிகின்றேன். காடும் களனிகளும், குளங்களும் குடியிருப்புக்களுமாகச் செறிந்து, பரந்த பெருநிலப்பரப்பின் முல்லைவனம் சார் வாழ்வினதும் மருதவயல்சூழ் வாழ்வினதும் கூட்டுப்பண்பாடு குழைந்து கிடக்கும் வன்னிப் பிரதேசத்தின் பண்பாட்டு விழுமியங்களை பேசிநிற்கக்கூடிய ஒரு பண்பாட்டு மலராக இம்மலர் வெளிவர இருக்கின்றது. அம்மலருக்கு எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து இச்சிறு செய்தியை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்
வடமாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வவுனியா வடக்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலை இலக்கிய விழாவின் போது வெளியிடப்படும் "மருதமுகிழ்" சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதனையிட்டு மகிழ்வடைகின்றேன்.

வருடந்தோறும் இவ்வாறான இதழ்களை வெளியிடும் போது பிரதேசத்திலுள்ள கலைஞர்களின் திறன்களை வெளிக்காட்டுவதற்கும் பிரதேசத்து மக்களின், மறைந்துள்ள எழுத்தாற்றல்களை மெருகூட்டும் களமாகவும் அமைகிறது என்றால் மிகையாகாது.

பிரதேசத்தின் சிறப்புக்கள், வரலாறு ஒவ்வொரு இதழ் ஊடாகவும் வெளிவரும்போது இன்றைய சந்ததியினர்க்கும், எதிர்கால தோன்றல்களுக்கும் பயனுள்ள ஓர் ஆவணமாக அமையும். இம்முயற்சிக்கு முன்னின்று உழைத்த அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் நிச்சயம் பாராட்டியே ஆகவேண்டும்.

கலை, இலக்கிய விழா சிறப்புடன் நடைபெறவும், விழாவில் வெளியிடப்படும் மலர் சிறந்த ஆவணப்படுத்தலாக அமையவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

**கௌரவ திரு.த.குருகுலராசா,**
கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை, மற்றும்
இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின், கலை இலக்கிய விழாவினை முன்னிட்டு இவ் வருடமும் வெளியிடப்படுகிற "மருதமுகிழ்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை யிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேசத்தையும் அதன் சமூக பண்பாட்டு, கலை கலாசார அம்சங்களையும் பிரதிபலிக்கும் வகையில், இம்முறை இச்சஞ்சிகை வெளியிடப்படுவதினை வரவேற்பதுடன் மிகச்சிறந்த ஆக்கங்கள் மக்கள் மனதையும் விழுமியங்களையும் வளப்படுத்துமெனவும், நாளாந்தம் எழுத்தாக்கத்துறையில் ஆர்வம் காட்டும் எமது பிரதேச எழுத்தாளர்களையும் அவர்களது ஆக்கங்களை பகிரங்கப்படுத்துவதற்கும் இச் சஞ்சிகை ஒரு களமாக அமையுமென நான் எதிர் பார்க்கின்றேன்.

தற்போதைய இளம் சமுதாயத்தினரின் அறிவுப்பசிக்கு தேவையான எமது பிரதேசத்தின் சிறப்பம்சங்களையும், தகவல்களையும் உள்ளடக்கி மிகச்சிறந்த மொழி வளத்துடன் காத்திரமான படைப்புக்களையும் கொண்டு இச்சஞ்சிகை வெளிவருவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் "மருதமுகிழ்" சஞ்சிகைக் குழுவினரை பாராட்டுவதுடன் எனது மனமுவந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**எம்.பி.ஆர்.புஸ்பகுமார,**
மாவட்டச் செயலாளர்,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்வாழ்த்துச் செய்தி

கலைநயமிக்க இந்த தரணியின் கலை அம்சங்களை கட்டிக்காக்கும் பாரிய பொறுப்பு நம்மிடம் தரப்பட்டிருக்கின்றது. அவை நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளிற்கிணங்கவே உய்த்தறியப்படுகின்றது. அந்த வகையில் 2016ஆம் ஆண்டின் தேசிய கலை விழாவிற்கு ஒப்பாக, வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தின் பங்கேற்பினால் இடம்பெறும் பிரதேச இலக்கிய விழாவில் "மருதமுகிழ்" எனும் சஞ்சிகை வெளியிடப்படுவது பாராட்டத்தக்கதாகும். இலக்கிய இரசனையினை சமூகமயமாக்கிட வேண்டிய காலப்பராயத்தில் மிகவும் பெறுமதியான கட்டுரைகளைக் கொண்ட "மருதமுகிழ்" எனும் நூலை வெளியிடல் தொடர்பாக அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட அனைவருக்கும் எனது பாராட்டை வழங்குகின்றேன்.

அவ்வாறே, தற்கால பரம்பரை இலக்கிய எழுத்துக்கலையில் இருந்து விலகிப்போவதன் மூலம் நிகழ்காலத்தில் நிர்மானமாகி வருகின்ற சமூகஅழிவு மிகவும் துக்ககரமானதாகும். இத்தகைய சூழலினுள் பிள்ளைகள் போட்டிகரமான கல்வித்துறையில் இருந்து மீளப்பட்டு, அவர்களைச் சரியான சிந்தனையுடன் கூடிய பிள்ளைகளாக மாற்றுவது எமது கடமையாகும். சிறுவர் பெரியோர் யாரிடையிலும் இரசனையினை வெளிப்படுத்தலின் பொருட்டு பிரதேச செயலகமட்டத்தில் நிறைவேற்றிடப்படுகின்ற இத்தகைய நற் செயற்பாடுகள் காரணமாக, இலக்கிய களத்திற்கு ஏற்படக்கூடிய நல்வாழ்த்துக்கள் எண்ணற்றதாகும். அனைத்தையும் ரூபா சதங்களினால் கணிப்பிடப்படும் இத்தகைய காலப்பகுதியில், கலைநூல்களை சமூகமயமாக் குவதில் அழகான மனிதர்களைக் கொண்ட நாடொன்றை கட்டியெழுப்புவதில் இது உபகாரமாகும். சிறந்த மனிதர்களைக் கொண்ட நாடொன்றை கட்டியெழுப்பல் பொருட்டான தற்போதைய தத்துவத்தினுள் "மருதமுகிழ்" முற்றிலும் வெற்றியடைந்திட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

அமைதியான, ஒழுக்கமான, நிரப்பமான அழகான மனிதர்களைக் கொண்ட செழிப்பான நாடொன்றை ஒன்று சேர்ந்து உருவாக்கிடுவோம்.

**அனூரக்ஷா கோகுல பர்னாந்து**
பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வவுனியா வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் வருடாவருடம் வெளியிடப்படும் "மருதமுகிழ்" நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வவுனியா வடக்கு பிரதேசத்தில் வாழ்கின்ற எழுத்தாளர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையிலும், ஆக்கங்களையும் திறமைகளையும் உலகிற்கு சான்றுப்படுத்தும் வகையிலும் இந்நூல் வெளியிடப்படுவது பாராட்டுத்தக்கதும் சிறப்பானதுமான விடயமாகும்.

இச் சஞ்சிகை வெளியீட்டின் மூலம் தமது படைப்புக்களை பிரசுரிப்பதற்கும் வெளிக்கொணருவதற்கும் சிறந்தவொரு களம் அமைத்துக் கொடுப்பதாக அமைகின்றது. அத்துடன் சிறந்த எழுத்தாளர்களை ஊக்குவிப்பதாக அமைவதுடன் ஒவ்வொரு எழுத்தாளரதும் மனதில் உதிக்கின்ற எண்ணங்களை எழுதுகோல் கொண்டு வரைய வழங்கப்படும் சந்தர்ப்பமாகவும் இந்நூல் அமைகின்றது.

பல்துறை சார்ந்ததாக வெளியிடப்படும் இந்நூல் அனைத்து நூலார்வலர்களுக்கும் விருந்தாக அமையும் என்பதில் எதுவித மாற்றுக் கருத்தும் இல்லை. மேலும் இச் சஞ்சிகை மூலம் சமூக மட்டத்தில் உள்ள கலைஞர்களின் திறமை வெளிக்காட்டப்படுவதாக அமைகின்றது. வெவ்வேறுபட்ட கலைஞர்களை இனங்காண்பதற்கும், கௌரவிப்பதற்கும் இம் மலர் ஊன்றுகோலாக அமையும்.

இது போன்ற சஞ்சிகைகள் அனைத்து பிரதேசங்களிலும் வெளியிடப்பட வேண்டும் என்பதே அனைவரது விருப்பமும், காலத்தின் தேவையும் கூட ஏனெனில் பிரதேசத்திற்கே தனித்துவமான ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவது இது போன்ற நூல்களேயாகும்.

அந்தவகையில், இந்நூல் வெளியீட்டினை முன்னெடுத்துள்ள பிரதேச செயலாளர் உட்பட அனைத்து ஏற்பாட்டாளர்களிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

**திருமதி.வனஜா செல்வரட்ணம்**
உதவிப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடக்குமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வவுனியா வடக்கு கலை கலாசார பேரவையினால் வளர்த்தெடுக்கப்படும் "மருதமுகிழ்" நூல் ஆலமர விருட்சம் போல் வளர்வதற்கு, வவுனியா வடக்கு கல்வி கலாசார அபிவிருத்தி பேரவையின் அங்கத்தவர்களின் அயராத உழைப்பும், வீழ்ச்சி அடைந்து விடக்கூடாது என்கின்ற இறுமாப்பும், அர்ப்பணிப்பும், குறித்த இதழ் மீண்டும் முகிழ்வடைவதற்கு கால்கோளாய் அமைந்துள்ளதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இந்த "மருதமுகிழ்" இப்பிரதேசத்து மக்களின் கலைஞர்களின் ஆக்கத்திறனுக்கு மீண்டும் ஒரு களமாக அமைந்துள்ளமையினையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். பாடசாலை மாணவர் மத்தியில் காணப்படும் சிந்தனைத் திறனை எழுத்துருவாகப் பதிப்பதற்கு இந்நூல் என்றென்றும் உறுதுணையாக இருக்கும். எத்தனை இடர்வரினும் இந்நூலின் வெளியீடு நின்று விடாது தொடர்ந்தும் வெளிவருவதற்கு, வவுனியா வடக்கு பிரதேசத்தில் இருக்கின்ற சகலரினதும் ஒத்துழைப்பு அவசியமானதாக அமைந்துள்ளது. இந்நூலில் வெளிவரும் ஆக்கங்கள் சமூகத்திலே நல்ல மாற்றங்களிற்கு காரணமாக அமையுமானால், அதுவே இந்த நூலின் வெற்றியாகும். எனவே இந்நூலிற்கு ஆக்கங்களைத் தந்துதவிய போராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கலைஞர்கள், மற்றும் மாணவ மாணவிகள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் நீங்கள் எழுத்துத்துறையில் நல்ல எழுத்தாளர்களாக கால்பதிக்க என்றும் இறைவனின் நல்லாசிகள் உங்களிற்கு கிடைக்க வேண்டுமென இறைவனை வேண்டி, எனது ஆசிகளுடன் நிறைவு செய்கின்றேன்.

**திரு.க.பரந்தாமன்**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
வவுனியா வடக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் நெறிப்படுத்தலில் பிரதேச கலைகலாச்சார பேரவையானது வழமைபோலவே இந்த வருடமும் தனது சஞ்சிகையான "மருதமுகிழ்" இனை வெளியிடுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மண்ணின் கலை கலாச்சாரங்களையும் தொன்மைகளையும் வளங்களையும் தனித்துவம் வாய்ந்த கலைஞர்களின் புகழையும் எடுத்தியம்பும் முகமாகவும் எம் மண்ணின் எழுத்தாளர்களின் ஆக்கங்களை தாங்கியும் வெளியிடப்படும் இந்நூலானது, எமது இளம் சந்ததியினருக்கு எமது மண்ணின் வாழ்வியல் தொடர்பான சிறந்த ஆவணம் ஒன்றாகவும் பேணிக்காக்க வேண்டிய பொக்கிஷமாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

முற்றுமுழுதாக கிராமப்புற சனத்தொகையினை கொண்டும் ஒப்பீட்டளவில் வரையறுக்கப்பட்ட வளங்களுடன் செயற்பட்டுவருகின்ற போதும் தமது பராம்பரியத்தினையும் மரபினையும் பேணும் வகையில் தொடர்ச்சியாக இந்த நூலினை வெளியிட்டுவரும் விழாக்குழுவினர் மற்றும் மலர் ஆசிரியர் ஆகியோருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இந்த முயற்சி இனிவரும் காலங்களிலும் தொடர இறைவன் ஆசியையும் வேண்டிநிற்கின்றேன்.

**நிவேதிகா கேதீசன்**
உதவிப் பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
வவுனியா வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வவுனியா வடக்குப் பிரதேசம் வளம் கொழிக்கும் இயற்கை அம்சங்களை தன்னகத்தே இயல்பாக உள்ளடக்கியுள்ளது. இங்குள்ள மக்களுக்கு பொருள்வறுமை இருந்தாலும் இவர்களிடம் கலைச்செல்வம் மலிந்தே கிடக்கின்றது. வடமாகாண கல்வி பணிபாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமானது, பிரதேச செயலகங்களின் ஊடாக பாரம்பரியக் கலைகள் மீளுருவாக்கம் செய்தல் மற்றும் கலைஞர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் ஏற்படுத்தப்பட்ட திட்டங்களின் மூலம் கிராமங்கள் தோறும் கலை எழுச்சியொன்றை எம்மால் ஏற்படுத்த முடிந்ததென்றால் மிகையில்லை. அந்தவகையில், மன்றங்களின் ஊடாக பௌர்ணமி கலைவிழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, அதனூடாக கலை ஆர்வமுள்ளவர்கள் இனங்காணப்பட்டு, அவர்களின் புத்தாக்கமுயற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டது. பாரம்பரிய கலை வடிவங்கள் ஆற்றலுள்ள கலைஞர்களின்மூலம் மீழுருவாக்கம் செய்யப்பட்டமை. போதைஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகங்கள் பாடசாலை மற்றும் கிராமங்களில் காட்சிப்படுத்தியமை, குறும்பட வெளியீட்டு முயற்சிகளுக்கு ஊக்கமளித்து வருகின்றமை மற்றும் இலவச மிருதங்க பயிற்சி வகுப்புகள் நடாத்தி வருகின்றமை, எமது பிரதேசத்தில் ஆங்காங்கே கிடக்கின்ற தொல்பொருள் எச்சங்களை ஆவணப்படுத்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களை பிரதேச கலாசாரப்பேரவையினூடாக நடைமுறைப் படுத்தி வருகின்றோம்.

இலைமறைகாயாக இருக்கின்ற கலைஞர்கள் இனங்காணப்பட்டு, அவர்களை வெளிக்கொண்டுவரும் முயற்சியிலும் மற்றும் கலாசார பண்பாட்டு பேணுகை எதுவாக இருந்தாலும் பேரவைத்தலைவர், பிரதேசசெயலாளர் திரு க.பரந்தாமன் அவர்களின் இடையறாத ஊக்கமும் இதற்கு உந்துசக்தியாக இருந்ததெனலாம். அவ்வாறே இந்நூலாக்கக் குழுவில் தன்னை அர்ப்பணித்து நிற்கின்ற ஆசிரியர் திரு ஜெ.கோபிநாத் அவர்கள் மற்றும் இம்முயற்சிகளில் தன் இடையறாத பணிகளை மேற்கொள்கின்ற கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.கௌ.பிருந்தா அவர்கள் மற்றும் எமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் உறுதுணையாக இருக்கின்ற உதவிப்பிரதேச செயலாளர் திருமதி.கே.நிவேதிகா அவர்கள், இப்பணிகளின் நிதிவிடயங்களில் தனது ஆலோசனையினை வழங்கிநிற்கின்ற கணக்காளர் திரு நாகேஸ்வரபாலா அவர்கள், எமது அலுவலக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், கலைஞர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருப்பதுடன் இந்நூலுக்கான ஆய்வுக்கட்டுரைகளினை கேட்டவுடன் தந்துதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். “மருதமுகிழ்” ஆறாவது மலராக வெளிவருவ தனையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைவதுடன் இது தொடர்ந்தும் மலர்ந்து மணம்பரப்ப கலாசாரப் பேரவையின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி விஜிதா.செல்வகுமார்**
கலாசார உத்தியோகத்தர்
வவுனியா வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

ஆண்டு தோறும் வவுனியா வடக்குப் பிதேச செயலகத்தினால் நடாத்தப்படும் தமிழர்களின் கலைகலாசார பண்பட்டு விழுமியங்கள் இணைந்த இலக்கிய பெருவிழாவோடு அழகு தமிழால் அச்சிட்டு வெளியிடும் மருதமுகிழ் மலரையும் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று தமிழர் புலம்பெயர் தேசம் எங்கும் வாசம் செய்யும் வல்ல தமிழ் வள்ளுவர் பெருமானின் இருவரிதிருக்குறள் போல் வானுயர்ந்து நிற்கயிலே வன்னி வழ நாட்டினிலே வற்றாத கேணி எனப் பெயர் பெற்ற நெடுங்கேணிப் பிரதேசத்திலே கலைஇலக்கிய பெருவிழாவும் மருதமுகிழ் மலரும் வெளியிடுவது சாலச்சிறந்து.

உழவர் உழைப்பால் உயர்ந்த நம் தேசத்தில் அன்று கல்வி கற்க பலதடைகள் இருந்தாலும் இன்று மருதோடையில் கூட வறிய நிலையில் உள்ள மாணவர்கள் இலவசமாக கல்வி கற்று தரம் உயர கணனி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதுமட்மல்ல அங்குள்ள பலகிராமங்களில் கலைஞர்கள் உருவாக்கப்பட்டு நாட்டுகூத்து, நாட்டியம், நாடகம்,

பாடல்கள் என பயன்தரும் பனைமரம் போல் உறுதியுடன் செயல்படும் கலைஞர்களைப் பார்த்து பரவசம் அடைகின்றேன். இவையாவற்றிக்கும் காரணமானவர்கள் வவுனியா வடக்குப் பிரதேச செயலாளரும் அங்கு கடமைபுரியும் பணியாளர்களும் தான். அவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

"மருதமுகிழ்" முழு உலகும் முத்தமிழால் மணம்பரப்ப வேண்டுமென வாழ்துகின்றேன்.

**திரு.செல்லையா செல்வகுமாரன்**
நிர்வாகி, மருதோடை, அம்மா கணினி நிலையம்
(இந்திரன், கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலராசிரியரிடமிருந்து...

ஆண்டுதோறும் அமையும் வவுனியா வடக்கின் கலை இலக்கிய பெருவிழாமிகுந்த முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகின்றது. எம் வரலாறு, வாழ்வியல், பண்பாடு முதலானவற்றை இயல், இசை, நாடகமாக்கி பிரதேசமக்களை ஒன்றிணைத்து எம்மை நாம் கொண்டாடுவதாய் விழா நடந்தேறுகிறது. "மருதமுகிழ்" என்னும் ஆண்டுமலரின் வெளியீடு நிகழ்வின் முத்தாய்ப்பாய் அமைகிறது. எம் இருப்பு, இயல்பு, தொன்மை முதலானவற்றையும் கலாசார விழுமியங்களையும் பண்பாட்டு சுவடுகளையும் பிரதிபலிக்கும் ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் கலை இலக்கிய ஆக்கங்கள் உள்ளடங்கி எம் பண்பாட்டு வாசம் மாறாமல் "மருதமுகிழ்" வருடாந்தம் மலர்கிறது. எங்கள் பிரதேசத்தின் பல எழுத்தாளர்களை வெளியுலகத்திற்கு அறிமுகம் செய்தும் இன்னும் பலரை எழுதத் தூண்டியும் "மருதமுகிழ்" எம் பிரதேசத்திற்கு பெருமை சேர்த்திருக்கிறது என்றால் அது மிகையில்லை.

இவ்வருடமும் பல சிறப்பம்சங்களுடன் கலை இலக்கிய பெருவிழா நடைபெறுகிறது. அத்தோடு மிகுந்த இடர்களுக்கு மத்தியிலும் இம்முறையும் "மருதமுகிழ்" முகிழத்தவறவில்லை. ஆறாவது மலருக்கும் ஆசிரியராகக் கடமையற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பேறாகக் கருதுகிறேன். வாசிப்பும் எழுத்தும் அதற்கான நேரமும் மிகவும் சுருங்கிவிட்ட காலச்சூழலில் மலரிற்கான ஆக்கங்களைத் தந்தவர்க ளுக்கு மனம் நிறைந்த நன்றிகள். ஒத்துழைப்பும் உதவியும் நல்கிய மலர்க்குழுவினர்க்கும் குறுகிய காலத்திலும் மிகச்சிறப்பாகவும் அச்சிட்டுத்தந்த விஜய் பதிப்பகத்தார்க்கும் நெஞ்சார்ந்த நன்றிகள். இவ்வருட கலாசார விழா சிறப்பதற்கும், "மருதமுகிழ்" வெளிவரவும் உழைத்தவர்கள் யாவர்க்கும் கலாசார பேரவை சார்பாகவும், மலர்க்குழு சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**திரு.ஜெகதீசன் கோபிநாத்**
மேலதிக மாவட்டப் பதிவாளர்,
மாவட்டசெயலகம்,
முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் இராவணனும்

## குறுகத்தறித்த குறிப்புக்கள்

அருணா செல்லத்துரை

இலங்கை தமிழர்களின் தாயகம் என்பதுபற்றி பலவித கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. பெரும்பான்மை இனத்தினர் தமிழர்களுடைய தாயகம்பற்றி விதண்டாவாதமான கருத்துக்களை முன்வைக்கும்போது இலங்கைத் தமிழர் தயாகத்திற்கான ஆதாரங்களை முன்வைக்க வேண்டியது அவசியமாகின்றது. இதற்காக "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு மூத்தகுடி தமிழர்கள்" என்று கூறுவது ஆதாரமற்ற கூற்றாகும். இலங்கையில் வாழ்ந்த மக்கள் தமிழ் பேசினார்கள் என்பதை விட அவர்கள் சைவசமயிகள் என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

இலங்கையின் வரலாற்றைப் பொறுத்த வரையில் ஆதிகாலத்தில் வாழ்ந்த வேடர்கள் அடுத்தபடியாக இரட்சதர்கள் (அசுரர்), இயக்கர்கள் மற்றும் நாகர்கள் ஆகியோருடைய வரலாறுகளும், சமய வரலாறுகளும், வழிபாட்டு முறைகளுமே முக்கிய இடம்பிடிக்கின்றன. இலங்கையின் வடபகுதியில் இருக்கும் அடங்காப்பற்று, வன்னியின் மேற்கு மூலை, கிழக்கு மூலை, தெற்கு மூலை ஆகிய பிரதேசங்களில் இராவணனுடைய பரம்பரையினரான இரட்சதர்களும் சமகாலத்தில் இயக்கர்களும், நாகர்களும் வாழ்ந்தார்கள் என்று தமிழ் ஆங்கில குறிப்புகள் கூறுகின்றன. தற்போது பரவலாக பேசப்பட்டுவருவது நாகர்கள் வாழ்ந்த காலத்தைப் பற்றி மட்டுமேயாகும்.

பெருநிலப்பரப்புப்பற்றிய தற்கால தகவல்கள் கூட இந்த வரலாற்றிற்கு ஆதாரங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தில் கடந்த நூற்றாண்டுவரை வாழ்ந்த சிலர் சாதாரணமானவர்களைப் போலல்லாமல் அசுர பலம் கொண்ட வர்களாகவும், பெரிய தோற்றமுடை யவர்களாகவும் இருந்தார்கள். போக்கு வரத்து வசதிகள் குறைந்திருந்த காலத்தில் தூர இடங்களில் காடுகளுக்கிடையே தனித்தனியாக இருந்த வயல்வெளிகளுக்கு எப்படி நடந்து சென்றார்கள் என்பதை யதார்த்தமாக சிந்தித்தால் அதற்கான பதில் கிடைக்கும். இங்குள்ள கோயில்களை கட்டுவதற்கான பெரிய காட்டுமரங்களை தனிமனிதனாக தூக்கிக் கொண்டு வந்து நட்டதாகவும், காவு தடிகளில் ஒரு பக்கம் தடியால் அடித்து உயிரிழக்கச்செய்த தனிப்பன்றியையும், மறுமுனையில் ஐந்துக்கும் மேற்பட்ட பால் நிரப்பப்பட்ட பானைகளையும் கட்டிச் சுமந்து கொண்டு மைல்கணக்கில் நடந்து வந்தவர்கள் எமது முன்னோர்கள் என்று பெரியோர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

அடங்காப்பற்று - வன்னிப் பிரதேசத்தில் 1000 க்கும் மேற்பட்ட குளங்கள் உள்ளன. இந்தக் குளங்களில் சில பெரிய குளங்க ளாகும். பாரிய பாரம் தூக்கும் இயந்திரங்கள் இல்லாமல் பெரிய கருங்கற்களை தூக்கி எப்படி குளங்களுக்கான கட்டுக்களையும் அணைக்கட்டுக்களையும் கட்டியிருப் பார்கள்?. "இந்தப் பிரதேசத்தில் உள்ள நீர்ப்பாசன முறையை சரிவரப் பார்க்க வேண்டும் என்றால் வவுனியா ஈரப்பெரிய குளத்தில் உள்ள மலைக்குன்றின் மேல் ஏறி நின்று பார்க்க வேண்டும்" என ஆங்கில ஆய்வாளர் பார்க்கர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குளங்களையும் அணைக் கட்டுக்களையும் பூதங்களை அல்லது வேதாளங்களைக் கொண்டு கட்டுவித் தார்கள் என்று சொல்வாரும் உண்டு. அசுர பலத்தோடு எதற்கும் பயப்படாத வீரமும் நேர்மையும் கொண்டவர்களுக்கும் இந்தப் பிரதேசத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? அடங்காப்பற்று என்ற பெயர் எப்படி வந்தது?

திருமுறைகளில் இராவணன் : கிறிஸ்துவிற்கு முன்னர் 3084ம் வருடங்களில் இலங்கையின் வடபுலத்தில் மாந்தை, பாலாவி போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய மாதோட்டத்தில் அமைக் கப்பட்ட இலங்காபுர இராஜதானியில் இராவண மகாராசாவின் ஆட்சி இடம் பெற்றுள்ளது. சுமார் 3800 வருடங் களுக்குப் பிறகு அதாவது கிறிஸ்துவிற்குப் பின்னர் 07 ம் நூற்றாண்டு தொடக்கம் ஒன்பதாம் நூற்றாண்டுவரை தென்னிந் தியாவில் பாடப்பட்ட திருமுறைகளில் இராவணனுடைய சிவபக்தி போற்றிப் புகழப்பட்டுள்ளது.

திருக்கேதீச்சரப் பதிகம், திருக்கோணேச்சரப் பதிகம் போன்றவற்றைத் தவிர அநேக தேவாரங்களில் இராவணன் பற்றிப் பாடப்பட்டுள்ளது. அந்தத் தேவாரங்களில் எல்லாம் இராவணனுடைய சிவ பக்தியையும், கயிலாய மலையை பெயர்த் தெடுக்க அவர் எடுத்த முயற்சியையும், சிவபெருமான் அதனைத் தடுத்ததையும் குறிப்பிட்டுள்ளார்கள். இராவணனுடைய சாமகானத்தில் மனம் நெகிழ்ந்த சிவபெருமான் இராவணனை மன்னித்து அவருக்கு அருள் வழங்கியதையும் நாயன் மார்கள் பல இடங்களில் பாடிவைத் துள்ளார்கள். இராவணனுடைய சிரம் மீது சிவனுடைய திருப்பாதம் பட்டதினால் அவரை இராவணேஸ்வரன் எனவும், சிவனுடைய பாதாரவிந்தம் தங்களுடைய சிரத்தை தொடும் பாக்கியம் தமக்கு கிடைக்க வில்லையே என்று நாயன்மார்கள் ஏங்கித் தவிப்பதையும் திருமுறைகளில் நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது.

திருமுறைகளைப் பாடிய திருஞான சம்பந்தர் தென்னிந்தியாவிலுள்ள இராமேஸ் வரத்திலிருந்து தென்திசை நோக்கி இலங்கையிலுள்ள திருத்தலங்கள் பற்றியும் இராவணனைப்பற்றியும் பாடினார் என்பது வரலாறு.

இலங்கையை ஆட்சி செய்த ஒரு தலை சிறந்த சிவலிங்க பக்தனை, இறைதவறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவர் என்று தெரிந்தும், முழுமுதற் கடவுளான சிவபெருமானே மன்னித்ததாக நாயன்மார் கூறியுள்ளனர். அப்படிப்பட்ட சிவ பக்தன் இராவணனை இலங்கைத் தமிழர்கள் போற்றிப் புகழாமல் புறந்தள் ளியமை துரதிருஷ்டவசமானதாகும்.

இராவணனும் - இராமாயணமும் : இலங்கையின் வடபுலத்தில் மாதோட்ட இராஜதானியிலிருந்த நாகர் குலத்தில் திருமணம் செய்த இரட்சத (அசுரர்) குல அரசனான இராவணன், இராமாயணத்தின் முக்கிய கதாநாயக பாத்திரங்களில் ஒருவர். இராமாயண காவிய இலக்கியத்துள் ஒழிந்து இருக்கும் சக்கரவர்த்தி இராவணன் மற்றும் இயக்கர், நாகர் சம்பந்தப்பட்ட வரலாறு களையும் அவர்களுடைய வாழ்புலம் மற்றும் இராஜதானி எங்கிருந்தது என்பன எம்முன்னே எழுந்து நிற்கும் கேள்விக ளாகும். இராவணன் என்ற அரசன் இலங்கையை ஆட்சி செய்தான். அவன் மூன்று உலகங்களையும் அடக்கி ஆண்டான். வட இந்தியாவைச் சேர்ந்த ஆரியச் சக்கரவர்த்தி ஒருவர் இலங்கை உட்பட தென்னிந்தியாவையும் கைப்பற்ற எடுத்த முயற்சியே இராவண - இராம யுத்தம் என்பது காவிய வெளிப்படை.

இராம காதையை (இராமாயணம்) சமஸ்கிருத மொழியில் வட இந்தியாவைச் சேர்ந்த வான்மீகி என்ற புலவர் எழுதினார். வான்மீகியினுடைய இராமயணத்தில் மூன்று தலைமைப் பட்டணங்கள் தொடர்புபடுத்தப்பட்டன. அவை அயோத் தியாபுரி, கிஷ்கிந்தை, இலங்காபுரி ஆகியவையாகும். இராமாயண காவியத்தில் காமநோயே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. அயோத்தியிலே தசரதன் கைகேயி மீது கொண்ட காம உணர்வின் காரணமாக பல தீய விளைவுகள் ஏற்பட்டன. கிஷ்கிந்தையில் காம நோய்க்கு உள்ளான வாலிக்குப் பயந்து சுக்ரீவன் மறைந்து வாழ்ந்தான். வாலி வதம் செய்யப்பட்டு காமநோயின் கொடுமை குறைக்கப்பட்டது.

இலங்காபுரியில் இராவணன் சீதை மீது கொண்ட மோகத்தால் காமநோய் அதிகரித்திருந்தது. இவற்றை அழித்து மனுதர்மத்தை பரப்புவதே இராமாவ தாரத்தின் நோக்கம் என்றும், அதுவே வான்மீகி இராமாயணத்தின் கருப்பொருளா கவும் இருந்தது என்றும் வன்மீகி இராமாயண ஆய்வாளர்கள் தெரிவித் துள்ளனர். வான்மீகி இராமாயணத்தில் இலங்கையும் இராவணனும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை என்ற மாறுபட்ட ஆய்வுக் கருத்தும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய இலக்கிய உலகில் இதுவரை 20க்கும் மேற்பட்ட மொழிகளில் இராம காதை மொழிபெயர்த்து எழுதப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய மாநிலங்களில் பேசப்படும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட இராம காதையில் பலவித விபரங்கள் சேர்க்கப்பட்டும், விலக்கப்பட்டும் இருப்பதாகவும் இராமாயண ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வான்மீகி இராமயணத்திலே மகா விஷ்ணுவே முதன்மைப்படுத்தப் பட்டுள்ளார். சாதாரணமானவர்கள் கூட பாவச் செயல்களில் இருந்து விடுபட்டு ரிஷிகளாக மாறி தேவர்களாக மாறலாம் என்ற மனுதர்மமே மேலோங்கி நிற்கின்றது. யாரும் ரிஷியாக மாறலாம் என்பதற்கு களவெடுத்தலையே தனது தொழிலாகக் கொண்டிருந்த வான்மீகி ரிஷியாக மாறி, மனுதர்மத்தை போதிக்கும் இராமயணத்தை எழுதியது நல்ல உதாரண மாகும். வான்மீகியின் இராமயணத்திலே சிவன் முதன்மைப்படுத்தப்படவில்லை.

தமிழ் கவித்திறமை கொண்டவரும், வைஷ்ணவ மதத்தை கடைப்பிடித்த வருமான கம்பர் இராமகாதையாக தமிழில் எழுதினார். தென்னிந்தியாவில் கம்பர் வாழ்ந்த காரணத்தினால் விஷ்ணுவையும், இந்துசமயக் கடவுளாகிய சிவனையும் உட்புகுத்தி, சமப்படுத்தி இராமயணத்தை மாற்றி அமைத்தார். கம்பர் தனது கவித்திறமையால் இராமயணத்தை மொழி பெயர்த்தார் என்று சொல்வதை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாட்டிற்குப் பொருத்தமான, ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் புதிதாக இராம காதையை எழுதியபோது, விஷ்ணுவையும் சிவனையும் பிரமனையும் மக்கள் ஒற்றுமையாக வழிபடவேண்டும் என்ற நோக்கை முன்வைத்து எழுதியமை புலப்படுகிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில் இராமர், இராவணனைத் தோற்கடித்து சீதையை சிறை மீட்டதும் இராமருக்குச் சார்பாக நின்றவரும் வைணவ சமயத்தை தழுவியவருமான இராவணனுடைய தம்பி விபீஷணரை இலங்கைக்கு அதிபதி யாக்கினார். கிஷ்கிந்தையில் சுக்ரீ வனையும், இலங்காபுரத்தில் விபீஷ ணரையும் அரசர்களாக்கி இராமர் வடக்கு நாடு திரும்பியுள்ளார். இவர்கள் இருவரும் இராம பக்தர்களாக இருந்து இராமருக்கு அடங்கிய அரசர்களாக இருந்துள்ளனர். இராமர் ஆட்சியின் கீழ் இலங்கை வந்ததும், விபீஷணரை அரசராக்கியதும் இராமாய ணத்தில் இலங்கை சம்பந்தப்பட்ட வரலாறு முடிந்து விடுகிறது.

எந்தக் காவியத்தைப் படைப்பதாக இருந்தாலும் அதற்கான உண்மைச் சம்பவங்கள் சில அடிப்படையாக இருக்கும். அதனை காவியமாக்கும்போது ஒவ்வொரு இலக்கியப் படைப்பாளியும் தனது புலமைக் கேற்ப கூட்டிக் குறைத்து கருத்துக்களை உட்புகுத்துவது வழக்கம். இதனைத் தங்களுக்கிருக்கும் உரிமை என்று இலக்கிய படைப்பாளிகள் வாதிடுவார்கள். அதற்கு கம்பர் விதிவிலக்கல்ல. இந்தக் காவியத் திற்குள் மறைந்திருக்கும் இராவண வரலாற்றைத் தேடுவது மிகவும் சிரமமான காரியமாகும். ஏனெனில் இந்த இலக்கியங் களை சமய ரீதியிலும், இலக்கிய ரீதியிலும், வரலாறாகவும் நோக்குபவர்கள் இருப்பார் கள். வரலாற்று ரீதியாக முன்வைக்கப்படும் கருத்துக்களை ஏனையவர்கள் தமக்கு ஏற்ற விதத்தில் விமர்சிப்பது வழக்கமாகும்.

எந்தக் காவியமாக இருந்தாலும் அவற்றின் உயிரோட்டமாக ஒரு வரலாறு இருக்கும். தென்னிந்தியாவோடு ஒன்றாக இருந்த இலங்கை கடல்கோள் காரணமாக பிரிந்தது. "இந்து சமுத்திரத்தின் ஊடாக இடம் பெற்ற கப்பல் வாணிபத்திற்கு, அதிஷ்டவசமாக இலங்கையின் மேற்குக் கடற்கரையில் இயற்கையாக அமைந்திருந்த "மாந்தை" துறைமுகத்தை திருத்தி முக்கிய தளமாக உருவாக்கியதால், வட இந்தியாவை ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்தி ஒருவர் இலங்கையை ஆக்கிரமித்த வரலாறே இராமாயண காவியமாக எழுதப்பட் டுள்ளது" என்ற கூற்று முதன்மை பெறுகிறது.

அடங்காப்பற்றும் இராவணனும் : தென்னிந்தியாவிலிருந்து இலங்கை சிறிய நீரிணையால் பிரிக்கப்பட்டிருந்தது. ஆனால் பிரிக்கப்பட்ட இலங்கையில் இருந்து கொண்டு தென்னிந்தியாவின் சில பகுதிகளையும் தனது ஆட்சியின் கீழ் இராவணன் வைத்திருந்தான் என்பது இராமாயண காவியத்தின் மூலம் நிரூபணமாகிறது. இராம காவியத்தை நாம் வரலாற்று ரீதியாக உற்று நோக்கினால் ஒரு "வட இந்திய ஆரியர்களின் படையெடுப் பினால் முதன் முதலில் இலங்கையும் தென்னிந்தியாவும் ஆக்கிரமிக்கப்பட்டன" என்று கருதுவதற்கு வலுவான பல காரணிகள் இருக்கின்றன. இராவணன் பற்றிய வரலாற்றுக்கான ஆதாரங்களைத் தேடியபோது இலங்கையின் வட பகுதியில் உள்ள அடங்காப்பற்றுப் பிரதேசத்தில் இராவணன் பரம்பரையினர் வாழ்ந் ததிற்கான ஆதாரங்களும் வெளிவரு கின்றன.

ஆரியர்களும் திராவிடர்களும்: மனித குலத்தில் இரண்டு வகையான நிறமுடை யவர்கள் வாழ்கிறார்கள். இதற்கு இயற்கையின் அமைப்பும் அந்தந்தப் பிரதேசத்தின் சுவாத்தியமும் காரணமாக அமைந்து விடுகின்றன. புவியியல் ரீதியாக மத்திய தரைக்கோட்டுக்கு கீழ்ப்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர்கள் அதிக வெப்பநிலையின் காரணமாக நிறம் குறைந்தவர்களாகவும், மேல் பகுதியில் இருந்தவர்கள் வெள்ளை நிறமாகவும் இருக்கின்றனர் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் இரண்டு நிறத்தையுடைய மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். வட இந்தியாவில் வாழும் வெள்ளை நிறத்தையுடையவர்கள் ஆரியர்கள். இவர்கள் தங்களை ரிஷிகளாக்கி தர்மத்தின் பிரதிநிதிகளாக்கி தம்மை "தேவகுலம்" என்று அழைத்துக் கொண்டனர். தென்னிந்தியாவில் இருந்தவர்கள் நிறம் குறைந்தவர்கள். இவர்கள் இயக்கர்கள் - நாகர்கள் என்றும் (திராவிடர்) அழைக்கப் பட்டனர். தென்னிந்தியாவில் இருந்த கறுப்பு நிறத்தைக் கொண்ட இயக்கர்கள், (திராவிடர்) மற்றும் நாகர்கள் வட இந்தியாவில் இருந்த வெள்ளை நிறத்தைக் கொண்ட ஆரியர்களுக்கு எதிரானவர்களாக இருந்தார்கள் என்பது நிதர்சனம்.

பெருகி வந்த வட இந்திய சமூகத்தினர் தம்மை உயர்த்திக் கொள்வதற்காக சமய ரீதியாக பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பல இலக்கியங்களையும், மந்திரங்களையும் இயற்றினர். ஆரியர்கள் தமக்குரிய முழுமுதற் கடவுளாக மகா விஷ்ணுவை ஏற்றுக் கொண்டு அவரை மேம்படுத்துவதற்காக பல காவியங்களை இயற்றினர். அவ்வாறு வடஇந்திய மொழியில் எழுதப்பட்ட காவியங்களுள் இராமகாதையையும் மகாபாரதத்தையும் மனுதர்ம காவியங்களாக தென்பிராந்திய மக்கள் ஏற்றுக் கொள்ளத் தொடங்கினர். இதனால் விஷ்ணு வழிபாடு பெருகத் தொடங்கியது.

இதனைத் தடுப்பதற்கு நாயன்மார்கள் பல திருமுறைகளைப் பாடினர். "தென்னிந் தியாவிலும் இலங்கையிலும் பிரசித்தி பெற்றிருந்த சிவலிங்க வழிபாட்டினை மாற்றி, விஷ்ணு வழிபாட்டினை மேம்படுத்தும் நோக்கத்தோடு வட இந்திய காவியங்களான இராமாயணமும் மகாபாரதமும் எழுதப்பட்டுள்ளன" என்று ஆய்வாளர்கள் கூறும் கருத்தை நாம் புறம் தள்ளி விட முடியாது. அக்காலத்தில் சைவம், சமணம், வைஷ்ணவம், போன்ற சமயங்களுக்கிடையே பெரிய போட்டிகள் நிகழ்ந்திருப்பதையும் எமது திருமுறைக ளிலுள்ள தேவாரங்கள் வெளிப்படுத் துகின்றன.

கடல்கோள் காரணமாக இலங்கையும் இந்தியாவும் இரண்டாகப் பிரிந்திருந்தன. 12ம் நூற்றாண்டில் இராமகாதையை கம்பர் தமிழில் எழுதிய காலத்தில், இலங்கை தனிநாடாக இந்தியாவில் இருந்து பிரிந்திருந்தது. சிவலிங்க வழிபாடு, விஷ்ணு வழிபாடு ஆகியவற்றிற்கான போட்டியும் குறைந்து இருந்தது என்பதற்கு ஆதாரங்கள் பல இருக்கின்றன.

இலங்கை தனிநாடாகப் பிரிந்திருந்த காரணத்தினாலும், இலங்கையில் இருந்த இயக்கர் நாகர்களின் அரசனான, இரட்சதர் குலத்தைச் சேர்ந்த இராவணனை, துஷ்டன், பிறன்மனையான கவர்பவன் போன்ற கருத்துக்களை மேலோங்கிய கருத்துக் களாக முன்வைத்து கம்பர் இராமகா தையை மாற்றியமைத்தார் என்று கூறுவோருமுண்டு. இராம காதையயை எழுதிய கம்பரும் இலங்கைக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அவருக்கு இலங்கையின் புவியியல் அமைப்பு தெரிந்திருக்க நியாயமில்லை என்று ஆங்கில ஆய்வாளர்கள் கூறுவதை நாம் ஏற்றுக் கொள்வதில் எந்தவித தவறுமில்லை.

ஏழாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட திருமுறைகள் மற்றும், 12ம் நூற்றாண்டில் அரங்கேற்றப்பட்ட இராம காதை (இராமாயணம்) ஆகியவற்றின் மூலம் இலங்கை தனிநாடகப் பிரிந்திருந்தது என்பது தெளிவாகிறது.

இராவணனுடைய வரலாறும் அவருடைய பரம்பரையினர் பற்றியும் இராமயணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் கூற்றுக்களுக்கு மேலதிகமாக முழுமையாக தேடப்பட்டாலும் அதற்கு முழுமையான அந்தஸ்து இன்னமும் கிடைக்கவில்லை என்று கூறலாம். இராவணன் சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமானை இலிங்க வடிவில் வணங்கிய சிறந்த பக்தன்.

சிவனையும், விஷ்ணுவையும் வணங்குபவர்களுக்கு இடையில் ஏற்பட்ட போட்டியின் வெளிப்பாடே திருமுறைகளும், இராமாயணமும் உருவாவதற்கான காரணங்களாகும். நல்ல தமிழ் புலமை கொண்ட கம்பருடைய பாடல்கள் தமிழ் ஆர்வலர்களை, பல வரலாறுகளை மறக்கச் செய்துள்ளது. இராவணனுடைய தலைசிறந்த சிவலிங்க பக்தி, போர் புரிவதில் இருந்த வீரம் மற்றும் தலைசிறந்த சங்கீத ஞானம் மற்றும் ஏனைய திறமைகள், காவிய இலக்கிய பரப்புரையாளர்களால் பின் தள்ளப்பட்டு வருகின்றன. கதாசிரியர் பாத்திரப்படைப்பிற்கு வலு சேர்ப்பதற்காக இராவணனை காமநோய் பலவீனம் கொண்டவனாக மேம்படுத்தி காவியத்தில் காட்டியுள்ளமையே இதற்கான காரணமாக முன்னிற்கிறது.

உருவ அமைப்புகள் : இராவணன் - இராமன் ஆகியோரைக் கதாநாயகர்களாகக் கொண்ட இராமாயண காவியத்திலே தாடகை, சூர்ப்பனகை, கும்பகர்ணன் போன்றவர்களையும் மற்றும் பல கதாபாத்திரங்களையும் விகார உருவமுடைய வர்களாக கம்பர் வர்ணித்திருப்பது கவனிக்கத்தக்கது. இவர்கள் அனைவரும் இராவணனைச் சார்ந்தவர்கள். இராவணனுடைய துர்நடத்தைக்கு ஏதுகோலாக இருந்தவர்கள் என்ற காரணத்தினால் கதாசிரியர் இவ்வாறான பாத்திரங்களை விகாரமாகப் படைத்திருக்கலாம்.

சிங்கள மொழி வரலாறான மகாவம்சம் போன்ற நூல்கள் "யக்சய" என்ற பேய்கள் வாழ்ந்ததாகவும் அவர்களுடைய உருவம் விகாரமாக இருந்ததாகவும் தெரிவிக்கின்றது. வேடர்கள், "யக்சய" "பேய்கள்" என்ற உருவங்களை வணங்கியதாக கூறப்படுகிறது. இதனையே பிற்காலத்தில் அசுரர் குலத்தவர்களென சில தமிழ் இலக்கியங்களும், ஆங்கில நூல்களும் மொழிபெயர்த்திருப்பது கவலைக்குரிய விடயமாகும். "அசுர குலத்தவர்கள், பலம்பொருந்திய பெரிய உருவத்தையுடையவர்களே ஒழிய பேய்கள் போன்றவர்கள் அல்ல."

இராவண சக்கரவர்த்திக்கான அடையாளங்கள் : இலங்கையின் வடபுலத்தில் திருகோணமலையிலுள்ள கோணேசர் ஆலயம், அங்குள்ள இராவணன் வெட்டு, கன்னியா என்ற இடத்தில் உள்ள வெந்நீரூற்றுக் கிணறுகள், மாதோட்டம், மாந்தை, பலாவியிலுள்ள திருக்கேதீஸ்வர ஆலயம், போன்றவை இராமாயண காவிய நாயகனான இராவணன் வாழ்ந்தமைக்கு ஆதாரமாக இருக்கின்றன.

அடங்காப்பற்றுப் (வன்னி) பிரதேசத்தில் கும்பகனன் மலை, குருந்தனூர் மலை என்பனவும் மேற்கு மூலை, கிழக்கு மூலை மற்றும் அடங்காப்பற்று என்ற இடப்பெயர்களும், மன்னார்ப் பகுதியில் மாளிகைத்திடல், வங்காலை, பாப்பாமோட்டை, கோயில் குளம் போன்றவையும் இருக்கின்றன. இளவாலையில் "மாரீசன்கூடல்" என்ற காரணப் பெயரைப் போன்று இராவணனுக்குரிய அடையாளப் பெயர்கள் பல வட பிரதேசத்தில் இருக்கின்றன. இவற்றுள் சில இராவணனுடைய காலத்திற்குப் பின்னர் இராம கதையின் ஞாபகார்த்தமாக வைக்கப்பட்ட பெயர்களாகும்.

சீதை சிறைவைக்கப்பட்டதாகக் கூறப்படும் சீதா எலிய, மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கேணி, இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் உள்ள இராமர் அணை, இராவண-இராம யுத்தம் முடிவடைந்த பின்னர் தென்னிந்தியாவில் இராமர் வணங்கியதாக கூறப்படும் இராமேஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் போன்றவை இராமருக்கான சில வரலாற்றாதாரங்களாக இருக்கின்றன.

இராவணனுக்குப் பின்னர் இரட்சதர்கள் : இராவண - இராம யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கையில் வேடர்கள், அசுரர்கள் என்று குறிப்பிடப்படும் இரட்சதர்கள், இயக்கர்கள் மற்றும் நாகர்கள், வித்தியாதரர்கள், தேவர்குலத்தவர்கள் வாழ்ந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வரலாற்றுக்கு முந்திய காலமான இராவணன் காலத்தில் மாதோட்டத்தில் இலங்காபுரம் இராஜதானி இருந்தது. இராவண - இராம யுத்தத்தின் பின்னர் இலங்காபுரத்தில் விபீஷணனுடைய பரம்பரையினர் நீண்ட காலம் ஆட்சி செய்தனர். அவர்கள் காலத்தில் பாணன் கமம் இராஜதானியை உள்ளடக்கியதாக யாழ்ப்பாண இராஜதானி உருவாக்கப்பட்டது.

இராவணன் தோற்கடிக்கப்பட்ட பின்னர், இராவணனுடைய ஆதரவாளர்களாக இருந்த இரட்சதர்கள், இயக்கர்கள் தற்போது வன்னி என்று அழைக்கப்படும் பிரதேசத்தில் இருக்கும் மேற்குமூலை கிழக்குமூலைப் பிரதேசத்தில் இருந்துள்ளனர். இவர்கள் இலங்காபுரம் இராஜதானிக்கும் யாழ்ப்பாண இராஜதானிக்கும் அடங்காத தனிப்பிரி வினராக இருந்தனர் என்று யாழ்ப்பாண வைபவமாலையில் உள்ள யாழ்ப்பாண சரித்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

மாதோட்டத்திலிருந்த இலங்காபுரம் இராஜ தானிக்கும், வடக்கேயிருந்த யாழ்ப்பாண இராஜதானிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இருந்தவர்களை அடக்குவதற்கு பல போராட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற் றுள்ளன. அநேகமான போராட்டங்கள் தோல்வியே கண்டுள்ளன. இரண்டு இராஜதானிகளால் அடக்கமுடியாதவர்கள் வாழ்ந்த பிரதேசம் ஒரு சுதந்திரமான தனிப்பிரிவாக இருந்துள்ளது. இதனால் இந்தப் பிரதேசம் "அடங்காப்பற்று" என்று அழைக்கப்பட்டுள்ளது.

துரதிருஷ்டவசமாக பின்வந்த தமிழ் வரலாற்றாசிரியர்கள் இலங்காபுரம் இராஜதானி என்றிருந்ததை அனுராதபுரம் இராஜதானியென்று மொழிபெயர்த்த காரணத்தால் வடபுலத் தமிழர்களின் வரலாற்றில் பலவித குழப்பங்கள் ஏற்பட்டதோடு அவர்களின் வாழ்புலத்தை நிறுவுவதில் பல இழப்புக்களை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளமை கண்கூடு.

தற்போது சிவ வழிபாடும், விஷ்ணு வழிபாடும் ஒன்றாகி போட்டி போட்டுக் கொண்டு இந்தியாவிலும், இலங்கையிலும் பரவி வருகின்றது. இராமயணத்தில் வரும் கதாபாத்திரமான அவதார புருஷராகிய இராமரை வழிபடுவதும், இராமருக்கு உதவியாய் இருந்த இராம பக்த ஹனுமானை ஒரு அவதாரமாக்கி வழிபடும் முறையும் இந்தியா, இலங்கை உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் வேகமாகப் பரவி வருவதினால், மீண்டும் ஒரு மனுதர்மம் என்று மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இராம ராஜ்ஜியம் உருவாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் நம்பிக்கையாக வளர்ந்து வருகின்றது.

இரட்சத குல அரசனும், நாகர் குலத்தில் திருமணம் செய்து இலங்காபுரத்தை தலை நகராகக் கொண்டவரும், முதன் முதலில் இலங்கையில் ஆரியர்களின் ஆக்கிர மிப்பிற்கு எதிராக போராட்டம் நடத்தியவரும், ஈழநாட்டின் தேசிய வீரனுமான இராவணனுடைய வரலாற்றையும் பெரு மைகளையும் மேலும் வலுவூட்டுவதற்கு தேவையான ஆதாரங்களைத் தேட வேண்டியது அவசியமாகின்றது.

இலங்கையில் புராதன தமிழர்களுடைய பூர்வீக நிலம் எது என்பதை நிறுவ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கு இராவணன்பற்றி நாயன்மார் பாடிய திருமுறைகளையும், இராமாயண காவியத்தையும், இதுவரை வடபுலத்தில் செய்யப்பட்ட புதைபொருள் ஆய்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடுகள், ஆய்வாளர்கள் பதிவு செய்த ஆய்வுக் கருத்துக்கள், கிழக்கு மூலை, மேற்கு மூலை தட்டயமலை மற்றும் மாதோட்டம் போன்ற இடங்களில் இருக்கும் தமிழர்களின் தாயக ஆதாரத்திற்கான அடையாளங்கள் ஆகியன தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக்கப்பட வேண்டும்.

அடங்காப்பற்று - வன்னியில் இலிங்க வழிபாட்டுத் தலங்கள் : இலங்கையில் இருந்த சமயங்களுள் சைவம் ஆதியானது என்பது குறிப்புகள் மூலம் தெரிய வந்துள்ளது. தென்னிந்தியாவில் சைவம் செழித்தோங்குவதற்கு முன்னரேயே இலங்கையில் மிகவும் பிரபலமாகியிருந்ததை திருமுறைகள் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

வடஇலங்கையில் இராவணேஸ்வரனுடைய வரலாற்றுடன் தொடர்புடையனவையாக உள்ள வழிபாட்டுத் தலங்களாக இருப்பவை திருக்கோணேஸ்வரமும், திருக்கேதீச்சரமுமாகும். இந்த இரண்டு தலங்களோடு, பாணன்கமம் (பனங்காமம்), இரணையிலுப்பைக்குளம், வவுனிக்குளம், வெளவாலைக்கேணி, கப்பச்சி, சிப்பிமேடு, ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, தண்ணியூற்று -குமாரபுரம், சம்மளங்குளம், எல்லப்பர் மருதங்குளம், கல்வீரங்குளம் ஆகிய இடங்களில் உள்ள சிவலிங்கதலங்களும், கனகராயன்குளம், பாலமோட்டை போன்ற இடங்களில் காணப்படும் சிதைக்கப்பட்ட ஆவுடையார்களும் ஆதாரங்களாக இருக்கின்றன. இவற்றின் மூலம் சிவலிங்க வழிபாடு அடங்காப்பற்றிலும் அதனைச் சுற்றியிருந்த பெருநிலப்பரப்பிலும் பரவலாக காணப்பட்டுள்ளமை இராவணேஸ் வரனுடைய வரலாற்றுடன் அடங்காப்பறறு-வன்னிக்கும் உள்ள தொடர்பை வலுப்படுத் துகின்றன.

O O O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொன்மையைத் தேடும் பயணம்

திரு.ஜெகதீசன் கோபிநாத்

**அரியாமடு காஞ்சூரமோட்டைஆகிய எல்லையூர்களின் கதை..**



வவுனியா வடக்குப் பிரதேசம் வன்னி நிலப்பரப்பின் வரலாற்றுப் பதிவுகளில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட நீட்சியுடைய தொன்மையைக் கொண்டிருக்கிறது. இங்கு காணப்படும் பெருங்கற்பண்பாட்டு தொல்லியல் சிதைவுகளும், ஆதிபிராமிச்சாசனங்களும் இதனை உறுதிசெய்கிறது. நெடுங்கேணி ஐயனார் கோயிலின் பின்புறத்தில் காணப்படும் பிராமி எழுத்துக்களைக் கொண்ட கல்வெட்டில் நாகர்களைப் பற்றிய செய்தியும் தமிழின் சிறப்பெழுத்துக்களின் ஒன்றான "ழ" கரமும் காணப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது. இவற்றைப் பற்றி வரலாற்று பேராசிரியர் சி.பத்மநாதன், வரலாற்றாய்வாளர் அருணா செல்லத்துரை ஆகியோர் ஆய்வுகளை மேற்கொண் டுள்ளனர். இவ்வாறாக தொன்மையான வவுனியா வடக்குப் பிரதேசத்தின் எல்லையூர்களின் வரலாற்றை அறியும் முயற்சியாய் அமைவதுதான் தொன்மை யைத் தேடும் பயணமாகும். எங்கள் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணம் அரியாமடு, காஞ்சூரமோட்டை ஆகிய ஊர்களை நோக்கியதாய் அமைந்தது. பிரதேச செயலாளர், கலாசார உத்தி யோகத்தர், கிராம சேவையாளர், ஊர்ப் பெரியவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய நாம் புராதனமாக மக்கள் வாழ்ந்த இடங்களையும், கோயில் சிதைவுகளையும், குளங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு மக்கள் கூறும் கதைகளையும் கேட்டறிந்து கொண்டோம்.

**அரியாமடு**

வவுனியா வடக்கின் நெடுங்கேணி நகரிலிருந்து எட்டு கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருக்கும் ஊரே அரியாமடு ஆகும். இது கற்குளம் கிராமசேவையாளர் பிரிவில் அடங்குகிறது. நெடுங்கேணியிலிருந்து போகும் வீதியில் கற்குளம் சந்தியிலிருந்து வலதுபுறமாக செல்லும் மண்பாதையூடாக சென்று இவ்வூரை அடையலாம். பெரிதும் காடுகளையும் நடுத்தர அளவினதான குளமொன்றையும் வயல்களையும் கொண்டாக அரியாமடு அமைந்துள்ளது. தற்பொழுது 25 குடும்பங்கள் மட்டுமே இங்கு வசித்துவருகிறார்கள். ஆங்கிலேயர்களின் தரவுகளின்படி மேல்பற்றுக்கிழக்கு எனும் பிரிவில் அமைந்த இருபத்தியாறு கிராமங்களில் வளமான பிரதேசமாகவும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வவுனியா மாவட்டத்திலேயே (கிழக்கு மூலைதெற்கு, கிழக்கு மூலைவடக்கு, நடுச்செட்டிக்குளம், சின்னச்செட்டிக்குளம், சின்னச்செட்டிக்குளம் கிழக்கு, சின்னச் செட்டிக்குளம் மேற்கு, மேற்கு மூலை, பனங்காமம், உடையாவூர், மேல்பற்றுத் தெற்கு, மேல்பற்றுக்கிழக்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியது) சனத்தொகை அதிகமாக இருந்த கிராமமாகவும் விளங்கியதாக குறிப்பிடப்படுவது சிறப்பம்சமாகும். இதன்படி அரியாமடுவின் சனத்தொகை 1817 இல் 89 ஆகவும், 1839 இல் 62 ஆகவும், 1881 இல் 65 ஆகவும், 1891 இல் 78 ஆகவும் காணப்பட்டுள்ளது.

அரியாமடு குளத்திற்கு அருகே பல நூற்றாண்டுகால வரலாறு கொண்ட இந்துக்கோயில் ஒன்றின் சிதைவுகள் காணப்படுகின்றன. இங்கு, பரம்பரை பரம்பரையாக கிராமிய வழிபாடுகள் நடைபெற்றதாகவும் போர்ச்சூழல் காரண மாக இதனைக் கைவிட்டதாகவும் இங்கு வசிக்கும் மூத்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியின் புகழ்பூத்த பெருங்கலைஞன் அரியான் பொய்கை என அறியப்பட்ட செல்லத்துரை பிறந்ததும் இந்த அரியாமடுயில் தான் என்பது குறிப்பிடத்தக்கது. 1923 ஆம் ஆண்டு 12ஆம் மாதம் 25 ஆம் திகதி கைலாயர் வள்ளியம்மை தம்பதிகளிற்கு ஒரேமகனாகத் தோன்றிய அரியான் பொய்கை செல்லத்துரைப் புலவர் தனது கல்வியை முள்ளியவளை இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் பயின்றுதேறி அஞ்சற் சேவையாளனாக பணியாற்றி வந்ததுடன் கலை, இலக்கியங்களிலும் பங்களிப்பினை நல்கினார். இளவயது முதல் கதாப்பிரசங்கம், புராணபடனம், சொற் பொழிவு, நாடகம், செய்யுள் இயற்றுதல் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டு சிறந்து விளங்கியவர்.



அத்துடன் பலகட்டுரைகளும், வில்லிசைக் கதைகளும், பக்தி இசைப்பாடல்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளன. இவருடைய வன்னித்தமிழச்சிகளின் வீரம் பேசுகின்ற "வேளம்படுத்தவீராங்கனை" என்னும் வரலாற்று நாட்டுக்கூத்து மிகவும் புகழ்பெற்றது. முள்ளியவளை வேம்படி நாகபுஷணியம்மன் பாமாலையை எழுதியதோடு ஆலயங்களிற்கான திருவூஞ் சல் பதிகங்களையும் யாத்து உதவியுள்ளார். சைவநெறியாளராக வாழ்ந்து ஆலய சமூகப்பணிகளில் பங்காளராகவும் உழைத்தவருமாவார். கவிசேகரன், கலாபுஷணம், தமிழ்மணி, பௌரணக் கலாநிதி உள்ளிட்ட பலபட்டங்களைப் பெற்ற அரியான் பொய்கை பிறந்த தொன்மையூர் என்ற வகையில் அரியாமடு பெருமை பெறுகிறது.

## முத்துச்சித்தர்

தியானத்தில் மிகுந்த ஆற்றல் பெற்றசித்தர் ஒருவர் பற்றி இவ்வூர் மக்கள் குறிப்பிடும் தகவல்கள் மிகுந்த ஆச்சரியத்தைத் தருகின்றன. "முத்துச்சித்தர்" என்று அழைக்கப்பட்ட ஒருவர் அரியாமடு பிரதேசத்தில் வசித்து வந்ததாகவும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தோடு இவர் தொடர்புகளைக் கொண்டிருந்ததாகவும் ஒட்டுசுட்டான் சிவன் கோயிலில் இவர் பல அற்புதங்களை நிகழ்த்தியதாகவும் குறிப்பிடுகின்றனர். பறங்கியர் எனப்படும் ஒல்லாந்தர்களின் காலத்திலேயே இவர் வாழ்ந்ததாகவும் அரியாமடுவில் தன் தியான ஆற்றலால் பறங்கியருக்கு உயரமான தென்னை மரத்தை வளைத்து இளநீர் பிடுங்கி கொடுத்ததாகவும் செவிவழி. கதை மரபுகள் இவ்வூர் மக்களிடையே வழக்கத்தில் உள்ளன. இவ்வாறான பல சிறப்புக்களையுடைய தொன்மைமிக்க கிராமமாக அரியாமடு அமைந்துள்ளது.

## காஞ்சூரமோட்டை

நெடுங்கேணியிலிருந்து செல்லும் வீதியில் மருதோடை சந்தியிலிருந்து இடப்பக்கமாக செல்லும் பாதையில் இருக்கும் தொன்மையூர்தான் காஞ்சூரமோட்டை யாகும். மருதோடை கிராமசேவையாளர் பிரிவில் அடங்கும் இக்கிராமத்தில் தற்போது 20 குடும்பங்கள் வரையில் வசித்து வருகிறார்கள். பிரித்தானியரின் தகவல் களின்படி வவுனியா வடக்கில் அதிக சனத் தொகை கொண்ட ஊர்களில் ஒன்றாக இது அமைந்திருந்தது. இதன்படி 1817 ஆம் ஆண்டில் சனத்தொகை 49 ஆக காணப்பட்டுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இங்கு காணப்படும் புராதனமான இரண்டு கோயில்கள் இந்த வருடம் புனரமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெறுகின்றன. இரண்டும் காஞ்சூரமோட்டை குளத்திற்கு அருகிலேயே அமைந்துள்ளது. அதிலொன்றான பிள்ளையார் ஆலயத்தில் மிகவும் தொன்மையான வரலாற்று சிலைதவொன்றை வைத்து வழிபடுவதனை காணமுடிகின்றது. அதற்கு அருகிலேயே பழமையான முருகன் ஆலயமும் அமைந்துள்ளது. இதனைச் சூழ புராதனமக்கள் குடியிருப்பிற்கான எச்சங்கள் காணப்படுகின்றன. முக்கியமாக செங்கற்களை இரண்டு நிரைகளாக அடுக்கி அமைக்கப்பட்ட புராதன கிணறொன்றும் காணப்படுகின்றது. குளக்கட்டின் அருகிலும் பல இடங்களில் தொல்லியல் சிதைவுகள் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வவுனியா வடக்குப் பிரதேசத்தில் தமிழர்களின் இருப்பு என்பது இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்டது என்பதற்கு இங்கு காணப்படும் பிராமிக்கல் வெட்டுக்கள், புராதனமக்கள் குடியிருப்பு எச்சங்கள் என்பன தக்கசான்றாக அமைந்துள்ளன. அதுபோலவே அரியாமடு, காஞ்சூரமோட்டை ஆகிய தொன்மையூர்களின் வரலாறும் தமிழர் வாழ்வியலில் மிகுந்த முக்கியம் வாய்ந்தது. இவை பற்றிய விரிவான ஆய்வுகளுக்கும், சிந்தனைக்கும் இப்பதிவு தூண்டு கோலாக அமையுமென்பதில் ஐயமில்லை.

பயணங்கள் தொடரும்.

**அட்டைப்படக் குறிப்பு:**

நெடுங்கேணி ஐயனார் ஆலயத்திற்கு அருகில் காணப்படும் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டும், தொல்லியல் எச்சமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த தொடர்பாடலே வெற்றியின் இரகசியம்

**திரு.க.பரந்தாமன்**
பிரதேச செயலாளர், வவுனியா வடக்கு.

ஒருவருடைய மனித வாழ்வின் வெற்றிக்கு தொடர்பாடல் மிகவும் அவசியமாகின்றது. தொடர்பாடல் என்பது கருவறையில் இருக்கும் பிள்ளைக்கும் தாய்க்கும் இடையில் ஆரம்பமாகின்றது என கூறுவது பொருத்தமானதாக இருக்கும் என நினைக்கிறேன். கருவுற்று இருக்கும் காலத்தில் தாய் நல்ல சிந்தனைகளை வளர்த்து கொள்வதோடு கோபம், பொறாமை, காழ்ப்புணர்சி போன்றவற்றிக்கு இடம் கொடுக்காமல், சந்தோசமான சூழலில் இருக்கவேண்டும். வன்முறைசார்ந்த திரைப்படங்கள், தொடர்நாடகங்கள் என்பவற்றை பார்ப்பதை தவிர்க்க வேண்டும். அதேநேரம் நல்ல அறிவுசார்ந்த நூல்களை வாசிக்க வேண்டும். இதன்மூலம் கருவிலிருக்கும் குழந்தை ஆரோக்கியமா னதாகவும் நல்ல சிந்தனை ஆக்கத்திறன் உடைய குழந்தையாகவும் பிறப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

01. தாய்க்கும் பிள்ளைக்குமான தொடர்பாடல்
02. கணவன் மனைவி குடும்ப அங்கத்தவர்களிடையேயான தொடர்பாடல்
03. சமூக அங்கத்தவர்களிடையேயான தொடர்பாடல்
04. ஆசிரியர் மாணவரிடையேயான தொடர்பாடல்
05. அதிபர் ஆசிரியர் ஆகியோர்களிடையேயான தொடர்பாடல்
06. சமூக அங்கத்தவர்களுக்கும் அரச அலுவலர்களுக்குமிடையேயான தொடர்பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தொடர்பாடலானது பல்வேறு தளங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. மனிதன் அடைகின்ற பல்வேறு வெற்றிகளுக்கு சிறந்த தொடர்பாடல் காரணமாய் அமைகின்றது. அதே நேரம் தொடர்பாடல் வெற்றி அடையாத போது பல்வேறு தோல்விகளுக்கும் மனித அழிவிற்கும் அது காரணமாய் அமைகின்றது. தொடர்பாடல் எமது செயல், சொல், அனைத்தும் அதனால் ஏற்படக் கூடிய பின்விளைவுகளை பற்றி நன்கு அறிந்தே தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டும். இதனை பொய்யா மொழிப்புலவரின் நான்கு குறள்கள் மிகச்சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன

01. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல் லிழுக்குப்பட்டு
(127)

02. ஒன்றாலுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின் நன்றாகாதாகி விடும்
(128)

03. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு.
(129)

04. கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைத்து
(130)

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் எமக்கு கிடைக்கின்ற நன்மை தீமை எல்லாம் எமது நாக்கினாலேயே அமைகின்றது அதைத் தான் வள்ளுவர் எவற்றை அடக்காவிட்டாலும் நாக்கு ஒன்றையாவது தீய சொற்களைப் பயிலாமல் அடக்கியாள வேண்டும் என்று கூறுகின்றார். அங்கனம் அடக்கியாளாவிட்டால் பேசும் போது சொற் குற்றத்திற்கு ஆளாகிப்பெரும் துன்பப்பட நேரிடும். இதனை ஆங்கிலத்தில் சுருக்கமாக Think before you speak எனக் கூறுவர். அதாவது பேசுவதற்கு முதல் யோசி என்பதாகும்.

இரண்டாவது குறளில் சொல்லப்பட்ட விடயம் தீய சொல்லை சொல்லிப்பிறர் மனதை புண்படுத்துவதும் செய்யும் நல்ல காரியங்கள் கூட மாறுபட்ட பயனைத்தரும்

மூன்றாவது குறளிலே சொல்லப்பட்ட விடயம் நெருப்பினால் ஏற்பட்ட காயத்தை மாற்றி விடலாம் ஆனால், நாவினால் சொன்ன வார்த்தையினால் ஏற்பட்ட வடு என்றும் மாறாது. இன்று குடும்ப அங்கத்தவர் களிடையே ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு பிரதான காரணமாய் அமைவது அவர்களது சொற்பிரயோ கங்களாகும்.

இவ்வாறான நிலை இன்று யுத்தத்தினால் மிகவும் பாதிப்புற்ற பிரதேசங்களான வடகிழக்கு மாகாணங்களில் அதிகளவில் காணப்படுகின்றது. இளைஞர்களிடையே காணப்படும் தேவையற்ற வன்முறை களிற்கும் கொலைகளிற்கும் வீண் வாதப் பிரதிவாதங்கள் காரணமாய் அமை கின்றன. இதேபோல், கணவன் மனைவியரிடையேயான தொடர்பாடல் ஆரோக்கியமானதாக காணப்படவில்லை. குடும்பப் பிரிவு மற்றும் சமூக பிறழ்வுகளிற்கும் அவர்களிடையேயான ஆரோக்கியமற்ற தொடர்பாடலே காரணமாக அமைகின்றது.

130 ஆவது குறளில் கூறப்பட்டது போல் சினத்தை காத்து கல்வி கற்று அடங்கி வாழும் சிறப்பை பெற்றுள்ளவனை அடைய அறம் அவன் வழியில் சென்று காத்திருக்கும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

ஆரோக்கியமான தொடர்பாடல் ஒன்றிற்கு சினம் ஒரு முக்கிய காரணியாக அமைகின்றது. சினம், பொறாமை, விரக்தி போன்ற பலவீனங்களிற்கு நாம் இடம் கொடுப்போமேயானால் நாம் சிறந்த தொடர் பாடலை மேற்கொள்ள முடியாதவர்களாகி விடுவோம்.

ஒரு குழந்தை பிறக்கின்றபோது நல்ல குழந்தையாகவே பிறக்கின்றது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் நல்லது கெட்டதை கற்றுக் கொள்கின்றது. அதனால் தான் ஓர் அறிஞர் சொன்னார் ஒரு குழந்தை "கெட்ட வார்த்தை" சொல்கின்றது எனக்குற்றம் சொல்ல முடியாது. அக்குழந்தை "கேட்ட வார்த்தையையே" சொல்கின்றது. அதாவது, சமூகத்திலிருந்து கேட்ட வார்த்தையையே அது கெட்ட வார்த்தையாக சொல்கின்றது. எனவே தொடர்பாடல் சிறப்பானதாக அமைய குடும்பம், சமூக அங்கத்தவர்கள் ஆகியோர் சிறந்த தொடர்பாடல் பண்புகளைக் கொண்டவர்களாக அமைதல் வேண்டும்.

மாணவர்கள் சிறந்த தொடர்பாடல் நுட்பங்களை பாடசாலைகளிலே கற்றுக் கொள்கின்றனர். மாணவர்கள் ஆசிரியர்களிடையேயான தொடர்பாடல், மாணவன் சக மாணவனிடையேயான தொடர்பாடல், அதிபர் ஆசிரியர்களிடையேயான தொடர்பாடல் என விரிந்து செல்கின்றது ஆசிரியர்கள் தமது தொழிலுக்குரித்தான குற்றம் களைபவர்களாகவும், மாணவர்களிற்கு சிறந்த வழிகாட்டிகளாகவும் அமைவதற்கேற்ற வகையில் தொடர்பாடலை மேற்கொள்வது அவசியமானதாகும்

தொடர்பாடல் என்பது பல்வேறு மட்டங்களில் பலருக்கு நன்மை அளிப்பவையாகவும் சிலவேளைகளில் அதற்கே உரித்தான பண்புகளை கொண்டிராதபோது பாரிய விளைவுகளிற்கு காரணமாகின்றது. சிலவேளைகளில் நடைபெறுகின்ற கொலைகளுக்கு அங்கே காணப்படுகின்ற வேண்டத்தகாத வார்த்தை பிரயோகங்களே காரணமாக அமைகின்றன. அந்த சந்தர்ப்பங்களில் வார்த்தை பிரயோகங்களை கட்டுப்படுத்துகின்றபோது இவ்வாறான கைமோசக் கொலைகள் தவர்க்க கூடியதாகவிருக்கும்.

### நாம் கருத்திலெடுக்க வேண்டிய மிக முக்கியமான தொடர்பாடல் பண்புகள்

நாம் நல்ல தொடர்பாடல் பண்புள்ளவர்களாக வளர்வதற்கு எமது கருத்துக்களை கூறுவதற்கு முன்பு, மற்றவர்கள் கூறும் கருத்துக்களைக் கேட்டல் அவசியமாகும். மற்றவர்களுடைய கருத்தை கேட்காமல் எமது கருத்தை திணித்தல் தொடர்பாடல் முறைமைக்கு குந்தகமாக அமையும் அத்துடன் குறைத்த தொடர்பாடல் தோல்வியில் முடிவதற்கு அது காரணமாக அமையலாம்.

### அலுவலக ரீதியான தொடர்பாடலில் நாங்கள் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

(Non Verbal Communication ) வாய் மொழியல்லாத தொடர்பாடல் முறையும் எம் மத்தியில் காணப்படுகின்றது. உடல் மொழி, கண் அசைவு செய்கை போன்ற வாய்மொழியற்ற தொடர்பாடல் முறைகள் காணப்படுகின்றது. இவை நல்ல நோக்கங்களை கொண்டதாகவும் தீய நோக்கங்களைக் கொண்டவையாகவும் இருக்கலாம். உடல் மொழி அல்லது வாய்மொழியற்ற தொடர்பாடலை மேற் கொள்கின்றபோது நாம் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். பெரியோர்கள் அமர்ந்திருக்கின்ற இடத்தில் உடல் மொழி தொடர்பாடலை மேற்கொள்வதை நாம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது அவசியமாகும்.

தெளிவான பொருளாழம் மிக்க சுருக்கமான தொடர்பாடல் முறைமை.(Clarify and Concision)

தொடர்பாடல் நுட்பத்தில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய இன்னுமொரு விடயம் நாம் செய்கின்ற தொடர்பாடலானது தெளிவானதாகவும் சுருக்கமானதாகவும் பொருளாழம் மிக்கதாகவும் அமைதல் வேண்டும். சில வேளைகளில் நாம் சொல்ல விளைகின்ற செய்தி தெளிவற்றதாக அமையும் போது அந்த செய்தியின் நோக்கம் மாறுபடக்கூடிய சந்தர்ப்பம் அமைகின்றது. தற்காலம் இயந்திரமயமானது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியை ஆறஅமர்ந்து இருந்து வாசிப்பதற்கு போதிய நேர அவகாசம் கிடைப்பதில்லை. இதனால் செய்தி சுருக்கமானதாக இல்லாதபோது அதில் கவனத்தைச் செலுத்துவதற்கு தவறி விடுகின்றோம். எனவே இவ் விடயத்தில் தொடர்பாடலை ரேற்கொள்பவர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**சினேக பூர்வமான தொடர்பாடல் முறைமை.**

தொடர்பாடல் என்பது ஒருவருக்கொருவர் பரஸ்பர உறவுமுறையொன்றைப் பேணுவதன்மூலம் கட்டியெழுப்பப்படுவதாகும். எமது நிர்வாகக் கட்டமைப்பும் அவ்வாறானதேயாகும். மத்திய அரச நிர்வாகக் கடடமைப்பு. மாகாண அரச நிர்வாகக் கட்டமைப்பு என்பன மேலிருந்து கீழ் நோக்கிய அதிகாரப் படிமுறையைக் கொண்டது. மேலிருந்து வருகின்ற நிர்வாக ரீதியான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு ஒவ்வொரு படிநிலையிலும் இருந்து பணியாற்றுகின்ற அலுவலர்கள் தத்தமது பணிகளைச் செவ்வனே செய்கின்ற போது நிர்வாகம் சிறப்பானதாக மாற்றம் அடைகின்றது. எமது மாவட்ட நிர்வாக கட்டமைப்பை உற்று நோக்கினால் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் பிரதேச செயலாளருக்கும் கிராம அலுவலர்களுக்குமிடையே ஆரோக்கியமான உறவுமுறை காணப்பட வேண்டும். ஒருவரை ஒருவர் விமர்சனம் செய்தல் கடமைகளைத் தட்டிக் கழிக்கின்ற போது தொடர்பாடல் முறைமை பாதிப்புக்குள்ளாகின்றது.

இவ்விடயம் குடும்ப அங்கத்தவரிடையே சமூகங்களுக்கிடையே எப்போதும் பேணப்பட வேண்டியதாகும். சினேகம் என்பது சிறப்பாக பேணப்படுமானால் எமது வாழ்வும் மகிழ்ச்சியானதாகவும் பொருள் பொதிந்ததாகவும் அமையும். இதற்கு விட்டுக் கொடுப்புகள் அவசியமானதாக அமைகின்றன. பழிவாங்கும் எண்ணம் மற்றவர்களைத் தாழ்த்துதல் மற்றவர்களிலும் தானே சிறப்பானவர் என்ற எண்ணம். தனது நிலையில் இருந்து மாறாமை என்பன சினேகபூர்வமான உறவுமுறை ஒன்றுக்கு தடையாக அமைகின்றது. தொடர்பாடல் மேற்கொள்கின்றபோது மனம் இலேசானதாகவும் தொடர்பாடலை மேற்கொள்கின்ற இருமனத்தவர்களும் ஒருவரை ஒருவர் மதிக்கின்ற நிலையிலுமிருந்தால் அவ்வாறான நிலை சிறந்த பலனைத் தரும்.

**நம்பிக்கை** (Confidence)

தொடர்பாடலில் நம்பிக்கை என்பது மிகவும் அவசியமானதொன்றாகும். தொடர்பாடலை மேற்கொள்பவரும் அதனைப் பெறுகின்றவரும் ஒருவரை ஒருவர் நம்புதல் அவசியமானதாகும். இரகசியம் பேணப்பட வேண்டிய எத்தனையோ விடயங்கள் பரிமாறப்படுகின்றன. ஒருவர் எம்மீது நம்பிக்கை வைத்து செய்தியைப் பரிமாறுகின்ற போது அதனுடன் தொடர்புபட்டவர்களுக்கு மாத்திரம் தெரியத் தக்கதாக அதனைப் பேணுதல் மிகவும் அவசியமானதாகும். மனித நடத்தையில் தம்முடன் ஒரு விடயத்தை வைத்திருக்கும் பழக்கம் குறைவாகவே காணப்படுகின்றது. தேவையற்ற நபர்களுக்கு அந்த செய்தி சென்றடைகின்றபோது அது வீணான பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றது.

**பிறர் வலியை தன் வலியாக உணருதல்.** (Empathy)

ஒரு பொது மகன் தனது உள்ளக் குமறல்களை அலுவலர்களிடம் தெரிவிக்கின்றார். அது வாய்மொழியிலாகவோ அல்லது எழுத்து மூலமானதாகவோ இருக்கலாம். அவரது வலிகளை உள்வாங்கி அதற்கான தீர்வுகளை வழங்குதல் அலுவலரின் தலையாய கடமையாகும். இவ் விடயம் எமது குடும்பத்திலும் நிகழ்கின்றது. சிறு பிள்ளைகள் கூட சில வேளைகளில் தமக்கு தேவையானவற்றைப் பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கு அழுது அடம் பிடிக்கிறார்கள் சில பெற்றோர் அவற்றை கருத்தில் எடுப்பதில்லை. இது அவர்கள் மனதைப் பாதிப்படையச் செய்கிறது. எம்மால் அதனை நிறைவேற்ற முடியாவிட்டால் அதனை அன்பாய் ஆதரவாய் அவர்களுக்குரிய பாணியில் எடுத்துச் சொல்லி அவர்களை ஆற்றுப்படுத்தல் அவசியமானதாகும். இது அலுவலக தொடர்பாடலிலும் பின்பற்றப்படுதல் வேண்டும்.

**திறந்த மனது.** (Open Mindedness)

ஏற்கெனவே எமது மனதில் பதிந்த விடயங்களை வைத்துக் கொண்டு அதன் பிரதிபலிப்புக்களை வெளிக்காட்டும் விதமாக தொடர்பாடலை மேற்கொள்கின்றபோது அது நன்மைகளை அளிக்காது பாதகமான விளைவகளை கொண்டு வருவதாக அமையும். இந்த இடத்தில் வள்ளுவப் பெருந்தகையினுடைய குறள் ஒன்றினைத் தருதல் பொருத்தமாக அமையும் என நினைக்கிறேன்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்"

எம்மிடம் ஒருவர் எத்தனை இடர்களைச் செய்தாலும் அவர் நாணும் வகையாக நாம் அவருக்கு நன்மை செய்ய வேண்டும். எந்த விடயத்தையும் கருத்தில் வைக்காது நன்மை செய்வதை நோக்காகக் கொண்டு திறந்த மனதுடன் தொடர்பாடலை மேற்கொள்ளுதல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை மண்ணின் பழுத்த ஆளுமை
# கலாநிதி முல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்கள்

**சின்னப்பா நாகேந்திரராசா**
அதிபர், வலதுகரை அ.த.க.பாடசாலை,
கற்சிலைமடு.

மண்ணில் தோன்றிய மனிதர்களுள்ளே வந்தோம், வாழ்ந்தோம் என்றில்லாமல் தாம் வாழ்ந்த காலத்தில் தனக்கும், தன் சமூகத்திற்கும், பிறந்த மண்ணிற்கும் பெருமை சேர்த்து மறைந்த பின்பும் மக்கள் மனங்களில் நிறைந்து நிற்பவர்கள் சிலரே. முல்லைமணி என்றபெயர் முல்லையை முன்னொட்டாகக் கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் மணியாக கலாநிதி வே.சுப்பிரமணியம் அவர்கள் எழுபதுகளில் அடையாளப்படுத்தப்பட்டிருந்தார். அந்த அடையாளம் இன்று நிருபணமாகி முல்லைமணி முல்லைமக்களின் பெரும் சொத்தாய் உயர்ந்து நிற்கின்றார். 1978ம் ஆண்டு வன்னி நிருவாகத்திலிருந்து தனி மாவட்டமாக பிரிந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்டம் அதற்கு முன்னர் வவுனியா மாவட்ட நிருவாகத்தின் கீழ் இருந்தபோது அதன் வளர்ச்சிக்கு பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது பங்காற்றிய மாந்தர்களுள் முல்லைமணியின் பங்கும் சமூகவியல் ரீதியில் உயர்ந்து காணப்பட்டது.

முள்ளியவளையிலே 03.05.1933ம் ஆண்டு சாதாரண குடும்பத்திலே பிறந்த முல்லைமணி அவர்கள் தமக்குக் கிடைத்தவாய்ப்பைச் சரியான முறையில் பயன்படுத்தியமையால் கல்வியில் உயர்நிலையைப் பெற்றார். மாக்சிச சிந்தனையும் சுயசிந்தனா சக்தியும் கொண்ட இளைஞனாக விளங்கிய சுப்பிரமணியம் தனது சிந்தனைகளை படைப்பிலக்கியங்களின்பாலும், கலைகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தினார். அவரது அந்த முனைப்பே எமக்கு முல்லைமணியைத் தந்தது. வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகத் தனது கல்விச் சேவையை ஆரம்பித்த இவர் சமூக சிந்தனையாள னாகவும் திகழ்ந்தார்.

முல்லையில் கலைகளின் ஊற்றாய் இருந்த முள்ளியவளை இயலிசை நாடகமன்றத்தின் தலைவராக இருந்து பல நாடகங்களைத் தயாரித்து நெறியாழ்கை செய்து மேடையேற்றினார். "பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம்", "சேற்றில் மலர்ந்த செந்தாமரை", "கர்ணனின் கடைநாள்" என்பவை சுட்டிக்காட்டத்தக்கவை. இவரு டைய "பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம்" கல்வி வெளியீட்டுத் திணைக்களத் தினால் வெளியிடப்பட்ட தமிழ் பாடநூலில் இடம்பெற்றமையும் இன்றும் ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட மேடைகளில் மேடையேற்றப்பட் டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மாவட்டத்தில் சிறந்த பண்டார வன்னியர்களாக பல நடிகர்கள் உருவாக இவரே ஆணிவேர். பண்டாரவன்னியனின் சுதந்திரவேட்கை இவரின் வரிகளால் உருப்பெற்று விறல் வீரனாக உருவாக்கிய பெருமைக்குரியவர் முல்லைமணியவர்கள்.

தனது ஆளுமையாலும், அறிவுத்திறனாலும் கல்விப் பணியில் இவர் வீறுநடை போடத்தவறவில்லை. முல்லைத்தீவின் புகழ் பூத்த பாடசாலையான வித்தியானந்தக் கல்லூரியின் ஆசிரியராக எழுபதுகளில் கடமையாற்றி, பின்னாளில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையிலும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் விரிவுரையா ளராகக் கடமையாற்றி தமிழ், நாடகம், இலக்கியம் ஆகிய பாடங்களைப் போதித்தார். எண்பதுகளின் நடுப்பகுதியில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபராகக் கடமையாற்றிய அவரின் சேவைக்குச் சிறப்பாய் முல்லைத்தீவு மாவட்ட கல்விப்பணிப்பாளர் பதவி தேடி வந்தது.

தனது ஆளுமையின் கீழ் இருந்த பாடசாலைகளுக்கு வாகன வசதிகளற்ற அப்போது மோட்டார் சைக்கிளிலும் துவிச் சக்கரவண்டியிலும் சென்று ஆசிரியர்க ளுக்குத் தெம்பூட்டி கல்வியை வளர்த்தார். (முல்லைத்தீவு முதல் விசுவமடு,துணுக்காய் வரை)

பிரதேசக் கல்வியை வளர்க்கும் சிந்தனை யுடன் இருந்த இவர் தொண்ணூறாம் ஆண்டு அதிகளவான ஆசிரியர்களை மாவட்ட சேவைத்திட்டத்தில் உள்வாங் குவதில் முன்னின்று உழைத்தார். இவரது மாணவர்களும் இவரால் உருவாக்கப்பட் டவர்களுமே இன்றைய முல்லையின் கல்விப்புலத்தில் பயணிக்கும் அனேகர்.

**இலக்கியப்பணி**

கல்வி, நாடகம் என்பவற்றுடன் நின்று விடாது தனது சிந்தனாசக்தியை திசை முகப்படுத்திய முல்லைமணியவர்கள் ஈழத்து இலக்கியத் தளத்தில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்திருந்தார். "கமுகஞ் சோலை", "அரசிகள் அழுவதில்லை", "மல்லிகைவனம்", "வன்னியர்திலகம்", "மழைக்கோலம்" போன்றவை குறிப்பி டத்தக்க இவரது நாவல்களாகும். நிலக்கிளி பாலமனோகரன், முல்லைமணி இருவருமே முல்லையின் நாவல் முன்னோடிகள். முல்லைமணியவர்கள் பன்முகப் படைப்பாளுமை கொண்டவர் என்பதை அவரது படைப்புகள் அடையாளப் படுத்தி நிற்கின்றன.

"கொண்டுவந்த சீதனம்" இவரது சிறுகதை, இதைவிட "முல்லைமணியின் கவிதைகள்" இவரது கவித்திறனின் அடையாளம். "வன்னியர்சிந்தனை" இவருடைய ஆய்வியற்கட்டுரைத் தொகுப்பு. இவை மட்டுமன்றி வரலாற்றுக் கட்டுரைகளிலும் (புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமலர்களிலும், முல்லை மாவட்ட மலர் முல்லைச்சாரலிலும் அண்மையில் வெளிவந்துள்ளன.) எனக் காலத்திற்குக் காலம் முல்லைமணி தன்னைப் பதிவு செய்துள்ளார். பேராசிரியர் சிவத்தம்பி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சொக்கன் முருகையன் போன்ற மூத்த ஈழத்து இலக்கிய சிறபிகளுடன் கூடப்பயணித்து பாராட்டுக்களையும் நட்பினையும் பெற்றுக்கொண்டவர். (முல்லைமணியின் கவிதைகளில் வழங்கப்பட்ட உரைகள் பதிவாகியுள்ளன.)

முல்லைமணி ஒரு சமூக சேவையாளனாக திகழ்ந்தமையை அவர் வகித்த பாத்திரங்கள் சான்றுபகர்கின்றன. முள்ளியவளை இயலிசை நாடகமன்றத் தலைவர், முள்ளியவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் (10ஆண்டுகள்), வவுனியா மாவட்ட பண்டாரவன்னியன் கழகத் தலைவர், முல்லை இலக்கியவட்டத் தலைவர், வித்தியானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர்சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் செயலாளர், முள்ளியவளை மத்திய சனசமூக நிலையத் தலைவர்.

தானும் தனது குடும்பமும் என்றிராது தனது சமூகத்தையும் தன்னுடன் உயர்த்திச் சென்றமையை மேற்போன்ற சான்றுகள் அடையாளப்படுத்துகின்றன. இறைபக்தியில் முல்லைமணி விஞ்சி நின்றமைக்குச் சான்றாக ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் பாமாலை, நெடுங்கேணி வில்வையடி விநாயகர் பாமாலை, காவத்தை முத்து மாரியம்மன் ஆலய திருவூஞ்சற் பதிகம் ஆகியவை அவராலாக்கப்பட்டன. தான் வாழ்ந்த காலத்தில் முல்லைமணி அவர்கள் தனக்காய் சேகரித்தவை நல்ல மனையாள் நன்மக்கள் மட்டுமே. இவ்வளவு ஆற்றலும் ஆளுமையும் இருந்தும் மண் வாசனை மாறாத பேச்சும் மென்சிரிப்பும் கொண்டு முல்லை மக்களையும் ஈழத்து இலக்கியத்தையும் ஆட்கொண்ட இந்த மனிதருக்கு ஆக பட்டங்களும் விருதுகளுமே சொத்துக்களாகின.

வெள்ளை உள்ளம் கொண்ட நல்ல மனிதர் தன் வாழ்நாளில் பெற்றுக்கொண்ட பட்டங்கள் "கலைஞர்திலகம்", "தமிழ்மணி", "இலக்கியச் செல்வர்", "முல்லைமணி", "கலாநிதி" (யாழ்பல்கலைக்கழகம்), "கலாபூசணம்", "சாகித்யரத்னா" (கலைச் சேவைக்கான உயர்விருது 2015இல் நல்லாட்சி அரசின் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன அவர்களால் வழங்கப்பட்டது.)

பதினாறு ஆண்டுகள் நோயுற்றிருந்த போதும் தனது ஆவி அடங்கும் வரை மண் பற்றிய சிந்தனையுடனேயே வாழ்ந்த இவர் முல்லைமணியின் முதுபெரும் ஆளுமையின் அடையாளம். இப்படி ஒரு ஆளுமை உருவாக இவர் இப்போதுள்ள இளவல்களுக்கு ஆசானாய் மீண்டும் பிறக்கவேண்டும்.


மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தவர் உவந்து ஏற்றும் பீடுடைப் பேறெய்துவர் என்பதை முல்லைமணி அவர்களின் இறப்பு எடுத்துக் காட்டியுள்ளது. நிறைமதி நாள் கார்த்திகைதீபத் தினத்தில் (13.12.2016) முல்லைமணி என்ற மாமனிதர் இறையடிசேர்ந்தார். ஈழத்து இலக்கிய வரலாற்றிற்கு வரலாறாய் இருந்த அமரர் கலாநிதி முல்லைமணி வே.சுப்பிரமணியம் ஈழத்து இலக்கிய வாதிகளால் ஏற்றிப் போற்றப்படுவாரா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் கொண்டாட்டம்

-ஜெரா



வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட நிலவியல்பின் பிரதான அம்சம் என்னவென கேள்வி கேட்டால், பச்சைப் பசேல் காடு என்றே அனைவரும் நினைவுதருவர். நூற்றாண்டுகள் கடந்த பெருமரங்கள், அவையடர்ந்த பெருங்காடு, பெருங்காட்டை குறுக்குக் குறுக்காகக் கிழிக்கும் கால்தடப் பாதைகள் என இந்த நிலத்திடம் ரசிக்க ஆயிரம் ரகசியம் உண்டு. இந்த ரகசியக் காட்டினுள் இந்தப் பிரதேசத்து மக்களின் வாழ்வு ஒளிந்திருக்கிறது. வளம் ஒளிர்ந்திருக்கிறது. இப்போதும் அப்படித் தான். காடு அவர்களுக்கு ஒரு கொண்டாட்டத்தைக் கொடுத்திருக்கிறது. என்னவெனில் 32 வருடங்களுக்கு ஒருமுறை காய்க்கும் முரலிபழம். பெரிதாகவும், சிறிதாகவும், செறிவாகவும், அடர்த்தியாகவும் காய்த்துப் பழுத்திருக்கிறது. கற்குளம், ஒலுமடு, வெடுக்குநாறிமலை, மருதோடை, வெடிவைத்தகல், பட்டிக்குடியிருப்பு, காஞ்சூரமோட்டை, அரியகுண்டான், நெச்சுகுளம் போன்ற இடங்களை அண்டிய காடுகளில் இந்தப்பழம் அதிகம் கிடைக்கிறது.

மிகுந்த மருத்துவ குணங்கள் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரலிபழம் வவுனியா வடக்கு உள்ளிட்ட மணலாற்றுக் அதிகம் காட்டில் கிடைப்பது வழமை. ஆபிரிக்கர்களின் தலையைப் போல சுருண்ட, அடர்த்தியான பச்சை இலைகளைக் கொண்ட இம்மரம் கரடிகள் வாழ இடமளிக்கிறது என்பது இன்னொரு தகவல். இதனால்தான் முரலிபழம் காய்க்கும் காலத்தில் காடுகளில் கரடி உலாவும் என மூத்தோர் சொல்கின்றனர்.



தோலை உரித்து, நாக்கில் வைத்தவுடன் உச்சந் தலை வரை குளிரும் கூழாம் பழத்தை பெரும்பாலானவர்கள் உண்டிருப்பீர்கள். அதைவிட சற்று சிறிதாக முரலி பழம் இருக்கின்றது. கூழாம்பழத்தைப் போலவே தான் தோலும். தோலை உரித்துவிட்டு வாயில் வைத்தால் உச்சந்தலை குளிரும் வரை இனிக்கும். அந்த சுவையே சுவை...தனிச் சுவை...!

எல்லாப் பழங்களையும் போலவே மரத்தில் பிடுங்கியவுடன் சுவைப்பதற்கும், சந்தையில் வாங்கி சுவைக்கும்போது ஏற்படும் வித்தியாசத்துக்கும் முரலி பழமும் விதிவிலக்கல்ல. சந்தையில் வாங்கி சாப்பிடும் பழத்தில் கயர்ப்பு தெரிகிறது.

முன்னைய காலங்களில் முரலிபழம் கூழாம்பழம் அளவிற்கு பெரிதாக இருந்ததாம். இப்போது என்னவோ சிறியளவில்தான் கிடைக்கின்றன என்கின்றனர் முப்பத்தியிரண்டு வருடங்களுக்கு முன்னர் அப்பழத்தை சுவைத்த பாக்கியவான்கள்.

முப்பத்தியிரண்டு வருடங்களுக்கு முன்னர் முரலிபழத்துக்கு இவ்வளவு கிராக்கி இருக்கவில்லையாம். காரணம் அப்போது வறுமையில்லை. எல்லைக் கிராமங்களில் போதியளவு செழிப்பு இருந்தது. இப்போது எல்லாமே தலைகீழ். எனவே இந்த முறை பழுத்த முரலிப் பழத்தைத் தம் அடுப்பிலிருந்து பூனையை துரத்திவிடும் சந்தர்ப்பங்களுக்காக எல்லைக் கிராம மக்கள் பயன்படுத்திக்கொள்கின்றனர். பாடசாலை விடுமுறை, தோட்டங்களில் வேலையின்மை, விவசாயம் படுத்தமை காரணமாக குடும்பம் குடும்பமாக வாளிகள், பைகள் சகிதம் காடுகளுக்குள் உலாவுகின்றனர்.

இவ்வாறாக, ஒரு கிலோ முரலி பழம் பிடுங்கினால் உடனடியாக அதனை 60 ரூபாயிலிருந்து 90 ரூபா வரை விலைகொடுத்து வாங்க வியாபாரிகள் வரிசையில் முண்டியடிக்கின்றனர். முண்டியடிக்கும் வியாபாரிகள் அந்தக் கிராமத்தவர்கள் என்றெல்லாம் நினைத்துவிடாதீர்கள். எப்படியோ மோப்பம் பிடித்து முள்ளியவளை, வவுனியா பகுதிகளில் இருந்து வாகனங்களில் வருகின்றனர். 60 ரூபாயிலிருந்து 90 ரூபாய்க்குள் அமுக்கிக்கொண்டுபோய் வவுனியா நகரத்தில் 200 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.

எனவே இடைத்தரகர்களைப் பொறுத்த வரையில் இதிலும் லாபமோ... லாபம்...! கொள்ளை லாபம்...!

இவ்வளவு சுவாரஸ்யமான முரலி பழம் பிடுங்கலில் இருக்கும் துயரம் என்னவெனில், ஒரு முரலி மரத்தைக் கண்டதுமே, பலர் அம்மரத்தை அடியோடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தறித்தும், கிளைகளை வெட்டியும் பழம் பிடுங்கலில் ஈடுபடுகின்றனர்.

யாரும் இயற்கைப் பாதுகாவலர்கள் விமர்சித்துக்கொண்டு போனால், "அடுத்த 32 வருசத்துக்குள்ள நல்லா முளைச்சிடும் தம்பி" என்பதாக இருக்கிறது.

முரலி காய்ப்பதும், மாரி காலத்தில் பாலைப்பழம் காய்ப்பதும் அடுத்து வரும் வருடத்தில் இடம்பெறப்போகும் பெரிய பஞ்சத்தைக் கட்டியம் கூறுகின்றன என்ற உரையாடல்களுடன்தான் எல்லைக் கிராம மக்கள் முரலிபழ வேட்டையில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களின் அனுபவமும், இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையும் அதில் உண்மை இருக்குமோ என எண்ண வைக்கிறது.

இந்த முறை மழை பொய்த்திருக்கிறது. மழையின் நிலையை எதிர்பார்க்காமலே வன்னியின் இருபெருங் குளங்களான இரணைமடு, முத்தையன் கட்டு புனருத்தானத்திற்காக திறந்துவிடப்பட்டிருக்கின்றன. எனவே சிறுபோகம் குறித்து ஐயம் இப்போதே உண்டு. வழமையாக பயிர் விளைச்சல் காலத்தில் மூசிப் பெய்யும் பனி, இப்போது பயிர் விதைக்கும் காலத்திலேயே மூசிப்பெய்ய ஆரம்பித்து விட்டது. பயிர்களில் கருக்கள் தெரிவதை வன்னிக்குள் உலாவுபவர்கள் அவதானித்திருப்பீர்கள். எனவே ஒரு கொண்டாட்டத்தோடு பெருங்கோடைக்கும் அவர்கள் தம்மைத் தயார்படுத்துகின்றனர். இயற்கையோடமைந்த வாழ்வில் ஒன்றித்த திரளுக்கு கடல் மீது படம் கீறுதலும், சிலவேளை அதை வந்து அலைகொண்டோடுதலும் புதிதல்லவே...!

○ ○ ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கவிதை மனம்

றியாஸ் குரானா

நான் "நவீன கவிதை" என விழிப்பது தமிழில் நவீன கவிதை என பாவிக்கப்படும் பிரதிகளைத்தான். அதிக பட்சம் அந்தச் சொல் "புதிது" என்ற அர்த்தத்தில்தான் பயன்பாட்டிலுள்ளது. இந்தப் புதிது என பயன்படுத்துவதை நீங்கள் "பழையது" என்றே தற்காலத்தில் எடுத்துக்கொள்வீர்கள் என நினைக்கிறேன்.

புதிது என பாவித்து பல ஆண்டுகளாகிறது. இப்போது "புதிது" என்பது அதன் பெயராக மாறிவிட்டிருக்கிறது. தவிர, இன்னும் புதிதாக இருக்கிறது என்பதல்ல.

நவீன கவிஞர் ஒருவர் அறிமுகமாகிறார் எனச் சொன்னால், பழைய வழக்கமான கவிதையை பின்தொடரும் ஒரு நபர் அறிமுகமாகிறார் என்றுதான் புரிந்து கொள்வீர்கள். வழக்கமாக நவீன கவிதை என பயிலப்படும் ஒன்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட "புதிய" ஒரு கவிதையை கொண்டுவருகிறார் என்றாகாது. ஆனால், அப்படி நடைபெறும்போது அக்கவிதைகளை எப்படி அழைப்பது?

நவீன கவிதை என்று அழைக்க முடியாது. எனவே நவீன கவிதைக்கு அப்பால் என்றோ, நவீனம் கடந்த கவிதை என்றோதான் குறிப்பிட வேண்டும். இது ஒரு ஆரம்பநிலைதான்.

இந்த வழக்கமான கவிதைகளின் முகாமிற்குள் நுழைய முடியாத கவிதை களை "நவீன கவிதை இல்லை" என்று கூட விளிக்க முடியாது. ஏனெனில், நவீன கவிதை அல்ல என்ற பிரயோகம் "மோசமான கவிதை" என்ற புரிதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாக தந்துவிடும். அதற்கான காரணம், நவீன கவிதை என்பது இங்கு எப்படியான நிலையில் பாவிக்கப்படுகிறது என்பதை உணர்த்தும்.

இன்று நவீனம் கடந்த தமிழ் கவிதைகளை பற்றி பேச முற்படும் ஒரு தருணத்தில், அதை அடையாளம் காட்ட சில வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. அவைகள் குறித்து, விரிவாகவும், சிறியளவிலும் தொடர்ந்து எழுதிக் கொண்டுதான் வருகிறேன்.

அப்படியாயின், நவீன கவிதைகள் என பயிலப்பட்டுவந்த கவிதைகளை புரிந்து கொள்வதினூடாகவே, அதைக் கடந்த கவிதைகளை கண்டடைய முடியும்.

அதில் முக்கிய பங்கு வகிக்கின்ற "நவீன கவிதை மனம்" என்பது எப்படி செயல்படுகிறது என்பதை சிறிய உதாரணங்களுடன் விளக்க முயற்சிக்கிறேன். அந்தக் கவிஞர்களை கிண்டலடிக்கும் நோக்கம் கொண்டதல்ல.

இறுகிய மற்றமையை கவனத்தில் கொள்ளாத தனித்த மனநிலையை மட்டும் பிரதானப்படுத்துகின்ற "கவிதை மனம்" தென்படும் பிரதிகள் நிச்சயமாக பழைய நவீன கவிதைகளின் முகாமைச் சேர்ந்ததுதான்.

இன்றும், மரபுக் கவிதைகளை இளைஞர்கள் எழுதிக்கொண்டிருப்பதைப்போல, பழைய நவீன கவிதைகளை இளையவர்களும், புதியவர்களும் எழுதக்கூடும். அதிலிருந்து விலகி பயணிக்கும் ஒரு பிரிவினர் இன்று உருவாகியிருக்கின்றனர்.

சரி, ஒரு உதாரணத்தை முன்வைத்து நவீன கவிதை மனதை அறிவதில் பங்காற்றுவோம்.

இது கவிஞர் தேவதேவனுடைய ஒரு கவிதை.

**தரிசனம்**

**செடி ஒன்று காற்றில்**
**உன் முகப்பரப்பிற்குள்ளேயே அசைகிறது**
**கோணங்கள் எத்தனை மாற்றியும்**
**இங்கிருந்து உன் முகம் காண முடியவில்லை**
**இவ்விடம் விட்டும் என்னால் பெயர ஆகாது**
**ஆனால் காற்று உரத்து வீசுகையில்**
**செடி விலகி உன் முகம் காண முடிகிறது**

(நவீன கவிஞர்களில் கவிதையை செப்பனிடும் ஆற்றல் மிகவும் குறைந்த ஒருவர் இவர்தான். தரிசனம் என்ற சொல்லைப்போல, அவரது பிரதிகளில் எங்காவதுதான் கவிதைக்கான தருணம் தோன்றும்.)

ஒருவரின் முகத்தை செடி ஒன்று மறைக்கிறது

பார்க்க முடியவில்லை. காற்று உரத்து வீச செடி விலகி முகம் தெரிந்துவிட்டது. அது ஒரு தரிசனம். இதுதான் கவிதையின் சாரம். பிரதான விவாதமும் இதுதான்.

**செடி ஒன்று காற்றில்**
**உன் முகப்பரப்பிற்குள்ளேயே அசைகிறது**

உன் முகப்பரப்பை தாண்டி அல்லது விலகி செடி அசையவில்லை. உன் முகத்தை மறைக்கவே விரும்புகிறது. அல்லது, முகத்தை அதற்குள் மறைக்கிறாய் என்ற கதைகள் தொங்கும்படி அமைந்திருக்கிறது இந்தக் கூற்று.

**கோணங்கள் எத்தனை மாற்றியும்**
**இங்கிருந்து உன் முகம் காணமுடியவில்லை**

முகத்தை பார்க்கும் முறைகளை மாற்றி முயற்சித்தும் பார்க்க முடியவில்லை. இதில் "கோணங்கள்" என்ற சொல் வெவ்வேறு திசைகளில் நகர்ந்து பார்க்க முயற்சித்தேன் என்று யோசிக்கும் வாய்ப்பை அடுத்ததாக வரும் கூற்று மறுத்துவிடுகிறது. நின்ற இடத்தில் நின்றபடி தலையை சாய்த்தும், கெழித்தும் பார்ப்பதை சொல்கிறதா? எப்படியாயினும், அதன்பிறகும் முகத்தை பார்க்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடம் விட்டும் என்னால் பெயர ஆகாது

இந்த இடத்தைவிட்டு நகர்ந்து இடம்மாறிப் பார்க்கவும் ஆகாது. அது தடைசெய்யப்பட்ட ஒன்றுபோல கருதுகிறார். நான் இங்கதான் நிற்பேன். நீதான் எப்படியாவது முகத்தைக் காட்ட வேண்டும். இது கொஞ்சம் இறுகி, எனக்குத்தான் முகத்தை பார்க்க வேண்டும். அதற்காக நான் விட்டுக்கொடுப்பதா? நகர்ந்து இடம்மாறி நின்று பார்ப்பதா? எனது கௌரவம் என்னாவது? என்பதுபோன்ற ஒரு நிலையை பரிந்துரைக்கிறது.

இதை இன்னும் கொஞ்சம் விரிவாகப் பார்ப்பதெனில், இதற்கு முதல் நான் எழுதிய பதிவை பாருங்கள். அது சுராவின் கவிதை ஒன்று.

சூரிய அஸ்தமனத்தை பார்க்கச் செல்கிறார். ஒரு ஆட்டுக்குட்டி அதை பார்க்கவிடாது மறைக்கிறது.
அப்போது,
"இடம்பெயர்வதா நான்
அல்லது
நின்ற நிலையில் நிற்பதா?"

என யோசிக்கிறார். நின்ற நிலையில் ஆட்டுக்குட்டி மறைப்பதை குறையாகச் சொல்வதா? அல்லது, விலகி நகர்ந்து அதை பார்ப்பதா? என இந்தக் கவிதைக் குரலில் ஒரு தேர்வு இருக்கிறது. தேர்வுக்கான இடம் வந்துபோகிறது. ஆனால், தேவதேவன் கவிதையில் உருவாக்கும் கவிதை மனிதனின் மனம் அப்படியானது அல்ல. அதற்கு தேர்வு என்ற ஒரு வாய்ப்பே இல்லை. நீதிமன்றத் தீர்ப்பைப்போல, ஒரு கடுமை "நவீன கவிதை மனமாக" வெளிப்படுகிறது.

**ஆனால் காற்று உரத்து வீசுகையில்**
**செடி விலகி உன் முகம் காண முடிகிறது**

பாருங்கள், நான் நகர்ந்து நின்று பார்க்குமளவு சமரசம் செய்ய மாட்டேன். நீதான் சமரசம் செய்ய வேண்டும். காத்து செடியை விலக்கி முகத்தைக் காட்டிவிட்டது பாத்தயா? நான்தான் வென்றுவிட்டேன். என்பதைப்போன்ற ஒரு கூற்றாக இது நிறைவடைகிறது. சுராவின் கவிதை உருவாக்கும் கவிமனம், கடைசியில் சூரியனைக் காணவில்லை என்ற ஏக்கத்தை நெருங்குவது.

தேவதேவனுடைய கவிதை உருவாக்கும் கவிமனம்,தோற்றவர்களை கிண்டல் செய்வது. நான் சொன்னதுபோல, நவீன கவிதை மனம் மற்றமையை பொருட்படுத்துவதே இல்லை

**என்னைப் பழியுங்கள்**

இடி விழுந்து சாக
தட்டித் துறாவித் திரிய
சதி மகுத்து வந்து
சந்தியிலே சரிந்து கிடக்க
திட்டுங்கள்
முடிந்தால், அறம்பாடி
என்னைக் கொல்லுங்கள்
அது கொலையாகவே இருக்காது
நிச்சயம்.
இரவாக இருந்த சந்தர்ப்பத்தில்
மிகச் சந்தோசமாக
கற்பனைக்குள் வசித்த
ஒரு கூட்டத்தாரை
அழித்தொழிக்க,
சதித் திட்டம் தீட்டினேன்
வெளியேறி,
அவர்கள் வேறெங்கும்
வசிக்க முடியாமல் செய்
அதையும் எழுதாமல் தவிர்த்தேன்
தவறுதலாக பேசும்
சொற்களில் அமர்ந்தபடி
தப்பிக்க முயற்சித்தவர்களையும்
பிடித்து,
பலவந்தமாக மீண்டும்
கற்பனைக்குள் அடைத்தேன்
ஒரு சில வருடங்களுக்குள்
அந்தக் கற்பனையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக் கொடூரமாக அழித்தேன்
இனி எப்போதும்
நினைவில் தட்டுப்படாமல்
மறந்து விடுவதற்கென்று
வேறு வேறு கற்பனைகளை
உருவாக்கினேன்
அவைகளைப் பெருக்கி
மிகச் சௌகரியமாக
உள்ளே மறைந்து கொண்டேன்
அந்தக் கற்பனையிலிருந்து
ஒரு சிறு கவிதையைக்கூட
எழுத முடியாமல்போன
என்னைப் பழியுங்கள்
மிகக் கேவலமாக
முகத்தில் காறித் துப்புங்கள்
இப்படித்தான்
ஒரு காலத்தில் நாங்கள்
அவர்களுக்கும் செய்தோம்.

(றியாஸ் குரானாவின் கவிதை)

013578



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு கவிதைகள்

**நிவேதிகா**
உதவி பிரதேச செயலாளர்,
வவுனியா வடக்கு.

அது ஒரு தேவதையின் கதை

"கதை சொல்லம்மா கதை சொல்லம்மா" என்ற ஒவ்வொரு கரைச்சலின் போதும் புதிதாய் தொடங்குவது போல் அம்மா தொடங்கும் ஒரேயொரு பழைய கதை அது

மற்ற எல்லா வீட்டிலும் சொன்ன தேவதைக் கதைகளுக்கும் என் அம்மா சொன்ன தேவதைக்கும் நிறைய வேறுபாடிருந்தது

மற்ற தேவதைகளைப் போல் அவள் நீண்ட மஞ்சள் நிற கூந்தலுடனோ பளிச்சிடும் வெண்ணிற நீள ஆடையுடனோ கண் ணைக் கவரும் வெள்ளை தோலுடனோ இருக்கவில்லை.

அவளது கதையில் எந்தவொரு ராஜ குமாரனின் வருகைக்கான காத்திருப்போ அவன் குதிரையின் காலடி ஓசைக்கான ஏக்கமோ இருந்ததில்லை.

அவள் கறுப்பாயிருந்தாள்
அவள் கண்கள் பெரிதாயிருந்தன
அவள் முடி சுருட்டையாய் கருமையாய் இருந்தது
அவளிடமிருந்த ஒற்றை சட்டையணிந்து
அவள் எப்போதும் அழகாயிருந்தாள்!!
அவள் அனைவரையும் நேசிக்கவில்லை
அநியாயக்காரர்களை அவள் பெரிதும் வெறுத்தாள்.
ஒற்றை வாளேந்தி வேண்டியதை எல்லாம் வேண்டியவர்களுக்கு பெற்றுக்கொடுத்தாள்
அவள் எப்போதும் அழுததில்லை
"அம்மா..தேவதைகள் சண்டையிடுமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா ஆமோதித்திருந்தாள் சந்தேகத்திற்கிடமின்றி!

இடைப்பட்ட சில காலங்களில் கேட்டபோது அந்த தேவதைக்கும் எனக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதாயிருந்தது..

அப்போதெல்லாம் அம்மா தேவதைக்கதை சொல்வதில் நிறைய ஆர்வமாயிருந்தாள்..

ஆனால் கேட்கும் நேரமின்றி தள்ளிப் போனது ஒவ்வொரு கதைகூறல்களும்

இடைவரை நீண்டிருந்த என் முடியை அம்மா இரண்டாக பின்னிக்கொண்டிருந்த ஒரு கணத்தில் பலதடவை தொடங்கி ஒருமுறை கூட முடிக்காத தேவதைக்கதை நினைவுக்கு வந்தது.

“அம்மா நீ சொன்ன தேவதைக்கதை நினைவிருக்கின்றதா?“

“அது கதையென்று யார் சொன்னது?“

“சரி.. அந்த தேவதை இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாள்..“

“அவள் இப்போது குமரியாகிவிட்டாள்..“

“அவள் கறுப்பாக இருக்கிறாள்“

“அவளது சுருட்டை முடி இப்போது இடைவரை நீண்டிருக்கிறது..“

“அவளிடம் இப்போது பல சட்டைகள் இருக்கின்றன..

எதை அணிந்தாலும் அவள் இப்போதும் அழகாகவே இருக்கிறாள்“

“நீ ஒருமுறை கூட அந்தக்கதையின் முடிவை சொல்லவே இல்லை“

அம்மா அழுத்தமாய் சொன்னாள்..

“மகள்கள் இருக்கின்ற வரை தேவதைக் கதைகள் முடிவதேயில்லை”

**அவை இன்னமும் என்னைக் காதலிக்கின்றன.**

என் இரத்தம் எல்லாவற்றையும் விட
இனிப்பதாய்
என் சதைத் துணிக்கைகள்
அமுதத்தினை ஒத்திருப்பதாய்
பருத்த எலும்புகள் கூட
பெரும் பசி தீர்க்க வல்லனவாக இருப்பதாய்
தமக்குள் கூடிக் கூடிப் பேசிக்கொள்கின்றன.
இன்றைய விடியலில்
சற்றே இருள் கவிந்த பின் இரவில்
மறுநாள் விடிவெள்ளி உதிக்க முன் என
என் சிதைதலுக்கான
அவைகளின் கட்டியங்கள்
பல்கிப்பெருகிக் கொண்டே போகின்றன
எனது பிணமும்
எனது ரணமும் கூடவே
யாசிக்கின்றது மரணத்தை
குட்டிப் பருவொன்றிலிருந்து
உள்ளே புரையோடிப் பெருத்திருக்கும்
புண்ணின் வலி
மண்ணோடு கலத்தலே மகத்தானது என்கின்றது..
எனினும்
கடக்க முடியா இப்பெருங்காட்டிடையே
சிறிது சிறிதாய்
சிதைந்த உடலோடு
இழுத்து இழுத்து
இன்னமும் பயணமாகின்றேன்
விலகிப்போங்கள் கழுகுகளே..
என் பிணத்திற்காக காத்திருக்கும்
உங்களுக்காய் மட்டும்
வாழ்ந்து போகச் சித்தப்படுகின்றேன் நான்..
சிறிது சிறிதாயாவது…!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு ஆயுதம்

**திரு.ஆ.தம்மையா**
வரகவி வன்னியூர் குணாளன்
ஒலுமடு.

அவனியை முழுதுமாள ஆயுதம் இரண்டே போதும்
பவவினை ஒளியும் மக்கள் பண்புடன் நீடுவாழ்வார்
செகமுழு துறையும் செல்வம் தீமைக ளகன்று போகும்
தவநெறி தழைத்தே ஓங்கும் சாந்தமே மலருமன்றோ

அன்பொடு பொறுமை என்னும் ஆயுதத்தாலே இந்த
வன்செயல் பொறாமை போகும் மதிப்பிலாக் கொலை களவு மாறும்
இன்பமே எங்கும் சூழும் இடர் துன்பம் நேர்ந்திடாது
தன்னலமின்றி மக்கள் தரணியில் வாழ்வர் என்றும்

கோடியாய் பணம் கொடுத்து குண்(டு)டெறிகணைகலெல்லாம்
நாடியே வாங்கி யிந்த நன்கு வாழ் மக்கள் மீது
தேடியே பகையுண்டாகி தினம் தினம் அழிவதென்னே
கேடிலாப்பொறுமை அன்பு வளரட்டும் மக்கள் நெஞ்சில்

சத்திய ஞானியான புத்தர் யேசுடனே அல்லா உத்தம சிவனார்
இத்தரை மீதில் என்னதான் சொல்லிவைத்தார்
பக்தியாய் இருந்து மண்மேல் பகைமையை நீக்கி நாளும்
உத்தமராகி அன்பும் பொறுமையும் கொண்டு வாழ்வீர்

சாதியும் சமயமென்ற பேதங்கள் மறந்து என்றும்
நீதியும் நேர்மையும் எம் உள்ளத்தே உதிக்க வேண்டும்
ஏதிலா இடுக்கண் யாவும் எம்மை விட்டகல வேண்டும் எப்
போதிலும் ஒருதாய் மக்கள் என்ற போதனை உளத்தில் வேண்டும்

கதிரவன் பேதங்கொண்டு ஒளிதனைத் தருகின்றானோ
மதிஒளி பேதங்கொண்டு மானில வெளிச்சந்தாரா
கெதியுடன் பவனம் தானும் பாகுபாடாக வீசா நன்
மதியுடை நமக்கேன் இந்த வஞ்சனை பொறாமை லோபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தறிவுடைய ஜீவராசிகள் அவனிதன்னில் எங்கனும்
ஒன்றாய் வாழும் இயல்பதை அறிந்து கொண்டும்
சிந்தையில் இருந்திடாது தீய எண்ணங்கள் கொண்டு
ஆணவம் அகந்தை கொண்டு அழிவதேன் மனிதசாதி
விந்தையாய் ஒன்றுமில்லை வேதனையாதுமில்லை சந்ததம்
நல்ல வாழ்வு தரணியில் மனிதர்க்குண்டு
புந்தியில் பொறுமை அன்பு போற்றியே வளர்த்தால் நாட்டில்
வேற்றுமை விபரீதங்கள் விளைந்திடா தென்றும் தானே

கண்ணதால் கண்டு நாளும் கவலையும் துக்கம் கொண்டு
எண்ணிலா மனித ஜாதி இறந்திறந்தழிவதென்னே
திண்ணமாய் உலகில் வாழும் திறமையுண்டதை மறந்து
மண்ணினில் அழிவுதானே வருவதேன் அறியீரோநீர்
உண்மையும் தருமமும் நீதி உலகிலே பெருகுமானால் பண்பொடு
தீமை நீங்கி பாரினில் பரவும் அன்புஇம்
மண்ணிலே அழிவுவாரா வாழும் நாள் மகிழ்வினோடு
எங்கணும் இன்பமுற்று இனியவாழ் வெய்துவாரே

மனம் பெரிது மானம் பெரிது எம் இனம் பெரிது என்னும்
இறுமாப் பொழிந்தால் நாட்டில்
தனம் பெருகும் வளம் பெருகும் மக்கள்
வாழ்வு பெருகும் என்றும் மக்கள்
மனம் குளிரும் வாழ்வில் அஞ்சாமை ஈகை அறிவூக்கம்
தான் பெருகும் என்றென்றும்
இனபேதமின்மை பெருகும் இறைவன் அருள் பெருகும்
மக்கள் வாழ்வில் இன்பம் பெருகும் பெருகுமன்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி வளங்கூறும் பள்ளுப்பாடல்கள்

தொகுப்பு
சைவப்புலவர் , சைவ சித்தாந்த பண்டிதர்
**திருமதி பிருந்தாவனிதை**
ஆசிரியர்,
வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்.

ஈழமணித் திருநாட்டில் வளங்கொழிக்கும் பெருநிலப்பரப்பாக விளங்குவது வன்னிப் பிரதேசம். வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் போன்ற மாவட்டங்கள் இதில் உள்ளடக்கம். இப்பிரதேசம் வேளாண்மையில் சிறப்புற்று விளங்கியமை போன்று வாய்மொழி இலக்கியங்களிலும் தனிச்சிறப்புடையதாக விளங்கியது. இதற்கு ஆதாரமாக பள்ளுப் பாடல்களும் சிந்துப் பாடல்களும் விளங்கு கின்றன.

பள்ளுப் பிரபந்தத்தின் மூல வடிவத்தை பண்டிப்பள்ளு, குருவிப்பள்ளு என்பவற்றில் காணலாம். வாய்மொழி இலக்கியமாகத் திகழ்ந்த இப்பள்ளு பிற்காலத்தில் கற்றறிந்த புலவர்களால் வளர்ச்சி பெற்று பிரபந்தமாக மலர்ந்திருக்கின்றது.

பொதுவாக பள்ளுப்பிரபந்தங்கள் குடியானவன் அவனது மூத்த மனைவி, இளைய மனைவி, பண்ணைக்காரன் ஆகிய பாத்திரங்கள் படைக்கப்பட்டு நாடகச் சார்புடன் நகர்த்தப்படும். ஆனால் பண்டிப் பள், குருவிப்பள் என்பவற்றில் பன்றிகள், குருவிகள் என்பனவே பாத்திரங்களாக விளங்குகின்றன. விவசாயிகளிற்கு எதிரிகளாக எப்பொழுதும் பன்றிகளும் குருவிகளும் விளங்குகின்றன. இதனை உணர்ந்தபோதிலும் அவற்றின் சார்பாய் நின்று அவை எவ்வாறு மனிதர்களைப் பற்றியும் அவர் செய்யும் செயல்கள் பற்றியும் சிந்திக்கின்றன என்று பாடப்பட்டிருக்கின்ற இந்த பள்ளு வகைகள் சுவையும் உண்மையும் உடையதாய் அமைந்திருப்பது வியப்பே. சேனைப் பயிர்செய்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையாக இருந்த காலகட்டத்தில் தோன்றிய "பண்டிப்பள்ளு" பன்றியின் மூலம் சேனைப் பயிர்ச்செய்கை பற்றிக் கூறுவதாக உள்ளது.

**"வனத்தை அறுத்து நெருப்பக் கொழுத்தி**
**மரத்தில் தடிகள் பொறுக்கியே**
**வளைத்து வேலி நிறைத்துக் கறுத்த**
**வளர்நெல் விதைகள் தூவியே"**

என்பதனூடாகவே இது வெளிப்படுகின்றது.

வேளாண்மை வன்னிவள நாட்டில் சிறப்புறவே அமைந்திருந்தது என்பதை

**"மண்ணில் நமது கண்ணுக்கினிய**
**மக்களைத் துரந்தனை யெடி**
**வல் வயலில் செல்லப் பயிரில்**
**நெல் அருந்திடலாமெடி"**

எனப் பண்டிப் பள்ளிலும்

**"அந்த நெல்லுப் பசியடங்காது**
**அகலப் பச்சைப் பாலாடை நெல்லில்**
**பாலடையும் பருவமிது தான்**
**பருகத் தின்று கொளுத்திடு பெண்ணே"**

என குருவிப்பள்ளிலும் கூறப்பட்டிருப்பது சிறப்பிற்குரியது.

இப்பள்ளுப் பாடல்களில் பன்றிகளும் குருவிகளும் விவசாயியின் பயிர்களை நன்றாகவே உண்கின்றன. விவசாயியும் இப்பறவை விலங்குகளில் இருந்து தன் பயிர் நிலத்தை காவல் செய்கின்றான். இவ்வாறு வயலில் காவல் செய்வது தற்காலம் வரை தொடர்கின்றது. தாய்ப்பன்றியின் அறிவுரையிலே

**"ஒட்டும் கச்சையுமாகத் துரத்துவார்**
**சுழட்டிக் சூளினால் ஊட்டி முறிப்பான்**
**குட்டியென்றும் மனமிரங்கான் குறங்**
**கொள்ளியால் உயிர்கொல்வான் மக்காள்"**

என்று பிள்ளைகளிற்கு மனிதர்களின் செயற்பாட்டினை எச்சரிக்கை செய்கின்றது தாய்ப்பன்றி. இவ்வாறே

**"கண்டு வில்லினிலுண்டையை வைத்து**
**சுட்டிப்பாகவே பொட்டென எய்வான்**
**துண்டந் துண்டமாய் அம்பினாலெய்தவன்**
**சுட்டுத்தின்பானே பச்சடியாக"**

என குருவிப்பள்ளில் தாய்க்குருவி தன் குஞ்சுகளிற்கு எச்சரிக்கை செய்கின்றது. இங்கு பறவைகளை இறைச்சியாக உண்ணும் வழக்கம் இருந்ததையும் காணலாம்.

விவசாயிகளின் பயிர் நிலத்திற்குள் பறவைகளும் விலங்குகளும் புத்திசாதுரியமாக உள் நுழைகின்றன என்ற செய்தி பள்ளுப்பாடல்களில் பதிவாகியுள்ளன.

**"•• சொன்ன படியின் உடனே கமத்தைச்**
**சூழ்ந்து பண்டிகள் யாவரும்**
**கறுக்கு விளையும் துறைக்குள் வந்தோம்.**

என பண்டிப்பள்ளிலும்

**"வண்ண வண்ண நட் பட்சிகள் வந்து**
**வயல்கள் தோறும் நிரவுது வாடி**
**கொங்குலம் கிளி மாமயில் செங்கால்**
**குருவிக்கூட்டம் வருகுது வாடி"**

என குருவிப்பள்ளிலும் கூறியிருப்பது நயத்தற்குரியது.

விலங்கு, பறவைகளுக்கு இடையே காணப்பட்ட நற்பண்புகளும் இப்பள்ளு இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. அதாவது மக்கள் தமக்கு தீங்கு செய்த போதிலும் அம்மக்களை வாழ்த்தும் பண்பு இவற்றினிடையே காணப்பட்டது. பண்டிப் பள்ளில்

**"தூங்கும் போது நீங்களிந்த தொல்லுலகில் - மானிடர்க்கு**
**சோபனங்கள் சொல்லி வாழ்த்தி தூங்குங்கோ மக்காள்**
**பாங்குடன் அருந்து சென்னால் மாடு கண்டு நாடு நகர்**
**பாக்கியம் உண்டாகவென்று பாடுங்கோ மக்காள்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மக்களிற்கு எல்லா சௌபாக்கியங்களும் உண்டாக வேண்டுமாறு பண்டி பிள்ளைகளிற்கு கூறுவதாக அமைகின்றது. இவ்வாறே குருவிப்பள்ளில்

**"கொக்குடன் கரடிநோய் கூட நெருங்கிடும் பொழுது**

**வானத்தில் மழையின்றி வாடும் பயிர்கண்டு**

**வானவர் கோனிந்திரர்க்கு பூசை முடித்தோம்**

**இப்படிக்கு பகாரம் பட்சிசாதி நாங்கள் செய்தோம்"**

என இடம்பெறும் வரிகள் மானிடர்க்கு பறவைகள் நன்மை செய்ய முற்படுகின்ற நிலையைக் காணலாம்.

இவ்வாறாக ஈழத்தில் எழுந்த பல்வேறு பள்ளுப் பிரபந்தங்கள் இருந்தபோதும் வன்னி வளத்தினை சிறப்புறக் கூறும் பண்டிப்பள்ளு, குருவிப்பள்ளு ஆகியன இலக்கிய உலகில் பேசப்படாவிட்டாலும் வன்னி நாட்டின் வரலாற்றில் இது உரு முக்கிய இடத்தினை வகிப்பது குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த வெளிநாட்டுப் பேரறிஞர்கள்

தமிழ்மணி. மேழிக்குமரன்

மனித உணர்வுகளையும், சிந்தனைகளையும் எண்ணியது எண்ணியபடி வெளிப்படுத்த உதவுவதுதான் மொழிகள். அப்படிப்பட்ட மொழிகள் உலகில் இதுவரை 7000 வரை கணக்கிடப்பட்டுள்ளது. உலகில் 95 சதவிகித மக்கள் பேசும் மொழிகள் அவ்வட்டார மொழிகளாகத்தான் இருக்கும். அப்படி பேசும் மக்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனுக்கும் குறைவே.

4000 முதல் 5000 மொழிகள் பழங்குடியினரால் மட்டுமே பேசப்படுகின்றன. 3000 மொழிகள் பேசுபவர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்துக்கும் குறைவே. கிட்டத்தட்ட 1,500 பேசும் மொழிகள் சைகை மூலமே பேசப்படுகின்றன. அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை 1000க்கும் குறைவே.

100 பேர்கள் மட்டுமே பேசும் மொழிகள் உலகில் கிட்டதட்ட 500 உள்ளன. உலக மொழிகளில் 4 சதவிகிதம் ஐரோப்பாவில் பேசப்படுகின்றன. 50 சதவிகிதம் ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளில் பேசப்படுகின்றன. அமெரிக்காவில் 14 சதவிகித மொழிகள் வழக்கத்தில் உள்ளன.

சிந்தனைகளை, நுண்ணிய உணர்வுகளைப் பிசிறில்லாமல் அழுத்தம் திருத்தமாக, துல்லியமாக உணர்த்தும் மொழியை மனிதன் அவனவன் தன்னுடைய தாய்மொழி என்கிறான். அப்படிப்பட்ட தாய் மொழிகளை சிறப்பிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21ஆம் தேதியை உலக தாய் மொழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமாக ஐ.நா. சபை கடைப்பிடிக்கிறது.

இந்தியாவில் மட்டும் தாய்மொழிகள் என கிட்டத்தட்ட 850 மொழிகள் பேசப்படுகிறது. இதில் இந்திய மொழிகளில் எதற்கும் இல்லாத தனிச்சிறப்பு தமிழுக்கு மட்டுமே உண்டு. உலகில் இலக்கிய - இலக்கண முடைய மொழிகள் 300. அவற்றில் தொன்மையான மொழிகள் ஆறு. கீப்புறு, கிரேக்கம், இலத்தீன், சீனம்(மண்ட்ரின்), சமஸ்கிருதம், தமிழ் ஆகியவையாகும். கீப்புறு, இலத்தீன், சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளும் வழக்கொழிந்து விட்டன. அவற்றுள் மூவாயிரம் ஆண்டுக ளுக்கு மேற்பட்ட வரலாற்றுடன் இன்றும் தன்னைப் புதுப்பித்துக்கொண்டு இளமை யுடன் இயங்கும் மொழி செம்மொழியான தமிழ் மொழிதான். பிற மொழித் தாக்கமே இல்லாத மொழி என்பதுதான் தமிழின் தனிப்பெரும் தனித்தன்மை. தமிழ் தனக்கென இலக்கண வரைமுறைக ளையும் கட்டுக்கோப்பான இலக்கியக் கோட்பாடுகளையும் கொண்டு இயங்கி வருகிறது. இதனால் வேறு எந்த மொழி அல்லது மொழிகளின் துணை தேடவோ அல்லது அவற்றின் செல்வாக்கோடு இயங்கும் அவசியம் அறவே ஏற்படவில்லை.

தமிழ் இலக்கியமும், இலக்கணமும் தனக்கெனத் தனிநோக்கும் போக்கும் உடையது. அனைவரும் ஏற்கும் பொதுமைப்பண்பு உள்ளது. தென்னக மொழிகளான கன்னடம், தெலுங்கு, துளு, மலையாள மொழிகளுக்கு மட்டுமல்லாமல், பிராகுயி போன்ற ஆதிகுடி மக்களின் மொழிகளுக்கும் தமிழ்மொழி தாயாக விளங்கி வந்துள்ளது.

உலகத்து மொழிகளிலே சமயச்சாயலின்றி 2000 ஆண்டுகளுக்கு முன்பு மானுட வாழ்வை அறம் - புறம் எனப் பிரித்து சங்க இலக்கியங்களை உருவாக்கிய பெருமை தமிழ் மொழிக்கு உண்டு. உலக நீதி நூலான திருக்குறளுக்கு இணையாக உலகில் வேறு ஒரு நூல் இதுவரை தோன்றவில்லை என்பதே தமிழுக்கு கிடைத்த தனிப்பெருமை.

உலகச் செம்மொழிகளின் வரிசையில் தமிழுக்கு ஈடில்லாத ஒரு தனித் தன்மை யுண்டு. ஈராயிரம் ஆண்டுப் பழமைவாய்ந்த செவ்விய இலக்கியங்களின் களஞ்சிய மாகவும், மூத்த திராவிட இலக்கிய அணிகலன்களின் கவசமாகவும் தமிழ்மொழி திகழ்கிறது. எண்ணற்ற கவிதைகள், செய்யுள்கள், பாடல்களின் கோவைகளைக் கொண்ட இம்மொழி மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே சிறந்த இலக்கியத் தளத்தை கொண்டி யங்கிய மொழியாகும். அதற்கு சாட்சியாக எமக்கு தொல்காப்பியம் விளங்குகின்றது. தங்குதடையின்றிப் பொங்கும் வளமையு டனும், பொலிவார்ந்து ஓங்கிய வளர்ச்சி யுடனும் நூற்றாண்டுகள் பல கடந்தாலும் இன்றும் தன் சீரிளமைத் திறம் குன்றாமல் தமிழ் மொழி சிறந்து விளங்குகிறது.

பொங்கித்ததும்பும் நதியின் போக்கிற்கேற்பப் பல்வேறு இணைப்புகள், பகிர்வுகள் வாயிலாகத் திராவிட மொழிகளின் தொகுப்பில் உயரிய இடம்பெறும் மொழியாகத் தமிழ்மொழி மிளிர்கிறது. இந்தியாவின் வடமாநிலங்களில் வழங்கிய சமஸ்கிருத மொழிக்கு நிகராக, உயிரோட் டத்தோடு உலவி வரும் மொழியாக நிலைபெற்று, அந்தந்த நாட்டுப் பண்பாட்டு மாறுதல்களுக்கு இசைவாகப் பிறமொழிக ளுடன் தக்கஉறவினையும், அதேசமயம் தன்னுடைய தனித்தன்மை வாய்ந்த இயல்புகளைத் தக்கவைத்துக் கொண்டும், ஆற்றல் குன்றாத நிலையில் தமிழ்மொழி திகழ்கிறது.

அண்ணல் காந்தியடிகள் "எனது வாழ்க்கையில், ஏதாவது ஒன்றைப் பற்றி நான் வருந்துகிறேன் என்று சொன்னால், அது உயர்ந்த மொழியாகிய, தமிழ் மொழியைக்கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு எனக்கு வாய்க்கவில்லையே, என்பதுபற்றித்தான்" என்று தமிழ் மொழியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைப்படுத்தி கூறியுள்ளார். அத்தகைய இனிமையும் தனித்தன்மையும், வாய்ந்தது தமிழ்மொழி.

தமிழின் வரலாற்றுப்பாதையில் வெளிநாட்டாரும் தமிழின் பெருமை யுணர்ந்து அதனைப் படித்துள்ளனர். தமிழ் மொழியை உலகம் அறியச் செய்துள்ளனர். தமிழை வளர்த்துள்ளனர் என்பது நமக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

தமிழ்வளர்த்த வெளிநாட்டுப் பெரியார்களில் ஜி.யு.போப் போற்றத்தக்கவராகும். 1820இல் இங்கிலாந்தில் பிறந்து 1918இல் மறைந்த போப் அவர்கள் வெஸ்லியன் சங்கத்தாரால் சமயத்தொண்டு செய்வதற்காக தமிழ் நாட்டுக்கு அனுப்பபட்டார். அங்கு அவர் தமிழமொழியை ஐயந்திரிபுறக்கற்றார். அதன்பயனாக திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தமிழின் பெருமையை உலகறியச் செய்தார். நாம் திருவாசகம் என்னும் தேன் என்கிறோம். திருவாசகத்தைப் போல சுவைமிக்க இலக்கியம் உலகில் இல்லை என தெரிவித்தவர் போப். தாம் இறந்தபின்பு நான் ஒரு தமிழ் இலக்கிய மாணவன்; Rev. G.U.Pope, a student of Tamil Literrature" என்று தனது கல்லறையில் எழுதுமாறு வேண்டிக் கொண்டார்.

அடுத்து கால்டுவல். இவர் 1815ம் ஆண்டு பிறந்து 1891ம் ஆண்டுவரை வாழ்ந்தவர். கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பவந்த கால்டுவல். தமிழ் கற்றார். தமிழின் பெருமையை உணர்ந்தார். தமிழ் ஓர் உயர்ந்த செம்மொழி என்று கண்டு கொண்டார். இவர் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற ஆராய்ச்சி நூலை எழுதினார். இதன்மூலம் தமிழ்மொழியின் செம்மையை உலகில் பரப்பினார்.

அடுத்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவராகும். 1680இல் பிறந்து 1757இல் மறைந்த இவரின் இயற்பெயர் கான்சன்டைன் பெஸ்கி என்பதாகும். தமிழ்கற்றுக் கொண்டார். தமிழின் மீதுள்ள காதலால் தனது பெயரை வீரமாமுனிவர் என்று வைத்துக் கொண்டார். தமிழில் முதன்முதலில் அகராதியை உருவாக்கியவர். சதுரஅகராதி என்பது அதன் பெயராகும். தேம்பாவணி என்னும் காப்பியத்தையும், வேதவிளக்கம், சித்தேரி அம்மன் அம்மானை, அடைக்கலநாயகி வெண்கலிப்பா, அடைக்கமாலை, திருக் காவலூர் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, பரமார்த்த குரகதை ஆகிய நூல்களை தமிழில் எழுதினார். தொன்னூல் விளக்கம் என்னும் தமிழ் இலக்கண நூலை எழுதிய இவர் திருக்குறளை லத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார்.

பெப்ரீசியஸ் என்னும் அறிஞர் 1711ம் ஆண்டில் பிறந்து 1791ம் ஆண்டுவரை வாழ்ந்தார். இவர் தமிழ்கற்றுத் தேர்ச்சி பெற்றார். அதன்பயனாக முதலாவது தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ் அகராதியை தொகுத்துத் தமிழ் உலகுக்கு வழங்கினார்.

ஜான் மர்டாக் என்ற பெருந்தகை 1819இல் பிறந்து 1904இல் மறைந்தார். இவர் அன்றைய காலத்தில் அச்சான தமிழ் நூல்களைத் தொகுத்து நூற்தொகையாக வழங்கினார்.

சாமுவெல் எப்.கிறின் என்ற பேரறிஞர் 1822இல் பிறந்து 1884வரை வாழ்ந்தார். தமிழ்கற்றுத் தேர்ந்த இவர் முதன்முதலில் தமிழில் மருத்துவ நூலைப் எழுதி நமக்களித்த வெளிநாட்டுப் பெருந்தகை யாவார்.

டாக்டர் கிரௌல் அவர்கள் 1838இல் ஜேர்மனியில் பிறந்தார். 1879ம் ஆண்டு வரை வாழ்ந்தார். தமிழ்கற்றுப் பாண்டித்தியம் பெற்றார். அதன்பயனாக திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். திருக்குறளை ஜேர்மன் மொழியாகிய டொச் மொழியில் முதன் முதலில் மொழிபெயர்த்தவர் இவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்.ஏ.பாப்ளி என்ற அறிஞர் 1879ம் ஆண்டு பிறந்தார். 1960இல் மறைந்தார். இவர் தமிழ் கற்றுக்கொண்டதனால் திருக்குறளின் பெருமையைக் கண்டு வியந்தார். அதன் பயனாக திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த லாசரஸ் என்ற பெருந்தகை தமிழ்கற்றுத் தேர்ந்து திருக்குறளை ஆங்கிலத்தில மொழி பெயர்த்தார்.

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈராசு பாதரியார் அவர்கள் சிந்துவெளி நாகரீகம் என்பது திராவிட நாகரீகம் என்று ஆதாரங்களுடன் நிறுவினார்.

தமிழ் தமிழர் பற்றிப் பிறமொழியினருக்குச் சிறப்பாக அறிமுகம் செய்துவைத்தவர்களில் செக்கோசுலேவியா நாட்டைச் சார்ந்த கமில் சுவலபில் அவர்களுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. கமில் சுவலபில் அவர்கள் செக்கோசுலேவியா நாட்டில் உள்ள பிராகா (Prague) என்னும் மாநகரில் 17-11-1927 ஆம் ஆண்டில் பிறந்தவர். கமில் சுவலபில் அவர்கள் பல மொழிகளை அறிந்த அறிஞர். தமிழ்மொழியை நன்கு படிக்கவும் எழுதவுமான ஆற்றல் பெற்றவர். திராவிட மொழியியல், சங்க இலக்கியம் பற்றி விரிவாக ஆங்கிலத்தில் எழுதியவர். தமிழ் வழக்குச்சொற்கள் பற்றியும் எழுதியுள்ளார். தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியில், நாட்டுப்புறவியல், பக்தி இலக்கியம், புத்திலக்கியம், பாரதியார், பாரதிதாசன் பாடல்களில் நல்ல பயிற்சியுடையவர். இவர் அப்பாடல்களின் சிறப்பைப் பிறமொழியினருக்கு எடுத்துரைத்தவர். ஆங்கிலத்திலும் செக் மொழியிலும் மொழிபெயர்த்தவர். தமிழ் இலக்கணத்தையும், சங்க இலக்கியத்தையும் தமிழ் இலக்கிய வரலாற்றையும் வரன்முறைப்படுத்தி ஆங்கிலம் வழியாக உலகிற்கு வெளிப்படுத்தியவர்களில் கமில் சுவலபில் குறிப்பிடத்தகுந்தவர்.

தமிழின் மிகப்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்தை மொழிபெயர்க்கும் அளவிற்கு இவருக்குத் தமிழ்ப்புலமையும் ஆங்கிலப்புலமையும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சான் இரால்சுடன் மார் என்ற பேரறிஞர். இங்கிலாந்தில் உள்ள சர்ரே மாநகரத்தில் உள்ள இலெதர்கெட்டு என்ற ஊரில் 05.07. 1927 ஆம் ஆண்டு பிறந்தவர். தமிழ் கற்று, தமிழின் தொன்மை இலக்கியங்களான சங்க இலக்கியங்களை முதற்கண் பட்டப்படிப்புக்கான ஆய்வுக்கு உட்படுத்திய ஐரோப்பிய நாட்டு அறிஞர் சான் இரால்சுடன் மார் அவர்கள் ஆவார்.

1954 முதல் மார் தமிழ் விரிவுரையாளராக இலண்டன் பல்கலைக்கழகத்தில் 1992 வரைபணியாற்றினார். இங்குப் பணிபுரிந்த பொழுது தமிழ்மொழி, இலக்கியங்களைக் கற்பித்ததுடன் தமிழிசையான கர்நாடக இசை, இந்தியக் கலைகள், தொல்லியல் துறை ஆய்வுகளில் கவனம் செலுத்தினார்.

ஈவாவில்டன் (Eva Wilden) அவர்கள் ஜெர்மனியில் உள்ளஒப்லேடன் (Opladen) என்னும் ஊரில் 28.02.1965 இல் பிறந்தவர். பட்டதாரியான இவர் ஜேர்மனியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றிய சீனிவாசன் ஐயரிடம் தமிழும் இலக்கியமும் எட்டு ஆண்டுகள் பயின்றார். புதுவையில் உள்ள கோபாலய்யரிடம் சங்க இலக்கியங்கள் பயின்றார். அதன் பயனாக குறுந்தொகை, நற்றிணை என்ற இரண்டு நூல்களில் ஈவா அவர்களின் கவனம் குவிந்தது. இதில் குறுந்தொகை பற்றியபாடல் பகுதிகளில் பாடவேறுபாடுகள் பல இருக்கக் கண்டு இதற்குச் செம்பதிப்பு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டார். அதுபோல் நற்றிணையில் உள்ள பாடவேறுபாடுகள், உரைக்குறிப்புகளில் வேறுபாடுகள் இருக்கக்கண்டு அதனையும் செம்பதிப்பாகக் கொண்டுவரும் முயற்சியில் கடுமையாக உழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஷியாவைச் சேர்ந்த மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் தமிழ் பேராசிரியராக இருப்பவர் அலெக்சாண்டர் டுபியன்ஸ்கி. 1965ம் ஆண்டு திருக்குறளும், சிலப்பதிகாரமும் ரஷிய மொழியில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டபோது அவற்றைப் படித்து தமிழ்மீது தீராப் பற்றுகொண்டார். இதையடுத்து உடனடியாக தமிழ் கற்றுக் கொண்டார். தமிழைக் கற்றுத் தேர்ந்த அவர், ஞானத்தின் மொழி தமிழ் எனதமிழின் புகழ் பாடத் தொடங்கினார். மேலும் தமிழ் மொழி, இலக்கியம் குறித்த ஆய்விலும் ஈடுபட்டார். எந்தவித சிந்தனைகளையும், உணர்வுகளையும் மிகச்சரியாக வெளிப்படுத்தும் ஒரேமொழி தமிழ் என்பது அலெக்சாண்டரின் கூற்று. 1969ம் ஆண்டு சங்க இலக்கியத்தை ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார் அலெக்சாண்டர்.

இங்கிலாந்திலிருந்து கிறிஸ்தவப் பாதிரியாராக தமிழ்நாட்டுக்குச் சென்றவர் திரு.மக்லெசன் அவர்கள். அவர் அங்கு தமிழ் கற்றுணர்ந்தார். அதன்பயனாக பெரியபுராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இவர் இப்போது நம்மிடையே இங்கிலாந்தில் வாழ்ந்து வருகிறார் என்பது நமக்கெல்லாம் பெருமையாகும்.

வெளிநாட்டுப் பேரறிஞர்கள் போற்றி வளர்த்த நமது தமிழ்மொழியை நாமும் போற்றி அடுத்த சந்ததிக்கும் எடுத்துச் செல்ல வேண்டியது நமது தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பண்புத்தரமும் விழுமியக்கல்வியின் தேவையும்

**திரு.ந.பார்த்தீபன்**
சிரேஸ்ட விரிவுரையாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.
வவுனியா.

"கல்வியின் முக்கிய நோக்கம் நன்னடத்தையை உருவாக்குவதும் மனதின் ஆற்றலை உருவாக்குவதும் ஒருவர் தன் சொந்தக்காலில் நிற்கும் திறனை வளர்க்கச் செய்வதுமாகும்" என சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டார். "வெறும் எழுத்தறிவு மட்டும் கல்வி ஆகாது. அதன் பணியும் அதுவல்ல. நன்னடத்தையை விருத்தி செய்வதுதான் உண்மையான கல்வி" என்று மகாத்மாகாந்தி குறிப்பிட்டார். கல்வி, மாணவர்களிற்கு அறிவார்ந்த பயிற்சி அளிப்பது சரியே. ஆனால் அது கல்வியின் ஒரு பகுதி மட்டுமே. மற்றொரு பகுதியானது இளம் மனங்களில் வாழ்வின் விழுமியங்களைச் செயற்படுத்துவது அவசியம் என தத்துவஞானி ஜே. கிருக்ஷ்ணமூர்த்தி குறிப்பிட்டார். மேலும் ஜே.கே இத்தகைய செயற்பாடுகள் இன்றி அடையப்படும் கல்வி வெறும் வெற்றுக் கல்வியாகும் என வலியுறுத்தினார். கல்வியியலாளர் டாக்டர் இராதாகிருஸ்ணன் "உன்னத மரபுகளையும் அன்பையும் இரக்கத்தையும் ஒருவரிடம் பேணி வளர்க்கவும் முழுமையான வாழ்க்கை வாழ உதவுவதுமே கல்வியாகும்" என்று குறிப்பிட்டதோடு, கல்வி என்பது தேர்வில் வெற்றி பெறுவது மட்டுமல்ல. பட்டம் பதவிகளை பெறுவது மட்டுமல்ல. மாறாக எல்லையற்ற இயற்கை அழகை ரசிப்பதும் நேசிப்பதும் கூடக் கல்வியாகும் என்றார். இவ்வாறு கல்வியின் நோக்கம் பற்றி அனுபவ ரீதியாக அறிவு பூர்வமாக ஆழமான கருத்துக்களைக் கூறிய போதிலும் இன்றைய எமது கல்வியின் நிலை என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையின்மை, நீதி பேணப்படாமை, காட்டிக்கொடுத்தல், பொது நலனில் அக்கறையின்மை, அறத்திற்கு அன்றி பலத்திற்கே பயந்து அடங்கும் தன்மை, அயலான் வீழ்ச்சியில் மகிழ்ச்சி காணும் தன்மை, குடும்ப நலனில் அக்கறை யின்மை, அறநெறிக்கு ஒவ்வாத வகையில் பணம் தேடும் தன்மை இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம். இவற்றுக் கெல்லாம் காரணத்தைத் தேடினால் இதற்கு விழுமியப் பண்புகள் குறைந்து போனதே முக்கியமாகத் திகழ்கின்றது. குறிப்பாக மனித நடத்தையின் நன்மை, தீமைகளை நிர்ணயிப்பது விழுமியமாகும். விழுமி யங்கள் மனித வாழ்வை நெறிப்படுத்தி வாழ்விற்குப் பொருள் கொடுக்கின்றன. மனித வாழ்விற்கு பொருள் கொடுக்கும் சில முக்கிய செயற்பாடுகளைக் குறித்து நிற்கும் சொற்களில் அன்பு, பணி, தியாகம், மதிப்பீடு என்பன குறிப்பிடத்தக்கன. விழுமியம் என்பது ஒரு சம்பவத்தை அல்லது கருத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்குச் சார்பாக அல்லது எதிராக எடுக்கப்படுகின்ற மனப்பாங்காகும். இந்த மனப்பாங்கு தனியாள் அல்லது ஒரு குழு பற்றியதாக அல்லது ஒரு நிறுவனம் பற்றியதாக அமையலாம்.

இன்றைய கல்வியில் அளவுத்தரம் அதிகரிக் கின்றது. கல்வியானது அளவுத்தரத்தினால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. பண்புத்தரத்தையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். "ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதான் வளர்ச்சி" என்பது போல் அளவுத்தரம் அதிகரிக்கும் அதே வேளை பண்புத்தரமும் அதிகரிக்க வேண்டும். இன்று மாறாக பண்புத்தரம் குறைந்த கொண்டு செல்கின்றது என்ற கருத்துக்கு மறுப்பேதும் இருக்காதென நம்பலாம். ஒரு தனிமனிதன் அறிவியல் தொழில்நுட்ப மேம்பாடுகளில் உயர்ந்து விளங்கினால் அவன் வல்லாண்மை மிக்கவனாக கருதப்படலாமேயொழிய நல்லவனாகத் தோன்ற முடியாது. இது சமூதாயத்திற்கும் பொருந்தும். ஏனெனில், சமுதாயம் என்பது தனிமனிதர்களின் கூட்டுத்தொகுப்புத் தானே. ஆகவே தனிமனிதன் மனித நேயம் மிக்கவனாக வாழ்ந்தால் சமுதாயமும் மனித நேயம் கொண்டதாக அமையும். ஆனால் இன்று தனிமனித விழுமியச் சிதைவு, சீர்கேடு காணப்படுவதால் அது சமுதாயத்தையும் தொற்றிக்கொள்கின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் வலிமை ஆக்கிரமிப்பு ஒப்பிடல் போட்டி பொறாமை பதற்றம் போன்ற இயற்கையையும் சமுதாயத்தையும் பாழ்படுத்தும் மனப்பாங்குகளை கொண்டி ருப்பின் விழுமியம் எப்படிக் காப்பாற்றப்படும். இவை பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். வெறுமனே சிந்திப்பதோடு மட்டுமல்லாது அதற்கு தீர்வுகாண முயல வேண்டும்.

"மனிதனின் செல்நெறியைக் காட்டும் வெளிச்சம் விழுமியம்" என்றார் சிற்றம் (Sitram) என்ற அறிஞர். "விழுமியம் என்பது கலாசாரத்தின் அடிப்படை அம்சம்" என்று குறிப்பிடுகின்றார் புறோசர் (prossar) என்ற அறிஞர். விழுமியங்கள் படிப்படியாக விழுமிய முறைமையை பெறும் போது விழுமிய முறைமை சமூக முறைமைக ளோடு தொடர்பு கொள்கின்றன. சமூக முறைமைகளின் ஆரோக்கியமான மாற்றம் இடம்பெறும் போது அது தனிமனித நடத்தையிலும் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தும். இவ்வாறு ஒவ்வொரு தனிநபரிலும் இடம்பெறும் மாற்றம் சமூக மயமாக்கலாக மாற்றமுறும். சமூக மயமாக்கலில் தன்னை இணைத்துக் கொள்ளும் ஒவ்வொருவரும் ஒழுக்கம், கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்றுவார். பெற்றோர்கள் பின்பற்று கின்ற உயர்வான விழுமியங்களை பிள்ளைகளும், ஆசிரியர்கள் காட்டுகின்ற முன்மாதிரியான விழுமிய நடத்தைகளை மாணவர்களும், சமூகத்திலுள்ள முற் போக்குச் சிந்தனை கொண்டவர்களின் போக்குகளை இளைஞர்களும் பின்பற்று வதன் ஊடாக உயர் சமூக விழுமியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சமூதாயத்தைக் கட்டியெழுப்பலாம். ஆனால் இந்த முன்மாதிரிகள் விழுமியங்களைச் சீரழித்து சிதைக்கும் போது வளர்ந்து வரும் இளைஞர் தலைமுறையினரும் பிழைவழி போக முயற்சிப்பதை தடுக்க முடியாது. விளைவு "இச்சமூகம் வாழப் பொருந்தாது" என்ற நினைப்பே

இன்றை கல்வி அதிவிரைவான தொழில் நுட்ப வளர்ச்சிகளை சமூதாயத்தில் ஏற்படுத்தி இருப்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அடிப்படை பண்புகள் வலுவிழந்து போகின்றமையை எல்லோரும் ஏற்றுக் கொள்ள தான் வேண்டும். உதாரணமாக கையடக்கத் தொலைபேசியைக் குறிப்பிடலாம். இன்று கையடக்கத் தொலைபேசி அத்தியாவசியப் பொருளாக மாறியுள்ளது. அதேவேளை அது தொல்லை பேசியாக பூதகரமாக வளர்ந்து நிற்கின்றதே. விழுமியப் பண்புகளை ஒவ்வொருவரும் கொண்டிருந்தால் இந்த கீழ்நிலை ஏற்பட்டிருக்காது. எதிர்கால சமுதாயம் பெருமளவு இயந்திரங்களை சார்ந்திருக்கும் நிலைமை உருவாகி வருகின்றது. இதனை கட்டுப்படுத்த முடியாதாயினும் மனித நேயத்தோடு பயன்படுத்தும் மனப்பாங்கினை வளர்க்கத் தவறினால் மனித சமுதாயம் அழிவையே எதிர்நோக்க வேண்டி வரும். மனிதம் சார் பண்புகள் குறையத் தொடங்க இயந்திரங்கள் மனிதனை ஆட்சி செய்ய அமைதி நிம்மதி அற்ற ஒரு சமூகமாக துன்பப்பட வேண்டிய நிலை ஏற்படுவதையும் தடுக்க முடியாத நிலை ஏற்படும். இது சகிப்புத்தன்மை , பரிசீலிக்கும் மனப்பாங்கு, புரிந்துணர்வு, ஒருமைப்பாடு, வேறுபாடு பாராட்டாத தன்மை, கூட்டுறவு, சுதந்திரம், அச்சமின்மை, இயற்கையை நேசித்தல் போன்ற நற்பண்புகள் படிப்படியாக எம்மை விட்டுப் போய்க்கொண்டிருக்கின்ற நிலையை உருவாக்கும்.

விழுமியச் சிதைவுக்கு இன்றுள்ள கல்வி முறைமையும் தூண்டுகோலாக அமைகின்றது. அன்றைய கல்வி படிக்கும் பாடத்தை புரிந்து கொள்ளச் செய்ததுடன் அதனூடாக முடிந்தவரையில் மனித நேயப்பண்புகளை ஊட்டி ஒருவருடைய ஆளுமையை வளர்த்து சராசரியாக நல்ல பயனுள்ள வாழ்வை நடாத்துமளவிற்கு அவரை வழி நடத்தியது. ஆனால் இன்றைய கல்வி வெறுமனே நூல் அறிவைத் தேடுவதாக, அறிவியல் தொழில்நுட்ப வல்லமையை பெறுவதாக, உயர் பதவி பட்டம் பெறுபவர்களாக மாற்ற முயல்கின்றது. இவர்கள் பெறும் கல்வியும் திறமையும் தமது நலத்திற்காக சுகபோகத்திற்காக பயன்படத் தொடங்குகின்றது. சமூகப்பற்றில்லாத மனித நேயம் இல்லாதவர்களாக மாறும் கூட்டமொன்று பெருகுகின்றது. தனிமனிதர்கள் சுரண்டப்பட்டு சமுதாயம் பின்தள்ளப்படும் நிலைமை உருவாகிக்கொண்டு வருவதை எல்லோரும் பார்க்கிறோம். போட்டித்தன்மை எல்லாத் துறைகளிலும் உருவாக பாடசாலைக் கல்வி வித்திடுகின்றது. இதற்கு எமது நாட்டுக் கல்வித்திட்டமும் முக்கிய காரணம் எனலாம். ஐந்தாம் தரப் புலமைப்பரீசில் பரீட்சையும், க.பொத (சா.த) பரீட்சையும், க.பொத (உ.த) பரீட்சையும் கல்வியின் அளவுத் தரத்தை கணிப்பிடுகின்றன.

பண்புத்தரம் விழுமியக் கல்வியின் தேவை உரைப்பட்டதாகத் தெரியவில்லை. தனியார் கல்வி நிலையங்களின் அதீத வளர்ச்சி, விழுமியக் கல்விக்குக் சாவுமணி அடிப்பதை தனியார் கல்வி நிறுவனங்களும் ஏற்கத்தான் வேண்டும். இதற்கு அரச போக்குவரத்துச் சேவை போதுமானதாக இருந்தால் ஏன் தனியார் போக்குவரத்துத் துறையை மக்கள் நாடவேண்டும் என்ற வினாவை எழுப்பிப் பதில் பெறுவதையும் குறிப்பிடலாம். பாடசாலை கல்வியில் காணப்பட்ட குறைபாடும் தனியார் கல்வி நிலையங்களின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம். எனினும் விழுமியக் கல்வியைச் சீரழிப்பதில் தனிநபர் கல்வி நிலையங்களின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது. பரீட்சைக்குத் தயார்படுத்தல், பரீட்சைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுபேறுகளின் குறிகாட்டி. கடதாசித் தராதர எதிர்பார்ப்பு போன்ற இன்னோரன்ன காரணங்கள் தனியார் கல்வி நிலையங்களை துரிதமாக வளர்ச்சியடையச் செய்கின்றன. இப் போட்டி வியாபார விளம்பர நோக்கங்களை பயன் படுத்தி பெற்றோர்களையும் பிள்ளைகளையும் தடுமாற வைக்கின்றது. உதாரணமாக விளம்பர வியாபாரப் போட்டியினால் "சூரியன் மட்டும் கேளுங்கள்" என்று ஒலிபரப்பப்படுவதை கேட்கின்றோம். எப்படி விழுமியத்தை வளர்ப்பது. தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் எதனை தெரிவிப்பது என்பதைத் தீர்மானிப்பது அவர்கள் தானே. இந்த விளம்பர உத்தி தனியார் கல்வி நிலையங்களில் ஏனைய ஆசிரியர்களைத் தாக்கும் நிலையை ஏற்படுத்துகின்றது. விழுமியத்தை எப்படிக் காப்பது?

கல்விச் சிந்தனை மிகக் குறுகிய வட்டத்திற்குள் அடக்கப்படுவது இன்றைய கல்வியின் குறைபாடு. மாணவர்கள் தமது ஆர்வம், ஆற்றல், ஆளுமை என்பவற்றைத் தெரியாது தங்களால் வெற்றி காண முடியாத துறைகளில் போட்டியிட்டு தோல்வி கண்டு தோல்வியைத் தாங்கும் மனப்பாங்கும் இன்றி மனச்சோர்வு, உளத்தாக்கம் என்பவற்றுக்கு ஆளாகிறார்கள். தொழில், தொழில்கல்விக்கான வாய்ப்பு, அதற்குத் தங்களைத் தயார்படுத்தும் ஆற்றல் அற்றவர்களாக மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக மாறியுள்ளனர். இவ்வாறு மாணவர்கள் தங்களது ஆளுமையை இழக்கின்றார்கள். விழுமியக் கல்வியில் வளர்ச்சி பெற ஆளுமை துணையாக இருக்கிறது. மாணவர்கள் தமது சமநிலை இழப்பதனால் விழுமியத்திலும் சிதைவு ஏற்படுகின்றது. பல்கலைக்கழகம் தான் இறுதி இலக்கு அது இல்லையெனில் வாழ்க்கையே இல்லை என்ற குறுகிய சிந்தனை மாணவர்களிற்கு மட்டுமல்ல பெற்றோர்களுக்கும் ஏன் ஆசிரியர்களிற்கும் காணப்படுகின்றது. இன்று பட்டதாரி ஆவதற்குப் பல வழிகள் உண்டு பல்கலைக்கழகம் என்ற இலக்கை மனதில் உறுதியாகக் கொள்வதால் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் பிள்ளைகள் ஈடுபடுவதை பெற்றோர்களும் ஆசிரியர்களும் தடுக்கின்றனர். உடல் உள உறுதி பெற வெற்றி தோல்விகளைச் சமமாக மதிக்க பயனுள்ள பொழுது போக்குகளில் ஈடுபட்டு மன அமைதி பெற இன்றைய கல்விப் போட்டி இடம் கொடுப்பதாயில்லை "மாலை முழுதும் விளையாட்டு" என்ற மகாகவி பாரதி சொன்ன ஆரோக்கியமான சிந்தனை இன்று ஆண்டு ஒன்று பிள்ளைக்கே மறுக்கப்படுகின்றது புத்தகச்சுமை, ஓய்வில்லாத படிப்பு, மற்றவர்களுடன் ஒப்பீடு, நெருக்குவது என்பன பிள்ளைகளை பாதிக்கின்றன. விழுமியப் பண்பு பற்றி யாரும் அலட்டிக் கொள்வதில்லை. கை நிறையச் சம்பளம் எடுக்கும் தொழிலைப் பிள்ளை பெற்றுக் கொண்டால் போதும். தாங்களும் வசதியாக வாழலாம். பிள்ளையும் நிம்மதியாக வாழும் எனப் பெற்றோர்கள் போடுவது தப்புக் கணக்கென்று உணரத் தயாரில்லை. விளைவு மூத்தோரை கனம் பண்ண மட்டுமல்ல. பெற்று வளர்த்த தாய் தந்தையையும் ஏனென்று கேட்காத பிள்ளைச் சமுதாயம் ஒன்று உருவாகிப் பல காலமாகி விட்டது என்பதை சரியாக உணரத் தவறுகின்றோம்.

முடிவாக சமூகப்பண்புத் தரங்களான பொது நலம் பேணல், ஒற்றுமையுடன் செயற்படல், ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கல், தொழில் கல்விக்குரிய இடம் வளங்குதல், கலை கலாசார செயற்பாடுகளினூடாக மனித நேயம் பேணுதல், அதற்குரிய நாகரீக மோகத்தை தவிர்த்தல், சுயத்தை காத்தல், தேசிய நலன் தொடர்பான நேர்கணிய மனப்பாங்கை வளர்த்தல் போன்றனவற்றை வளர்க்க விழுமியக் கல்வியை போதிக்க வேண்டும். கல்வி என்பதன் ஆங்கிலப் பதம் Education என்பதாகும். இதன் மூலச்சொல் இலத்தீன் மொழியில் உள்ள Educare என்பதாகும். அதாவது இது ஒருவரின் குறைப் பண்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியை குறிப்பதாகும். விஞ்ஞான ரீதியாகவும், ஆராய்ச்சி பூர்வமாகவும் உண்மையென அறிவுறுத்தும் வாழ்வின் விழுமியங்களை வழங்குவதும் கல்வியின் நோக்காகும் என்பதற்கேற்ப அரசும், தனியார் கல்வி நிறுவனங்களும், பாடசாலைகளும், சமூக நிறுவனங்களும், குடும்பமும் இணைந்து செயற்பட வேண்டும். தொழில்நுட்பத்தில், இணையத் துறையில் பெரும் சாதனைகளை நாங்கள் நிகழ்த்திக் கொண்டிருந்தாலும், எண்ணிக் கையில் அதிக கல்விமான்களை உருவாக்கினாலும், மனித நேயமற்ற இயந் திரங்களோடு, இயந்திரமாக இயங்குகின்ற றோபோக்களைத்தான் உருவாக்கு கின்றனர் என்பதை மனம் கொள்ள வேண்டும். இனியாவது சமூகப் பண்புத் தரத்தை தரும் விழுமியக் கல்வியை வளர்க்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னீரை வாழி அனிச்சமே!

கலாபூசணம் பண்டிதை
செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம்

செம்மொழியாம் நம் தமிழ் மொழிக்குப் பெருமையையும் ஏற்றத்தையும் தந்து, இன்றும் அழியாப் புகழுடன் நின்று நிலவுவதுடன், கவிஞர்களின் கைவண்ணத்தில் காலங்காலமாக மெருகூட்டப் பெற்று ஒளிபெற்றுத் திகழ்வது திருக்குறள்.

திருக்குறள் பல நூற்றாண்டுகள் கடந்தும் இன்றும் நம்மிடையே வாழ்வதற்குக் காரணம் அதன் பாடுபொருள். சங்க இலக்கியங்களிற்கும் அதன் பின் எழுந்த ஏனைய பேரிலக்கியங்களிற்கும் வேண்டிய மையக்கருத்தை கவிதை வடிவில் குழைத்துத் தந்துள்ளமையே.

"நல்ல கவிதைக்கு வெற்றியைத் தருவது கரு மட்டுமன்றி அதன் உருவும்" என்றார் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள்.

மாபெரும் சொல்வினைக் கவிஞராகிய திருவள்ளுவர் பல்வேறு அமைப்பு, உத்திகளை மூலதனமாகக் கொண்டு திருக்குறளைப் படைத்தார். அதனால் தான் திருக்குறள் எஞ்ஞான்றும் நின்று நிலவுகிறது.

"அறம்தகளி ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல் தீதண்டு குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு"

என்பது "திருவள்ளுவமாலை" (47) திருவள்ளுவர் தமது நூலில் காமத்துப் பாலுக்குச் சிறப்பான ஓர் இடத்தைத் தந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வாழ்வு சிறக்க ஏற்றப்படும் அகல் விளக்கில் அறம் - அகலாகவும், பொருள் - திரியாகவும், இன்பம் - நறுநெய்யாகவும், தீ செஞ்சொல்லாகவும், குறட்பா தண்டாகவும் அமைந்துள்ளது என்பது இந்நூல் தரும் கருத்து.

எனவே வள்ளுவர் காமத்துப்பாலை சிறந்த நெய்யாகக் கருதியே படைத்தார் என்பது தெளிவு காமத்துப் பாலாயினும் பரந்து கிடக்கும் மையப்பொருள் அறம் சார்ந்தது. எனவே காமத்துப்பால் அறத்தின் சிறப் பையும் முக்கியத்துவத்தையும் விளக்கு கின்றது என்பது வெளிப்படை.

எந்த ஒரு மனித சமுதாயமும் தனி மனித வாழ்வும் மேலோங்க அகவாழ்வில் நிகழும் செயல்களும் செயற்பாடுகளுமே காரணம். சமுதாய வாழ்வு மலர தனி மனித வாழ்வும் குடும்ப வாழ்வும் சிறப்பாக அமைதல் வேண்டும்.

மனிதன் மனிதனாக வாழ்ந்து உயர்வ டைகின்ற நெறிமுறைகளை உலகுக்கு உணர்த்தி சமுதாயத்தைச் செப்பஞ்செய்ய முற்பட்டது காமத்துப்பால். தமிழ்ப் பாரம்பரி யத்திற்கு ஏற்ப நல்லெண்ணச் சிந்தனை களையும், வாழ்க்கை முறைகளையும் கண்டு மகிழ ஊற்றாய் அமைந்துள்ளது.

"மாந்தர் தம் உள்ளத்தனைய உயர்வு" என்பது குறள். எனவே மனிதனின் உயர்வின் அளவு அவனது உள்ளத்தின் அளவு உள்ளத்தின் உணர்வுகளைக் கிள்ளி நிற்கும் செஞ்சொற் தொடர்கள் வாழ்விற்கு வளமும் வனப்பும் தருபவை.

மனித வாழ்க்கை கூறுகளை, உணர்வு களை, உணர்ச்சிகளை, ஆசாபாசங்களை, அனுபவங்களைக் கூறும் நிலையில் தெளிவு, வேகம், விறுவிறுப்பு இதனாலேயே குறள்கள் ஒவ்வொன்றும் நெஞ்சங்களைத் தொட்டு இதயங்களில் தேங்கி நின்று இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

திருவள்ளுவர் காமத்துப் பாலைத் துணைக் காரணமாகக் கொண்டு அகவாழ்வில் புத்தம் புதிய மாறுதல்களும், ஒழுக்கப் பண்புகளும் மலர வித்திட்டார். பன்னெடுங் காலமாக மாற்றமடையாதிருந்த சமுதாயத்திற்கு வாழ்க்கைத் தத்துவ வழிகாட்டியாக விளங்கினார்.

குறளறங்கள் அற ஓவியங்கள். ஒருவரோடு ஒருவர் அன்பால் கலந்தும் கரைந்தும் மனம் பண்படும் வகையை வாழ்வியல் சம்பந்த மான ஒழுக்க விதிகளை வாழ்க்கை விழுமியங்களை அறவழியில் ஒன்றி ணைத்து கூறுவதே காமத்துப்பால்.

அன்பு வாழ்வில் மனம் புண்படும். அவர்களே அற நெறியில் நின்று இன்ப வாழ்வு காண முடியும். அவர்கள் வாழும் வாழ்க்கையில் உண்மை மட்டுமே உண்டு. உண்மைகள் என்றும் மாறா. அவை வாழ்விற்கு உயிர் போன்றவை.

"காதலுறவில் ஆற்றல் மிக்கவன் அமைதியைக் கற்கிறான். அமைதி மிக்கவன் ஆற்றலைக் கற்கிறான்." என்பது டாக்டர் மு.வ அவர்களின் கருத்து. எனவே அமைதிக்கு ஆற்றல் வேண்டும் என்ப தையே காமத்துப்பால் வெளிப்படுத்தி நிற்கின்றது.

உலகியல் வாழ்வில் நெறியோடு வாழ்தலின் சிறப்பை நாடகப்பாங்கில் கற்பிதமான முறையில் கலைநயம் சிறக்கக் கூறுவது காமத்துப்பால் பொருளழகு, சொல்லழகு, நடையழகு, தொடரழகு சிறந்து விளங் குவது.

திருவள்ளுவர் தலைவனையும் தலைவி யையும் பேச வைத்து விட்டு தாம் மறைந் துள்ளார். மனக்கண்ணில் காதல் உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் கண்டு மகிழ வைத்துள்ளார்.

திருவள்ளுவரின் தூய நெஞ்சத்தில் எழுந்த புரட்சி மனப்பாங்கு இக்குறளில் வெளிப்படு கின்றது. உரைநடை செய்தியை மட்டும் கூற கவிதையோ கவர்பொருள் தந்து கவித்து வத்தை வெளிப்படுத்துவது

**"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்**
**மென்னீரள் யாம்வீழ் பவள்"** (குறள் 1111)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறள் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட குறள் ஆகும்.

இக்குறள் காமத்துப்பாலில் இடம்பெற்றுள்ளது. காமத்துப்பால் களவியல், கற்பியல் என்ற இரண்டு பிரிவுகளை உடையது. களவியல் தகையணங்குறுத்தல் முதலாக அலரறிவுறுத்தல் ஈறாக ஏழு அதிகாரங்களை உடையது. அவற்றுள் நான்காவதாக இடம் பெறுவதே "நலம் புனைந்துரைத்தல்" என்ற அதிகாரம்.

"நலம் புனைந்துரைத்தல்" என்ற அதிகாரத்தில் முதலாவதாக இடம்பெறுவது மேற்போந்த குறள். நலம் புனைந்துரைத்தல் என்பது தலைமகளது நலத்தை அலங்கார வகையாற் கூறுதல் என்பார். மணக்குடவர் புனைந்துரைத்தல் என்பது பாராட்டு எனினும் பேணுதல் எனினும் கொண்டாட்டு எனினும் புகழ்ச்சி எனினும் பொருந்தும் என்பார் உரையாசிரியர்கள்.

புணர்ச்சியால் மகிழ்வுற்ற தலைவன் பிரியக் கருதிய காலத்து புணர்முன் நின்ற வேட்கை புணர்ந்த பின்னும் அவ்வாறே நிற்றலின் இத்தன்மையுடையாளை எங்ஙனம் பிரிந்து ஆற்றுவேன் என்னும் கவர்ச்சியால் நெஞ்சு நெகிழ்ந்து வாய் சோர்ந்து தன்னை அவள் காணாமல் தான் அவளைக் காண்பதோர் அண்மைக்கண் நின்று பாராட்டுதல் இக்குறளின் தொனிப்பொருள் என்றார் பரிப்பெருமாள்.

இயற்கைப் புணர்ச்சியின் இறுதிக்கண் சொல்லியது என்றார் பரிமேலழகர்

தலைவனுக்கு ஏற்பட்ட ஓர் புதிய அனுபவம், புதிய உணர்வு, தன்னை மறந்த நிலை, புத்தம் புது உணர்ச்சி இவற்றைக் கருவாக்கித் தலைவன் தன் அனுபவத்தை வெளிப்படுத்துகின்றான் என்பார் முனைவர் ச. அகத்தியலிங்கம்.

தலைவன் தலைவியிடம் எத்தனையோ பண்புகளைக் கண்ட போதும் தலைவியின் உடம்பின் மென்மைத் தன்மையே தலைவனின் உள்ளத்தில் சிறந்து நின்றது. எனவே தான் கூற வந்ததை நேரடியாக கூறாமல் உவமை மூலம் வெளிப்படுத்தி உள்ளான்.

சிறந்த கவிதை என்பது சிறந்த சொற்களை மிகப்பொருத்தமான இடத்தில் இட்டு உருவாக்கும் ஒரு கலையாக்கம் என்பது காலரிட்ஜ் என்பவர் கருத்து.

தலைவியின் மென்மைத் தன்மையைக் கூற முற்பட்ட தலைவன் பூக்களில் மிகமிக மென்மையான பூவான அனிச்சம்பூவுடன் தலைவியின் உடம்பின் மென்மைத் தன்மையை ஒப்பு நோக்குகிறான்.

அனிச்சம் பூவே நீ வாழ்வாயாக நீர்மையை உடையவளாய் இருந்தாய் இன்று நின்னிலும் சால அழகிய மென்மையை உடையவள். எம்மால் விரும்பப்பட்டவள். எனவே நீதான் நீர்மை உடையவள் என்ற கருத்தினை ஒழிப்பாயாக என்று புகழ்வது போலப் பழித்தல் இக்குறளின் பொருள்.

அனிச்சம் பூ மிக மென்மையானது என்பது உறுதி செய்யப்பட்ட ஒன்று. அறத்துப்பாலில் வள்ளுவரே "மோப்பக் குழையும் அனிச்சம்" என அதன் மென்மைத் தன்மையை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இங்கு இவ்வதிகாரத்தில் முதல் பாடலிலேயே தான் அனுபவித்து உற்று அறிந்த பொருள் ஒன்று உளது. அது தான் தலைவியின் உடம்பின் மென்மை. அனிச்சம் பூ பூக்களில் மிக மிக மென்மையானது. அப்பூவின் மென்மையை விட தலைவியின் உடம்பு மிகமிக மென்மையானது என உள் மகிழ்ந்த தலைவனின் கூற்றாக இக்குறள் அமைந்துள்ளது.

சொல்லும் முறையிலும் சொல்லும் பொருளிலும் சிறந்து விளங்குவது இக்குறள். அனிச்சம் பூவை முன்னிறுத்தி அனிச்சம் பூ தனது மென்மைத் தன்மையினால் கர்வங் கொள்வது போன்று ஒரு காட்சியை உருவாக்கி தலைவியின் மென்மைத் தன்மையை வெளிப்படுத்துந் திறன் கவித்துவம் மிக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனிச்சம் என்பது ஆகுபெயராய் அனிச்சம் பூவை உணர்த்திற்று. வாழி என்பது உடன்பாட்டுக் கூற்று. வாழ்வாயாக என்பது வியங்கோள் வினைமுற்று.

தொல்காப்பியர் "குறித்த பொருளை முடிய நாட்டல் கவிதை" என்றார். வள்ளுவர் தான் கருதிய எண்ணத்தை உயர்ந்த கவித்துவங் கொண்ட உணர்ச்சி பூர்வமான கவிதையாக வடித்துத்தந்துள்ளார்.

"அனிச்சம் பூ" என்ற உவமை இவ்வதிகா ரத்திற்கு ஏற்றந் தந்து ஒரு பொருளான் நுகர்தறி சிறப்புடையதான காம இன்பம் பற்றிச் செம்மையான முறையில் கலைநயம் பயப்பக் கூறுவது. உடலின் கவர்ச்சியை மட்டும் மையமாக வைத்து உயர்ந்த காதல் நெஞ்சத்தை தூய வடிவில் விளக்குவது

"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுகப்பிற்கு

நல்ல படாசு பறை"

என்று இவ்வதிகாரத்தின் நடுக்குறளிலும்

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்

அடிக்கு நெருஞ்சிப் பழம்"

என்று இவ்வதிகாரத்தின் இறுதிக்குறளிலும் தலைவியின் மென்மைத் தன்மையை உணர்த்த கற்பிதமான ஒரு நிகழ்ச்சியைப் படைத்து காட்டுவது உண்மையான காதலின் உயர்ந்த அடையாளம்.

எனவே இவ்வுவமை அழியா ஓவியமாக நின்று இவ்வதிகாரத்திற்கு ஏற்றம் தந்து நிற்பது கற்றோரும் கல்லாதோரும் மன மகிழ்ந்து சுவைக்கக்கூடிய வகையில் உயிரோட்டமும் கவிச்சுவையும் மிகுந்து காணப்படும்.

சிறந்த கரு உன்னதமான உவமை செறிவான கட்டமைப்புக் கொண்ட இக் குறளை மீண்டும் ஒரு முறை சிந்தியுங்கள்.

"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்

மென்னீரள் யாழ்வீழ் பவள்"

**உசாத்துணை நூல்கள்**


01. திருக்குறள் பரிமேலழகர் உரை

02 திருக்குறள் உரைக்கொத்து காமத் துப்பால்

03. வான்தொடும் வள்ளுவம் முனைவர் ச.அகத்தியலிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நாம் சிந்திப்போம்

**செல்லையா செல்வகுமாரன்**
நிர்வாகி,
அம்மா கணனி நிலையம்,
மருதோடை, நெடுங்கேணி.
(இந்திரன், கனடா)

வானத்து வெள்ளிகள் போல்
வன்னி வயல் வெளிகளிலே
விளைந்து மக்கள் பசிபோக்கும்
நெல்மணிகள் தான் எத்தனை வகை
முத்துச் சம்பா, சீரகச் சம்பா, கமுகம்பூச் சம்பா,
சீனட்டி, மொட்டைக் கறுப்பன்,
முருங்கைக்காயன், கொக்குவெள்ளை என
இன்னும் பலவகை நெல்லினங்கள்
இன்றோ அத்தனை நெல்லினங்களும்
ஆங்கிலப் பெயராய் மாறிப்
பசுமதி அரிசியாகிப் பசிபோக்குகின்றது.
பஞ்சம் பசிபோக்கி பாங்குடனே வாழ
சோளம், இறுங்கு, குரக்கன்,
பயறு, உழுந்து, காச்சான் எனும்
தன்னிறைவு காணும்
தானிய வகைதான் எத்தனை

வன்னி வளநாட்டு காட்டினில் கூட
பணம் இன்றிக் கிடைக்கும்
பழவகைகளோ ஏராளம்
பாலை, வீரை, சூரை, உலுவிந்தை,
முரளி மேலும் பழங்களோடு
கரம்பை, ஈச்சை, இலந்தைப் பழங்களை
சுவைத்துச் சாப்பிட்டால்
உடல் உறுதிகுன்றாமல்
வாழ்நாள் எல்லாம் வளமோடு வாழலாம்.

வன்னி நிலப்பரப்பில் வரமாய்க் கிடைத்த
வட்டுக்காய், சுண்டங்காய்களைச்
சுண்டி உண்டாலே
உடல் நலத்திற்கு உவப்பாய் இருக்குமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரை வகைகள் முல்லை, முசுட்டை, தூதுவளை
காணாந்தி, பொண்ணாங்காணி, பனங்கீரை,
பசலி, வல்லாரை என
கீரை வகைகள் தான் எத்தனை?

ஆறுகள் குளங்களில் கூட
நல்லின மீன்கள் பலவகை உண்டு
உழுவை, மடந்தை, மசறி, மாங்கன்
பெட்டியன், ஜப்பான், விரால், விலாங்கு
குளுவை, பனையேறி, கெழுத்தி, ஐரை என
வாய்க்கு ருசியான மீன்களோ ஏராளம்.

வளம் கொழிக்கும் வன்னியில்
வாழுகின்ற நம் மக்களோ
ஒன்றாய் இணைந்து பாடுபட்டு உழைத்தால்
பஞ்சம் பசிபோக்கி நாமும்
பாங்குடனே வாழலாம்.
வல்லதமிழ் உலகாள
உறுதுணையும் புரியலாம்.
தமிழர் நாம் சிந்திப்போம்.
செயலாற்றுவோம்.
ஆண்ட தமிழை அரியணை ஏற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்துபோகும் தமிழ் பண்பாட்டின் மீளெழுச்சி

வ.பூபாலசிங்கம்
ஒலுமடு, நெடுங்கேணி.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்த குடியாய் பிறந்த தமிழை மூவேந்தர்கள் வளர்த்தெடுத்து வந்தனர். இத்தமிழ் கொண்ட வரியினால் உலகம் போற்றும் குறளை ஈந்தார் வள்ளுவன் இரண்டாயிரம் ஆண்டிற்கு முன்பு நன்னெறிகள் நீதி நூல்கள் பழமொழிகள் தந்தருளினர் ஔவைப்பாட்டி உலகம் போற்றும் இச்செம்மொழி இருக்க அந்நிய நாகரிகத்தில் மூழ்கி இம்மொழியை மொழியின் கலையை மறப்பதா இல்லை மறுப்பதா ஒரு இனத்தின் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஒவ்வொருவரின் முகவரியைச் சொல்லும் இவற்றை அழிய விட்டால் முகவரி இல்லாத மனிதனாவான்.

தேன் தமிழில் பாட்டெழுதி செம்மொழியில் கவிபாடி பரதத்தில் நடனமாடி முன்னையோன் வளர்த்தான் கலையை பின்னையோன் ஐந்தாறு காசிற்கென்று திரை கடல் ஓடி திரவியம் தேடி அத்துடன் அந்நிய நாகரிகத்தில் மூழ்கி தன் முகவரியை தொலைத்து வாழ்பவர் ஆகினர். (அத்துடன் அந்நிய மொழி புகுந்து அரைகுறை தமிழாகிப்போனதால் அறிஞர்கள் கேட்டனர் தமிழா நீ பேசுவது தமிழா எனவே திக்கெட்டும் விழா எடுத்து பேணிப் பாதுகாப்பது எங்கள் கடன்)

ஒரு இனத்தின் வரலாறு, பண்புகள், உணவு விருந்தோம்பல், வாழ்க்கை முறை உணர்வுகள், மொழி, அழகியல், கலாசார விழுமியங்கள், அரசியல், பொருளாதாரம் அனைத்தையும் கருத்தில் கொள்ளும் பரந்த கருப்பொருளாக பண்பாடு அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை பேணப்படும் இடத்திலேயே ஒரு இனத்தின் தனித்துவம் காக்கப்படும் இந்த முக்கியத்துவம் தமிழ் பண்பாட்டின் வழிவந்தவர்களான எமக்கும் உண்டு. தமிழ் இனத்திற்கான பண்பாட்டு அம்சங்களை நாம் வரலாற்றுப் பொறுப்புணர்வுடன் பாதுகாக்க வேண்டிய கடப்பாடும் அவசியமும் எமக்கு இருப்பதை நாம் ஒவ்வொருவரும் உணரத்தலைப்பட வேண்டும். ஆனால் இன்றைய இளைஞர் அந்நிய மோகத்தால் பீடிக்கப்பட்டு எமது தாய்மொழியின் கலை கலாசாரம் பண்பாடு என சகல அடையாளங்களும் மறைக்கப்படுவதோடு அவர்களின் தனித்துவம் இழக்கப்படுகின்றது. குறிப்பாக எமது அரசியல் சமூக பொருளாதாரம் மறுக்கப்படும் இந்த நேரத்தில் எமக்கான பண்பாட்டை நாம் கௌரவப்படுத்த தவறுவோமானால் அது எம்மை நாமே இழிநிலைக்கு உடுத்துச் செல்வதாக அமைந்துவிடும்.

காரணம் ஒருபுறம் பேரினவாதங்கள் மறுபுறம் மேற்கு உலகின் செல்வாக்கு மிக்க உலகமயமாதல் பொருளாதாரம் இந்த இரு துருவ அழுத்தங்களிற்குள் சிக்குண்டு வாழும் நாம் எமது வாழ்க்கை முறை வரலாறு, மொழி, கலைகள் ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். மேலும் எமது மக்களின் வாழ்க்கையோடு இணைந்துள்ள பாரம்பரியமான அறிவு கலைகளின் வெளிப்பாடுகள், நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் பாவனைப்பொருட்கள் எனப்பரந்து விரிந்த பல்வேறு அம்சங்களையும் எமக்கானவையாக நாம் பேணிக் கொள்ள வேண்டும்.

எமது தமிழ் மொழியும் தமிழ்க்கலையும் உலகின் பல்வேறு அறிஞர்களாலும் முதன்மையும் முக்கியத்துவமுமாக போற்றப்படுவதை நாம் மறந்து விடலாகாது. லெகில் செம்மொழி என்ற அந்தஸ்தைப் பெற்றதும் எம்மொழியே. ஆயிரக்கணக்கான வருடங்கள் பழமை பெற்றும் இன்றும் உயிர்ப்புடன் வாழும் மொழியாகவும் எமது தாய்மொழி உலக அங்கீகாரத்தையும் பெற்றிருக்கின்றது.

தமிழ்க் கலைகள் செவ்வியல் கலையாகவும் நாட்டார் கலைகளாகவும் நூற்றுக்கணக்கில் பட்டியல்படுத்தப்பட்டு கொண்டாடப்படுகின்றது. எமது மொழியின் கலை கலாசாரங்கள் பண்பாடுகள் ஆகியவற்றை வளர்ப்பதற்கு அன்றைய அரசர்கள் அரசசபையில் புலவர்களிற்கு போட்டி வைத்து பொன்னும் பொருளும் கொடுத்து கௌரவித்து வளர்ந்து வந்தனர் என்பதற்கு வரலாறுகள் உண்டு உலகில் ஒவ்வொர் நாட்டிலும் வாழுகின்றோம் இன்று நாம் இல்லாத தேசம் இல்லை கோடிக்கணக்கான மக்களில் நாம் ஒருவராக தமிழ் இனத்தவர்களாக வாழ்கின்றோம்.

அடுத்து தமிழ் வைத்திய மரபான சித்த வைத்தியம் உலகில் மரபுவழி வைத்திய முறைகளில் சிறந்ததாக போற்றப்படுகின்றது. எமது மரபில் வீரமும் ஈகமும் இரு கண்கள் என்பதை வரலாறு காட்டி இருக்கின்றது. கலை கலாசாரம் பண்பாடு ஆகியவற்றை மூவேந்தர்களாகிய சேரசோழபாண்டிய மன்னர்கள் பேணிப் பாதுகாத்து வந்தனர். இவர்களுடன் பல புலவர்களும் குறிப்பாக சீழ்தலைச் சாத்தனார் போன்ற புலவர்கள் அதன்பின் அழகு தமிழை அடுக்கு மொழியில் பேசி உலகெங்கும் பரப்பினர். அறிஞர் அண்ணா காலத்தாலும் அரசியல் நீரோட்டத்தினாலும் அந்நியர் படையெடுப்பினாலும் அழிவதும் பின் உயிர்ப்புடன் எழுந்து நிற்பதும் எம்மொழியே இதற்கு விழா எடுப்பதும் எம் கடமையே.

வாழ்க தமிழ், வளர்க கலை கலாசாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வில் இலக்கியம்

வா.ஷாயிதா
வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்,
கனகராயன்குளம்.

நீண்ட கால நோக்கோடு மனிதனை நல்வழிப்படுத்தும் விதத்தில் ஆக்கப்பெற்றவையே இலக்கியங்கள். இவை மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டுகின்றன. இலக்கியம் என்பது இலட்சியம் என்ற வடசொல்லினை அடிப்படையாகக் கொண்டு பிறந்தது. இலக்கியம் சமுதாய கண்ணாடியாகவும் சமுதாயத்தை படம் பிடித்துக்காட்டுகின்ற ஒரு வரலாற்றுச் சாதனமாகவும் விளங்குகின்றது. ஒரு குறித்த காலப்பகுதியில் தன்காலத்து அரசியல் பொருளாதார சமய ஒழுக்க சமுதாய வாழ்க்கை முறைகளையும் மொழி நடையையும் படம் பிடித்து தொழிற்படுபவையாக அமைவதனால் அவர்களிடையே காலத்திற்குகாலம் மொழியில் எற்பட்ட மாற்றங்களை அதன் பலாபலன்களை தெளிய வைப்பதற்கும் இலக்கியம் சான்றாக அமைகின்றது.

இலக்கியம் என்பது "நாம் மனிதர்களாகத் தொடர்ந்திருப்பதற்கு அன்றேல் முழுமையான மனிதர்களாக இருக்க வேண்டிய மிக முக்கியமான உண்மைகளைச் செய்வதற்கான பிறிதொன்றினால் இட்டு நிரப்ப முடியாத அறிவுமுறை" என போராசிரியர் கா.சிவத்தம்பி கூறுகிறார். இலக்கியப் படைப்புக்கள் சமூக மனிதனை அவனது உயர் வாழ்க்கையின் பல்வேறு கோலத்துடன் அவனது உணர்வுகளுக்கும் சிந்தனைக்குமுள்ள முரண்பாடுகளுடன் சமூகத்துடனான அவனது உறவுகளுடன் அவனது அக வாழ்க்கையையும் புற வாழ்க்கையையும் சித்தரிக்கும் முறையாக அமைந்துள்ளன. இலக்கியத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தகால முக்கியத்துவமும் நிகழ்கால அர்த்தமும் இருக்கின்றன. இலக்கியங்கள் நல்ல பல விடயங்களை விளக்கி வாழ வேண்டும் எனவும் கூறுகின்றன. எனவே இலக்கியங்கள் மனித வாழ்வை நல்வழியில் செம்மைப்படுத்துகின்றன.

இலக்கியங்களில் பழந்தமிழ் இலக்கியங்களாக சங்ககால இலக்கியங்கள் விளங்குகின்றன. சங்க இலக்கியம் தமிழர் உயர் சிந்தனைகள் வளம் பெற்று சிறப்பாக வாழ்ந்ததை எடுத்துக்காட்டும் வாழ்க்கை இலக்கியமாகும். இது வீரம், காதல் என இரு வகையாக நோக்கப்படுகின்றது. புறநானூறு போன்ற நூல்கள் வீரத்தை நமக்கு வலியுறுத்துகின்றன. அக்காலத்துப்போர்கள் நடைபெற முன்பு பெண்கள், சிறுவர்கள், ஊனமுற்றோர்கள் கர்ப்பிணித்தாய்மார்கள் ஆகியோர் பாதுகாப்பான இடங்களிற்கு அனுப்பப்படுவார்கள். இதனை சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. அதாவது நீதி நியாயமான போர் எவ்வாறு நடைபெற வேண்டும் என்ற வீரம் மிக்க தன்மையை மானிடவாழ்வுக்கு பறைசாற்றுகின்றன. ஒருவனுக்கு ஒருத்தி என்கிற கற்பியலையும் ஒருவனே தேவன் என்கின்ற அடிப்படைத் தத்துவத்தையும் நமக்கு இதுகாலும் கற்பித்தவை இலக்கியங்களே. தூய காதலைக் கூறுவதாக சங்க இலக்கியங்கள் காணப்படுகின்றன.

இலக்கியங்களில் தனியான சிறப்பிடத்தைப் பெற்ற இலக்கியமாக தொல்காப்பியம் திகழ்கிறது. இது தமிழின் மூலநூல். தமிழ்மக்கள் தனியானதொரு பண்பாட்டை உடையவர்கள் என்பதை உலகிற்கு பறைசாற்றுகின்றது தொல்காப்பியம். மொழிக்குரிய இலக்கணமான எழுத்து சொல் ஆகியவற்றைக் கூறுவதோடு மனித வாழ்க்கையின் பொருள் பற்றிய இலக்கணத்தையும் கூறுகின்றது. உலகின் வேறோரு இலக்கண நூலும் இவ்வாறு கூறவில்லை. மனிதனின் அகவாழ்வு (காதல்) புறவாழ்வு (வீரம்) பற்றி விரிவாக எடுத்தியம்புகிறது. மனிதப் பண்பாட்டின் கருவூலமாக தொல்காப்பியம் விளங்குகின்றது.

மனித வாழ்க்கைக்குத் தேவையான அறத்தையும் நீதியையும் கூறுவனவாக நீதி நூல்களும் அறநூல்களும் அமைந்துள்ளன. சிறப்பாகத் திருக்குறளும் நாலடியாரும் இதனைக் கூறுகின்றன. எப்படியும் வாழலாம் என்று வாழ்வோர் பெருகிவிட்ட இந்நாளில் இப்படித்தான் வாழவேண்டும் என்று மானிடத்திற்கு உரங்கொடுத்த இலக்கியங்களுள் திருக்குறள் தலைசிறந்தது. இரண்டிரண்டு வரிகளில் மனித வாழ்வுக்குத் தேவையான வழிகாட்டல்களைக் கற்பிப்பது திருக்குறளே. சிறப்பாகத் திருக்குறள் மனித வாழ்க்கைக்கு தேவையான அறத்தை வலியுறுத்துகின்றது. இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பிரிவாக காணப்படுகின்றன. அறத்தைப்பற்றிக் கூறுவதற்கு அறத்துப்பால் காணப்படினும் பொருட்பாலும் காமத்துப்பாலும் அறப்படியே எனவும் கூறப்பட்டுள்ளது.

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**

**இழுக்க இயன்றது அறம்"**

என்கிறார். அதாவது பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகுவதே அறம் என்று மனிதனுக்குக் கூறுகின்றார் திருவள்ளுவர். நாம் பொருளீட்டுவதாயினும் அறத்தின் வழியே செய்யவேண்டும். பெற்றதாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும் சான்றோர் பழிப்பதற்கு காரணமான இழிவுள்ள செயல்களை ஒருவன் செய்யக் கூடாது என்று திருக்குறள் கூறுகின்றது.

**"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**

**சான்றோர் பழிக்கும் வினை"**

என்ற குறள் இதனையே மனிதர்களிற்கு விளக்கி நிற்கின்றது. "பிறர்மனை நயத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது" எனவும் திருக்குறள் கூறுகின்றது. மனிதன் இப்பூவுலகில் சிறந்த நற்குணம் மிக்கவனாக இருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப்படுவான்"**

என்ற கூற்றும் ஒலித்தது. அத்துடன் முகாமைத் துவக் கருத்துக்கள், கற்றலின் பேறு, அரசாட்சி பற்றிய பல விடயங்களை மானிடனுக்கு வெளிப்படுத்துவதாக திருக்குறள் அமை கின்றது.

அன்னைத் தமிழ் மொழியில் எழுந்த இலக்கியப் படைப்புக்களில் நாலடியாரும் சிறப்புமிக்கது. மனித வாழ்வுக்குத்தேவை யான நற்கருத்துக்களைக்கூறும் இலக்கிய மாகவும் இது விளங்குகின்றது. ஒரு மனிதன் எந்தவொரு தொழிலையும் சிறுதொழில் என்று எண்ணாமல் அதை முயற்சியுடன் திருத்தமாக செய்தால் என்றோ ஒரு நாள் உயர்வடைவான் என்று நாலடியார் கூறுகின்றது. "உறுபுலி ஊனிரையின்றி ஒரு நாள்" என்ற பாடல் இதனைக் கூறுகின்றது. செயற்கைப் பாவனையால் வரும் போலியான புற அழகுகள் அழகாகமாட்டா. எமது மனதிலே நாம் நடுநிலையாளர்களாக ஒழுகுகின் றோம் என்ற கல்வியினால் உண்டாகும் அழகே உண்மையான அழகு. இதே மனித வாழ்வுக்கு உகந்தது என்று நாலடியார் கூறுகின்றது.

**"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**

**மஞ்சளழகும் அழகல்ல நெஞ்சத்து**

**நல்லம்யாம் எனும் நடுவுநிலைமையால்**

**கல்வியழகே அழகு"**

என்று ஔவையார் கூறுகிறார். அத்துடன் "தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" எனவும் கூறுகிறார். அதாவது மனிதனானவன் தனது கண்கண்ட தெய்வங்களாக தாய் தந்தையருக்கு மதிப்பளிக்க வேண்டும் அவர்களுடைய அறிவுரைகளை தாரக மந்திரங்களாகக் கொள்ள வேண்டும். அதேபோன்று வாக்குண்டாம் எனும் நூலில் நல்ல உறவினர் பற்றிக்கூறுகின்றார். "அற்ற குளத்தில் அறுநீர் பறவை போல" என்ற பாடல் இதனைத் தெட்ட தெளிவாக கூறுகிறது. நாம் எவ்வாறானாவர்களை உறவினர் என்று கூறமுடியும் என்ற உண்மையைப் பறைசாற்றுகிறது இப்பாடல்.

தமிழிலக்கிய வரலாற்றில் காலந்தோறும் சிறந்த காப்பியங்கள் தோன்றி மொழியை வளப்படுத்துவதோடு மனித வாழ்வையும் மேம்பாடடையச் செய்கின்றன. தமிழில் தோன்றிய காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன பல வாழ்வியல் தத்துவங்களை நமக்குணர்த்துவனவாக அமைகின்றன. மனித வாழ்வுக்குத் தேவையான அடிப்படைத் தத்துவங்களை விளக்கும் செந்தமிழ்க் காப்பியமாக சிலப்ப திகாரம் விளங்குகின்றது. "அரசியல் பிழைத் தோர்க்கு அறம் கூற்றாகும்" "கற்புள்ள மகளிரை உலகம் போற்றும்" "ஊழ்வினை வந்து உறுத்தும்" போன்ற அறப் போதனைகளைக் கோவலன் கண்ணகி கதையூடாக மனித வாழ்வுக்குப் போதிக் கின்றது சிலப்பதிகாரம். துறவு வாழ்க் கையை எடுத்தியம்பும் காப்பியமாக மணிமேகலை விளங்குகின்றது.

உண்மையே என்றும் உயர்வானது. உண்மைக்கு என்றும் அழிவில்லை என்ற பொன்மொழியை மையமாகக் கொண்ட மைந்த இலக்கியமே அரிச்சந்திரன் கதை. மனித வாழ்வுக்கு சத்தியம் தேவை என்ற தொடரை நமக்கு விளக்குவது இக்கதையே. எச்சந்தர்ப்பத்திலும் உண்மை பேசும் மன்னனாக அரிச்சந்திரன் சித்தரிக்கப்ப டுவதோடு உண்மைக்காக தன்நாட்டை, சொத்துக்களை, மனைவி, பிள்ளையை என அனைத்தையும் இழந்தவனே இவன். நாம் என்றும் உண்மைக்குக் கட்டுப்பட்ட வர்களாக இருக்க வேண்டும் என்று இக்கதை கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களுக்கு அணி செய்வனவாக மகாபாரதம், கம்பராமாயாணம் போன்ற வீர காவியங்கள் காணப்படுகின்றன. மகாபாரதத்தில் பல அறக்கருத்துக்கள் காணப்படுகின்றன. மகாபாரதத்தில் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் பாண்டவர்கள் பொறுமை காத்தமையினால் தன்நாடு நகரம் பெற்றமையையும் துரியோதனன் பொறாமை கொண்டமையினால் அழிந்தொழிந் தமையும் மனித வாழ்வுக்கு எடுத்துக்காட்டாகும். இதன் மூலம் மனிதன் பொறுமை உடையவனாகவும் பொறாமை நீங்கப்பெற்றவனாகவும் வாழவேண்டும் என்ற கூற்றை எமக்கு மகாபாரதம் கூறுகின்றது.

கம்பராமாயணம் கற்பனை நயமும் கவிதை நயமும் மிக்கது. இவ்விலக்கியமும் பல முன்மாதிரியான கருத்துக்களைக் கூறுகின்றது. இதிலே ராமன் பொறுமையோடு வரத்தினை நிறைவேற் றியமையினால் உலகம் போற்றும் உத்தமனாக வாழ்ந்தான். நீதி மிக்க மன்னனாக நாட்டை ஆண்டான். இதிலிருந்து நாம் பிறர் கருத்துக்களையும் வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்துக் கூறப்படுகின்றது. கைகேகி சூழ்ச்சிக்கு ஆளாகியமையால் தன் கணவனை இழந்து அனைவரினதும் வெறுப்புக்கு ஆளாகினாள். இராவணன் பிறர்மனை நயக்க முனைந்தமையினால் அழிந்தொழிந்தான்.

நாட்டுப்புற மக்கள் தேடித்தந்த செல்வங்களுள் நாட்டார் இலக்கியமும் ஒன்று அது நாட்டுப்புற மக்களின் உள்ளத்து உணர்வுகளையும் ஆசாபாசங்களை அழகுற எடுத்துக்காட்டும் தன்மை வாய்ந்தவை. மக்களின் பாரம்பரியம் பண்பாடு கலைகள் ஆகியவற்றை நமக்குப் புலப்படுத்துவது நாட்டார் இலக்கியமே. மனிதனின் பிறப்பு தொடக்கம் இறப்பு வரை மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்தவையாக இவை காணப்படுகின்றன. குழந்தை பிறக்கும் போது மருத்துவிச்சி பாடும் பாடல் ஒப்பாரிப்பாடல் எனப் பலவகைளில் இவை காணப்படுகின்றன. மக்களின் இன்ப துன்பங்கள் பழக்க வழக்கங்கள் போன்ற அனைத்தையும் இவை எடுத்துக் கூறுகின்றன. நாட்டார் பாடல்கள் மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பின்னிப் பிணைந்துள்ளன. ஒரு நிகழ்வின் மீது பொதுமக்கள் கொண்டிருக்கின்ற உணர்வினைப் பிரதிபலிப்பதே நாட்டார் இலக்கியம்.

மனிதனின் பிறப்புடனேயே நாட்டார் பாடல்கள் ஆரம்பிக்கின்றது. குழந்தை பிறக்கும்போது "பேத்தி வாழ, பேரன் வாழ, பூட்டி வாழ, பூட்டன் வாழ" என மருத்துவிச்சி பாடுவாள். பின்பு "ஆராரோ. ஆராரோ.. என் கண்ணே நீ உறங்கு" என்று தாய் தாலாட்டுவாள். தொழில் பாடலிலே "ஏலேலோ ஏலேலோ கட்டுமரம் ஏறி எட்டு மட்டும் கடலில் வந்து" என்று மீனவர் பாடுவார். ஒப்பாரிப்பாடலில் "பொன்னான மேனியில் ஒரு பொல்லாத நோய் வந்ததென்ன" என பெண்கள் ஒப்பாரி வைத்து அழுவர். இவ்வாறு மனித வாழ்வுடன் நாட்டார் இலக்கியம் பின்னிப் பிணைந்துள்ளது. ஆங்கிலேயரின் வருகையுடன் நாவல் சிறுகதை எனும் நவீன இலக்கியங்கள் தமிழில் தோற்றம் பெற்றன. புதுக்கவிதையும் தமிழில் தோன்றிய நவீன இலக்கியமாகும். இவை மனித வாழ்வைச் சித்தரிப்பனவாக அமைந்துள்ளன. இவை சமூகத்தில் நிலவும் நடைமுறைப் பிரச்சினைகளை கருவாகக் கொண்டு அமைந்துள்ளன. சாதியம், பெண்ணடிமை, அரசியல் குடும்ப பிரச்சினை, மூடநம்பிக்கையைத் தகர்த்தல் என்பவற்றை இந்நவீன இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இவ்வாறான இலக்கியங்களும் மனித வாழ்வுக்கு அவசியமானவை.

இவ்வாறு உலகில் பல மொழியிலக்கியங்கள் மனிதனை மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டுகின்றன. உதாரணமாக கிரேக்கம், வடமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களும் காணப்படுகின்றன. இவ்விலக்கியங்கள் தமிழில் மொழிபெயர்க் கப்பட்டிருக்கின்றன.

அகம், புறம் என்று தொடங்கிய வாழ்க்கை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு கனிகளாக விரிவடைந்த வரலாற்றை இலக்கியங்களிலேயே காணலாம். இலக்கி யமும் மனித வாழ்வும் உடலுயிராய்க் கலந்துள்ளன. மனித வாழ்வை மேம்பாட டைய செய்யும் இலக்கியங்கள் என்றும் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய சொத்துக் களாகும். இம்மண்ணின் மைந்தர் நாம் இலக்கியக் கருத்துக்களை உள்வாங்கி எம்மை நாமே செம்மைப்படுத்த வேண்டும் நகமும் சதையும் போல காணப்படும் இலக்கியமும் மனித வாழ்வும் ஒன்றொ டொன்று பின்னிப்பிணைந்தவை என்பது வெள்ளிடை மலையாகும். இதை யாராலும் மறுக்கவோ மறக்கவோ முடியாது. இலக்கி யங்களை நாம் முதுசங்களாகக் கருதி நற்கருத்துக்களை திரட்டி பொன் மொழிகளை உள்வாங்கி உறுதி பெறுவோ மாக.

இலக்கியங்கள் மனித வாழ்வின் சிகரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் மரித்துப் போவது ஏன்?

**செல்வி.ச.சாந்தினி**
வ/ஆலங்குளம் முருகானந்தா வித்தியாலயம்,
கனகராயன்குளம்.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவைப்பாட்டி. கிடைத்தற்கரிய அரிதான பிறப்பெடுக்கும் மனிதர்களில் சிலர் தற்போது மனிதத்தன்மையை இழந்து விலங்குகளிற்கு ஒப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக தற்போது எமது சமூகத்தில் நடைபெறும் துஸ்பிரயோகங்கள், கொலை, கொள்ளை போன்ற சம்பவங்கள் மூலம் அறிகின்றோம். தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் காரணமாக எத்தனையோ சாதனைகளைச் செய்து கொண்டிருக்கும் தற்கால மனித சமுதாயத்தில் தான் ஒரு புறத்தில் மனிதத்தன்மையை இழந்த கொலைகாரர், கொள்ளைக்காரர், காமந்தகாரர் என்போரும் காணப்படுகின்றனர். இவ்வாறான நிலைமைக்கு காரணம் என்ன? என்ற வினா எல்லோர் மனதிலும் எழுகின்றது. இவற்றிற்கெல்லாம் மூல காரணம் போதை வஸ்து பாவனை என்றாலும் கூட அந்த போதைவஸ்து பாவனை அதிகரிப்பதற்கான காரணம் என்ன என்று ஆராய வேண்டிய தேவையுள்ளது. அதற்கான காரணங்கள் என்று பார்த்தால் மனித மனங்களில் ஆழ்மனதில் பதிந்துள்ள கோபம், வெறுப்பு, விரக்தி, தாழ்வுச்சிக்கல் போன்ற உணர்வுகளே காரணம் என்று உளவியல் ரீதியான காரணங்களைக் கூறலாம். இதற்கு தனியாள் மட்டும் காரணமல்ல அவர் சார்ந்த குடும்பம், சமூகம், பாடசாலை என்பது தவிர அரசியல் ரீதியான காரணங்களும் மூல காரணமாய் உள்ளதை உணரலாம்.

ஒரு பிள்ளை பிறந்து வாழும் குடும்ப சூழலை எடுத்துக்கொண்டால் பெற்றோரிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துணர்வின்மை காரணமாக அதிக போதைவஸ்துப் பாவனை அதனால் ஏற்படுகின்ற குடும்ப பூசல்கள் அதனால் ஏற்படும் பெற்றோரின் பிரிவுகள் வாழ்க்கைச் செலவை ஈடு செய்வதற்காக எந்நேரமும் பணம் பணம் என்று பேயாய் அலையும் நிலமை இதனால் பிள்ளைகளுடன் தமது நேரத்தைச் செலவழிப்பதில்லை. இதனால் அவனுக்கு தேவையான அன்பு, அரவணைப்பு, கணிப்பு, காப்பு போன்ற உளத்தேவைகளை ஈடுசெய்ய முடிவதில்லை. கிராமப் பகுதிகளில் வாழும் பெரும்பாலானோர் பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம், பாதுகாப்பு என்பவற்றை விட பணம் ஈட்டுவதிலும் தமது ஆடம்பர வாழ்க்கையிலும் அதிக நாட்டத்தைச் செலுத்துகின்றனர். உதாரணமாக தொலைக்காட்சிப் பாவனை செல்பேசிப் பாவனை போன்றவற்றைக் கூறலாம். இவற்றைவிட நவீன கல்வித்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வின்மையும் ஒரு காரணமாக அமைகின்றது. பெற்றோர்கள் பிள்ளைகளிற்குத் தேவையான உடற்தேவைகளை மட்டும் பூர்த்தி செய்துவிட்டு அவனது உளத்தேவைகளை பூர்த்தி செய்யாத சந்தர்ப்பத்தில் பிள்ளையின் மனம் சிதைவடைகின்றது. மேற்கூறிய காரணங்களால் சிறுவர் மனதில் தாழ்வுச்சிக்கல் ஏற்பட்டு அது வெறுப்பாக மாறி இறுதியில் விரக்தியாக மாறுகையில் மனம் இறுகி வக்கிரபுத்தி உள்ளவனாக மாற வழிவகுக்கின்றது.

அடுத்து எமது தற்கால சமூக நிலையை எடுத்துக்கொண்டால் எங்கேயும் எதிலேயும் போட்டி. அதனால் ஏற்படும் வேலைப்பளு, ஒய்வின்மை, மனஅழுத்தம் என்று காரணங்களைச் சுருக்கமாக கூறலாம். வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும் என்பதனால் அன்றைய மனிதர்கள் வாசிப்பதில் அதிக நேரத்தை செலவிட்டார்கள். அது மனிதனை பொறுமையுள்ளவனாகவும், நல்லவனாகவும், மனதை பக்குவப்படுத்தக் கூடியதாகவும் அமைந்தது. ஆனால் இன்றைய அவசர யுகத்தில் இணையம், தொலைக்காட்சி, முகநூல், செல்பேசி போன்றவற்றில் தமக்குத்தேவையானவற்றை மட்டும் பெற்றுக்கொள்கின்றனர். அத்துடன் கலைகளில் நாட்டம் குறைந்து விட்டது. இசையால் வசமாகாத இதயம் இல்லை என்பர். ஆனால் அந்த இசையை கேட்கின்ற ஆர்வமும் இல்லை. அதற்கான சந்தர்ப்பங்களும் குறைவாக காணப்படுகின்றது. இசை மட்டுமல்ல ஓவியம், நடனம், நாடகம், கூத்து போன்ற கலைகளிற்கும் தற்போது முக்கியத்துவம் குறைந்து விட்டது. கலைகள் என்பது மனதிற்கு மகிழ்ச்சியையும் மன ஆறுதலையும் அளிப்பவை. முன்னைய காலங்களில் கிராமப்புறங்களில் அடிக்கடி நடைபெறும் தெருக்கூத்துக்கள் இசைக்கச்சேரிகள் கோயில் திருவிழாக்கள் அங்கு நடைபெறும் நடனம், நாட்டியம், கூத்து போன்றவை மக்கள் மனங்களை பக்குவப்படுத்தின. ஆனால் அவை யாவும் தற்போது மருவிவிட்டன. அன்று கூட்டுக்குடும்பங்களில் ஒற்றுமைநிலவில் அனைவரும் கூடி பேசிப் பாடி ஆடி தமது பொழுதைப் போக்கியுள்ளனர். ஆனால் இன்று தொலைக்காட்சி தொடர் நாடகங்களில் தமது பொழுதைப் போக்குகின்றனர். இவை மனதில் வக்கிரத்தை தூண்டக் கூடியதாகவுள்ளது. கலைகளை ரசிப்பதற்கோ வெளிப்படுத்துவதற்கோ சந்தர்ப்பம் இல்லாத போது மக்கள் மாக்களாக மாறுவதில் வியப்பில்லையே.

இவற்றைவிட பாடசாலையை எடுத்துக் கொள்வோம். அறிவுசார் சமூகம், சமூகத்தின் சிற்பிகள் என்றெல்லாம் போற்றப்படும் ஆசிரியர்களில் சிலரின் தவறான நடத்தைக் கோலங்கள், கற்பித்தல் முறைகள் என்பவையும் மாணவ சமுதாயத்தை மாற்றியமைக்கக் கூடியனவாக உள்ளன. நவீன கலைத்திட்டம், மாணவர் மையக்கல்வி, தேர்ச்சி மையக் கல்வி என்றெல்லாம் புதிய விடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாலும் பல ஆசிரியர்கள் பாரம்பரிய வெறும் ஏட்டுக் கல்வியுடனேயே நிற்கின்றனர். இதனால் மகிழ்ச்சியான கற்றல் செயற்பாடு இன்மையால் பின்னடைவான மாணவர்கள் கல்வியில் வெறுப்பைக் காட்டுகின்றனர். பிள்ளையை அறிந்து அவர்களிற்கேற்றால் போல இறங்கி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் குறைவாகவே உள்ளனர். கற்பித்தல் என்ற பெயரில் பரீட்சைப்புள்ளியை மட்டும் நோக்காகக் கொண்டு தமக்குத் தெரிந்தவற்றை புகுத்த முனைகின்றனர். இதற்கு உதாரணமாக தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையையும் அதற்காக பெற்றோர்களும் ஆசிரியர்களும் செயற்படும் விதத்தைக் கூறலாம். இவை அதிக பரீட்சைப் புள்ளிகளைப் பெற்று சித்தியடையலாம். ஆனால் அவன் எதிர்காலத்தில் சமூகத்தில் ஆளுமையுடன் வாழ உதவுமா என்றால் அது கேள்விக்குறியே. அடுத்து, பாடசாலைகளில் முக்கியமாக ஆரம்பக் கல்வியில் அழகியல் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. கல்வித்திட்டத்தில் அதற்கு முக்கியத்துவம் அளித்திருந்தாலும் நடைமுறையில் குறைவாகவே உள்ளது. மனங்களைப் பக்குவப்படுத்தும் இசை, நடனம், நாடகம், கூத்து, ஓவியம் போன்ற கலைகளினைப் புறந்தள்ளி விளையாட்டிற்கு இடமளியாது வெறும் எழுத்து, வாசிப்பு என்று கற்பிப்பதால் அதிகமான மாணவர்கள் மனங்களில் கல்வியில் பின்னடையவும் நடத்தையில் முரட்டுத்தனத்தை உடையவர்களாகவும் மாறுகின்றனர். ஆசிரியர்களில் சிலர் மாணவர்களிடம் காட்டும் பாரபட்சம், புறந்தள்ளுதல், கடுமையான உடற்தண்டனைகள், மோசமான வார்த்தைப் பிரயோகங்கள் என்பன மாணவர் மனங்களைச் சிதைத்து அவர்கள் மனதில் வக்கிரபுத்தி ஏற்பட வாய்ப்பாகிறது. அத்துடன் சிறுவர்கள் பின்பற்றும் தன்மையைக் கொண்டவர்கள் ஆசிரியரின் நடத்தை அவர்கள் மனதில் ஆழப்பதிவதால் அதனை தமது வாழ்நாளில் கடைப்பிடிக்கின்றனர். உதாரணமாக புகை பிடிக்கும் பழக்கமுடைய ஆசிரியரிடம் பயிலும் மாணவன் பிற்காலத்தில் அதே பழக்கத்தை கடைப் பிடிக்க வழியேற்படுகின்றது. பாடசாலையை பொறுத்தவரை ஆசிரியர்கள் மட்டுமன்றி அதிபர், கல்வி அதிகாரிகள், அரசியல் தலைவர்களின் ஆதிக்கமும் மாணவரிடையே தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. சுருங்கச் சொல்லின் பாடசாலையில் அர்பணிப்புடன் சேவையாற்ற வேண்டிய ஆசிரியர்கள் வெறுமனே கடமையைச் செய்வதாலும் அதிபர்களின் சுயநலப் போக்கு, பொறுப்பற்ற தன்மை, அதிகாரிகளின் பாரபட்சமான செயற்பாடுகள், இடமாற்றம் போன்ற விடயங்களில் அரசியல் தலைவர்களின் முறையற்ற தலையீடுகள் ஆகியவையும் மாணவ மனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களின் மனதைச் சிதைத்து வக்கிரபுத்தி உள்ளவர்களாக மாறுவதற்கு வழிவகுக் கலாம்.

தற்கால மனிதர்களில் மனிதம் மறைந்து போவது ஏன்? என்ற வினாவிற்கு காரணங்களை ஆராய்ந்தாலும் அதற்கான தீர்வுகள் என்ன என்ற வினாவுக்கு தெளிவான சரியான விளக்கத்தை அளிக்க முடியாது. ஏனெனில் இது மனங்களில் ஏற்பட வேண்டிய மாற்றம். அனைத்து தரப்பினரும் வகை சொல்ல வேண்டிய விடயம். ஒவ்வொரு மனிதனும் தன்னை ஆராய்ந்து திருத்தவேண்டிய விடயம். **"எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே"** என்ற வாக்கியத்தை மறவாது அப்பிள்ளை வளர்வதற்கு ஏற்ற விதத்தில் குடும்பம் சமூகம், பாடசாலை என்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கவனம் எடுக்க வேண்டும். மேற்படி குடும்பம் சார்ந்த, சமூகம் சார்ந்த, பாடசாலை சார்ந்த அனைத்து காரணிகளும் இணைந்து தான் தற்கால நிலைமையைத் தோற்றுவித்துள்ளன. ஆகவே அனைத்துத் துறைகளிலும் மாற்றம் வேண்டும். அதவாது மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற யதார்த்தத்தை யாராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டை பாதுகாப்போம்

**திரு.சிவானந்தம் நிரோசன்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழனுக் கென்று இங்கே
தனியொரு பண்பாடுண்டு
இதைத் தனியே விட்டு
நாம் செல்வது எங்கு
ஆங்கில மோகமும் அமெரிக்கா வாழ்கையும்
அம்சமாய் அமைகிறதா?
இல்லை அலங்கோலமாய்
இருக்கிறதா?
இதைச் சொன்னால் கேட்பவர் யாரிங்கே
இது தான் இன்று
இலக்கியவான்கள் கூறும் சோகக் கதையுங்கோ
இதைத்தான் நான் இங்கே
வடிக்கின்றேன் கவியாய்
இதைப்படிப்பவர் மனதில்
பண்பாடு ஊற்றெடுக்க
வேதங்கள் ஆயிரம் சேர்ந்தாலும்
அர்த்தங்கள் கிடையாது
"அம்மா" என்ற வார்த்தைக்கு ஆனால்
இன்று பிஞ்சு நெஞ்சங்களின்
உதட்டோரம் எல்லாம்
"மம்மி" என்ற மயக்கமான வார்த்தை

இதனால்தான் சொல்லுகிறேன்
பண்பாடு பறந்துவிட்டது
பாதுகாப்போம்
வாருங்கள் என்று
மங்கையவள் வதனமே மதிவடிவம் -ஆனால்
அவள் அலங்காரமோ-அநாகரிகம்
ஏனென்று கேட்கிறீர்களா? அவசரப்படாதீர்கள்
அவள் அணிந்திருக்கும் ஆடை அரை மீற்றர்
"பையன்" அவன் போகின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பள்சர்" மோட்டார் சைக்கில்- அவன்
கண்களில் போட்டிருப்பதோ "சன் கிளாஸ்"
கழுத்தில் அணிந்திருப்பதோ "நாய்ச்சங்கிலி"
மொத்தத்தில் அவன் பார்பதற்கு
சினிமாப்பட வில்லன் பிரகாஸ்ராஜ் தானுங்க
எப்படி போகின்றது இளஞ்சந்ததியின்
இனிவரும் பண்பாடு

இதனால் தான் வருந்துகின்றேன்
பண்பாடு புதைகுழியில் விழுந்து விட்டது
என்று வாருங்கள் பாதுகாப்போம்
அதைத்தோண்டி எடுத்து

இது தான் இன்று தமிழன் பண்பாடா
இதைத்தான் அன்று வேதங்கள் கூறியதா?
இடியாய் இடிக்கிறது என் இதயம் ஆனாலும்
இதை மாற்ற முடியும் என்று
வடிக்கிறது என்பேனா
தனது மைகளை கவி வரிகளாய்

நாகரீகமாய் வாழ வேண்டும் என்பதற்காய்
அநாகரீகமாய் மாறுவதா?
எம் ஈழத்துப்பண்பாட்டை
எம்மவரே சீரழிப்பதா?
இதனால் தான் கூறுகின்றேன் - எம்மைப்
படைத்த இறைவன் கூட
இதைப் பொறுக்க முடியாது என்று
இனியொரு விதி செய்வோம்
எமது பண்பாட்டை பாதுகாக்கவென்று

○ ○ ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை, கலாசாரம், பண்பாடு.

கி.உஷாநந்தினி
ஒலுமடு. நெடுங்கேணி.

கற்றலின் வெளிப்பாடு அறிவாலயம்
கலையின் வெளிப்பாடு பண்பாடாம்
கண்ணான கலாசாரம் கலைந்திடாது
சிந்திக்கும் பெருந்துளி மக்கள் நாம்
கட்டிக் காப்பாற்றும் காலமிது.....!

நாடு, நகரம் வன்முறையில் சிதைவடைந்ததாம்
காரண மென்ன.....?
நம் முன்னோர் பின்பற்றிய
பண்பாடு அழிந்ததே!
கட்டிக் காப்போம் கலாசாரம்.

சிறியோர், வயோதிபர், பெண்கள், சிறுமிகள்
மானம் பறக்கிறதே......!
நாட்டின் பரந்த தேசமெல்லாம்........
நாளுக்கொரு தடவை உணவை
உண்பது போல் சிதைவுறும் தருணமிது.

இன்புற்ற நாளை விட
கலவரம், போராட்டம் செய்த நாள் பல
இக் கலவரங்கள் ஒழியவே கயவர்களை
ஒழித்திடுவோம்
கலாசாரம் வென்றிடவே........!
உழைத்திடுவோம் வீரர்கள் நாம்.

பள்ளிக் காலமதில் சிட்டாய் பறக்கும்
சிறுமியரை பதுங்கி கிடக்க வைக்கும்
பண்பாடு........! ஏன்? எதற்காக?
சிதைவுற்றது.........! ஒழிப்போம் வன்முறையை
வென்றிடுவோம் கலாசாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதை ஆணை என்ன செய்தது..........?
பெண்ணை அழி என்றதா? ஏன்
இப்படியான ஒரு கொலை வெறி
நாம் என்ன செய்தோம்.........? அழிக்காதீர்கள்
பெண்ணை மட்டுமல்ல நம் பண்பாடுகளையும்

கயவர்களே நீங்களும் கலையை காப்பாற்றுங்கள்
வென்றிடுவோம் முன்னைய சமுதாயமதை.........!
கட்டிக் காப்போம் நாட்டு மானமதை!
புரட்சி மனிதர்கள் நாம்..!

இயல், இசை, நாடகம் - என்னும்
முத்தமிழ் கலையதுவாம்.
முன்னோர் காத்திட்ட பெரும் - கலையது.
பின்பற்றி வாழ்ந்திடுவோம்.
முன்னோரின் வழிதனையே.......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்துயிர்

**திருமதி.வக்சலா ஜீவரத்தினம்**
வ/விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்

பிள்ளையார் கோயிலின் மணியோசை ஊரெல்லாம் ஒலித்து ஓய்ந்தது. ஆழ்ந்த உறக்கத்தில் மென்மையான உதட்டில் புன்சிரிப்புத் தோன்ற புரண்டு புரண்டு படுத்திருக்கும் தனது இளமொட்டு மகளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த பவளத்திற்கு ஏக்கப்பெரு மூச்சு ஒன்று தன்னையறியாமல் தோன்றியது. ம் நாங்கள் இருந்த இருப்புக்கு இண்டைக்கு எங்கட வாழ்க்கை எப்படி போய்க்கொண்டிருந்தது என்று தனக்குத் தானே கூறியவள் ஏதோ நினைத்தவளாக விருட்டென்று எழுந்தாள்.

குலைந்திருந்த தலைமுடியை கையால் கோதிக் கொண்டை முடிந்தாள். வில்லைய டியானே "நீ தான் துணை" என மனதிற்குள் கூறியபடி நேரத்தைப் பார்த்தாள். சரியான நேரம் தான் எது தப்பினாலும் கோயிலின் மணியோசை தப்பாது. நேரம் சரியாக நாலு மணி காட்டியது. இனி பவளம் இயந்திரம் போல் இயங்கத்தொடங்கினால் தான் அந்தக்குடும்பமே இயங்கும். பவளம் எழுப்பிய அரவம் கேட்ட அருள் இருமிக் கொண்டே பவளம் பவளம் எனக்கொரு தேத்தண்ணி தந்திட்டு நில்லப்பா. தொண்டையெல்லாம் காஞ்சு வரண்டு போட்டுது. இரவிரவாய் கண்ணே மூடேல்ல. ஒரே இருமல். அதோட பப்பாசிக்கு வார யானைகளை வெடி கொழுத்தி எறிஞ்சு களைச்சு போனன். ஒருக்கா புளியங்குளம் ஆஸ்பத்திரிக்கு போக வேணும் அங்கபோய் மருந்து எடுத்தா தான் எனக்கு இந்த பாழ்பட்ட இருமல் நிற்கும் எண்டு இருமி இருமி கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனை இரக்கத்தோடு பார்த்த பவளம் பொறுங்கோப்பா. இப்ப தேத்தண்ணி தரலாம் என்று கூறியபடி அவளது ஒபிசுக்குள் நுழைந்தாள். அதுதான் அவளது சமையல் அறை. மளமளவென்னு தனது வேலைகள் ஒவ்வொன்றையும் பம்பரம் போல் சுழன்று செய்யும் பவளம் அனந் தனூர் எனும் கிராமத்தைச் சேர்ந்தவள். அங்கு எல்லா ஆனந்தமும் இருந்தாலும் போக்குவரத்து வசதியின்மை பெரும் துன்பமாகவே இருந்தது. மின்சார வேலைகளும் அரக்க பரக்க இப்பதான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. யுத்த பூமியாக மாறிய இப்பிரதேசம் இப்பதான் புத்துயிர் பெற்று வருகின்றது என்பதற்கு இவைகளே சான்றாகியுள்ளது. மீள்குடியேற்ற கிராமம் என்ற படியால் இப்ப சனங்கள் முன்னம் போல இல்லை எண்டாலும் சுறுசுறுப்பான ஊக்கமுள்ள சனங்கள் தான் அங்க இருக்கிற ஆட்கள்.

அப்படியான ஆட்களில் ஒருத்தி தான் பவளமும் தோட்ட வேலை எண்டாலும் வீட்டு வேலை எண்டாலும் ஒரு நொடியில் செய்து முடிக்கக்கூடிய உற்சாகமும், கெட்டித்தனமும் உள்ளவள் என்பதை ஊரே அறியும். இரவிரவாய் பாத்திரங்களை கழுவி வீட்டை கூட்டி சுத்தமாக்கி விட்டுத்தான் அவள் நித்திரைக்குச் போவது வழக்கம். அந்த பழக்கத்தால் எழும்பியவுடனே கிணற்றுக்குப் பக்கத்தில் நிற்கும் வேப்பம் மரத்தில ஒரு சிறிய கிளையை முறித்து குச்சியாக்கி பல்லைத் தீட்டுவாள். போன வருட புதூர் பொங்கலில பாடுபட்டு வாங்கிய ஈய குடத்தையும் எடுத்துச் செல்வாள். அவளுக்கு பிளாஸ்ரிக் பொருட்களை கண்ணிலேயே காட்டக்கூடாது. முகத்தை கழுவி தண்ணி அள்ளிய குடத்தை கொண்டுபோய் முற்றத்திலுள்ள எலுமிச் சைக்குப் பக்கத்தில வைச்சிட்டு சாமி படத்துல உள்ள திருநீற்றை எடுத்து சிவ சிவ என்று பூசியபடி அடுப்பை மூட்டுவாள். நல்ல வேப்பம் விறகு, வீரை விறகு சுள்ளியும் கலந்து தான் அடுப்பை மூட்டுவாள். கண்மூடித் திறக்கிறதுக்குள்ள கையில் சூடு பறக்க தேத்தண்ணி கோப்பையுடன் வந்த மனைவியை பெருமையாக அருள் பார்த்தார்.

மெய்யப்பா! மகள் ஆர்த்திக்கும் வவுனியா பெடியன் ஒருத்தனை சம்பந்தம் பேசி வாரதாக உவன் சுந்தரத்தாரின் மூத்தமகன் சொன்னவன். அதுதான் யோசிக்கிறன். என்டபடி கையில் வைத்திருந்த சுருட்டை மெதுவாக ஊதித்தள்ளினார். சுருள் சுருளாக பறந்து சென்ற புகையை அருவருப்பாகப் பார்த்த பவளம் எல்லாம் கேட்க நல்லாதான் கிடக்குது அப்பா. கையில மடியில வைச்சுக்கொண்டுதான் உந்த விசயத்துக்கு போக வேணும். கலியாணம் ஆயிரங் காலத்துப் பயிர் என்று சும்மாவோ சொல்லுறாங்கள். அவசரப்பட்டு செய்து போட்டு அவதிப்பட வேண்டி வரும். இப்ப ஊருல உலகத்தில நடக்கிற கூத்துக்களை கண்ணால் தானே பார்க்கிறம் என்று கூறிய பவளம் உந்த கோதாரி சுருட்டு பீடியை குடிக்காதையுங்கோ எண்டு எத்தின தரம் சொல்லிப்போட்டன் நீங்களும் விடுகிற மாதிரி இல்லை. பிறகு எண்ணெண்டு உந்த இருமல் நிக்கிறது என்று கொட்டித் தீர்த்தாள்.

ஏனம்மா நாலு மணிக்கே சுப்பிரபாதம் பாடத் தொடங்கிட்டியள் போல அப்பா தான் எப்ப மாறுகிறார் எண்டு பார்ப்பம் என்று தந்தையை ஓரக்கண்ணால் பார்த்தபடி தனது பிரசை எடுத்துக்கொண்டு கிணற்ற டியை நோக்கிப் போனாள் ஆர்த்தி. வயதும் போகுது. ஏதோ இந்த சனியனை விட ஏலாமல் கிடக்குது மோனை எண்டு கூறியவர் சுடச்சுட தேத்தண்ணியை ருசித்தபடி குடித்து முடித்தவர் பவளம் பப்பாசிக்குத் தண்ணி கட்டப் போறன் நான் சொன்ன விசயத்தை மகளுக்கும் சொல்லு நீயும் நாலுதரம் யோசி எண்டபடி தோட்டத்திற்குப் போனார்.

தலையை ஆட்டிய பவளம் தனது தேத்தண்ணியை குடித்தபடி மகளது தேத்தண்ணி கோப்பையை மேசைமீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தாள். நேரத்தை பார்த்தாள். ஐஞ்சு மணி ஆகுது பால் கறக்க வேணும். பால்காரன் வெள்ளெனவரப் போறான் என நினைத்தவள் ஆர்த்தி தேத்தண்ணியை குடிச்சிட்டு படியம்மா. நான் பால் கறக்க போறன் என்றாள். அவளுக்கு அந்த நாலு பசுவும் தான் செல்வம். வாழ்வாதார உதவியில அவளுக்கு கிடைச்ச கேப்பே மாடு தான் இப்ப கைகொடுக்குது. பப்பாசியும் பெய்த மழையாலும், காத்தாலும் அழிஞ்சு போயிட்டுது. வைச்ச நகையை எப்படி மீட்டு எடுக்கிறது எண்டது கேள்விக்குறியாகி விட்டது என சிந்தனை சக்கரம் சுழல சுழல ஒருவாறு பாலைக் கறந்து முடித்தாள் பவளம். இஞ்சேருங்கோ என குரல் கொடுக்கவும் அவ்விடமே ஆயத்தமாகி அருளும் வந்துவிட்டார். பாலை கொடுத்திட்டு வாங்கோ நான் வீட்ட போகிறன் பிள்ளையும் கிளாசுக்கு போற நேரமாகிறது எண்ட படி பவளம் வீட்டை நோக்கி போனாள்.

அம்மா அம்மா என்ற ஆர்த்தியை ஏன் மோன கூப்பிட்டனீ என்றவாறு பவளம் வீட்டுக்குள் பிரசன்னம் ஆனாள். பசிக்குது இன்னும் சமைக்கலையோ எண்டாள். இராத்திரி அவிச்ச பனங்காபுட்டு இருக்குது சாப்பிடு என்றவாறு மகளுடன் கதையைத் தொடர்ந்தாள். ஆர்த்தி உனக்கும் வயசு வந்திட்டுது கால காலத்திற்கு ஒரு காலியாணம் செய்வம் எண்டு அப்பாவும் நானும் யோசிக்கிறம். மேல் படிப்பு முடிஞ்சுது தானே. கொம்பியுட்டர் கிளாசுக்கு போகத்தான் வேணுமோ என்றாள். அம்மா நீங்க சொல்லிறது சரிதான் என்றாள். நான் படிச்ச படிப்புக்கு ஒரு வேலை எடுத்த பிறகுதான் கல்யாணம் என்பது நடக்கும். யாரம்மா மாப்பிள்ளை வெளிநாடோ உள்நாடோ என்றாள். ஆர்த்தி பவளமும் பெடியன் வவுனியாவில் கிளாக்கா வேலை செய்யிறாராம். எல்லோரும் வெளிநாடு கொழும்பெண்டு ஓடினா இந்த கிராமத்தில யார் இருக்கிறது சொல்லு எண்டாள். அம்மா நானும் உங்கட கண்ணுக்கு முன்னால இருந்து இந்த ஊரில சேவை செய்து வாழத்தான் ஆசைப்படுறன். எண்ட நண்பிகள் பல பேர் வெளிநாட்டில படுற துன்பங்களை சொல்லிச்சினம் கேட்கவே கவலையாக இருக்கிறது. எனக்கு வெளிநாடு வேண்டாம். நல்லா பெடியனா என்னையும் உங்களையும் பார்க்கக் கூடியவராக இருந்தா சொல்லுங்கோ பிறகு யோசிப்பம் என்றாள். தாயும் மகளும் உரையாடுவதைக் கண்ட அருள் புன்முறுவலுடன் என்னவாம் மோள் என்றபடி தனது பறணைச் சைக்கிளிலில் வந்திறங்கினார்.

எல்லாம் நல்லா முடிவுதான் இப்ப பொம்பிள பிள்ளைகள் போடுற உடுப்பும் நடிப்பும் காதல் கண்றாவி என அலைய என்ற பிள்ள உதால தப்பி புத்திசாலியாக இந்த ஊரையே புத்துயிர் செய்யப் போறாளாம். அதுக்குப் பிறகு கல்யாணம் பற்றி யோசிப்பம் என்று கூற மகிழ்ச்சி ஆரவாரமாக சிரிப்பொலி தோன்றியது.

○ ○ ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான எதிர்காலத்துக்கு வலுவான பெண்கள்

## நிலையான அபிவிருத்தி இலக்குகளினூடான ஓர் விமர்சனப்பார்வை

**சிவதர்ஷன் சுபாஷினி**
மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்.
பிரதேச செயலகம், வவுனியா வடக்கு.

இவ்வாண்டின் மகளிர் தின தொனிப்பொருள் நிலையான எதிர்காலத்துக்கு வலுவான பெண்கள் என்பதாகும். பெண்கள் வலுவூட்டப்படுவதனாலேயே நிலையான எதிர்காலம் என்பது மலரும். 2015 செப்டம்பர் 25 தொடக்கம் 27 வரை உலக நாட்டுத் தலைவர்கள் அனைவரும் ஐக்கிய நாடுகள் சபையில் ஒன்று கூடி அடுத்த 15 ஆண்டுகளில் நம் நாடுகளின் வளர்ச்சிக் கொள்கைகள் என்னவாக இருக்கப் போகின்றது என்பதை தீர்மானித்து 17 இலக்குகளை முன்வைத்துள்ளனர். 2030 ஆம் ஆண்டில் இவ் இலக்குகளை அடைந்து கொள்வதில் பெண்களின் வலுவூட்டல்கள் என்னவாக இருக்கப் போகின்றது என்பது தொடர்பாகவும் சிந்திப்போமானால்..

### இலக்கு 01. வறுமை ஒழிப்பு

வறுமையின் பல வடிவங்களையும் ஒழிக்க வேண்டுமென்றால் பெண்கள் அன்றாட உணவுத் தேவையை மட்டும் பூர்த்தி செய்வதனூடாக ஒழிந்துவிடப் போவதில்லை. கல்வி, வேலையின்மை, சுகாதாரமின்மை சமூக ஏற்றத் தாழ்வுகள், போதிய வருமானமின்மை,போதிய சத்துணவின்மை, கைவிடப்பட்ட ஆதரவற்ற நிலை,உடை மற்றும் உறைவிடமின்மை போன்ற வறுமையின் வடிவங்களை இல்லாமல் செய்ய முன்வர வேண்டும். இன்று வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைக்க யாரும் விரும்புவதில்லை. 21 ம் நூற்றாண்டின் சவால்களை வெற்றி கொள்ள அவள் சமூக பொருளாதார மற்றும் அரசியல் பாதையில் முன்னோக்கி பிரவேசிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கு 02. பட்டினி இன்மை**

இலங்கையில் பட்டினி ஒழிப்பை இல்லாமல் செய்ய வேண்டும் எனில் பெண்கள் தமது ஆரோக்கியம் பற்றி சிந்திக்க வேண்டும். சத்துணவு நிறை உணவு தொடர்பில் விழிப்புணர்வு பெற வேண்டும். பெண்களின் ஆரோக்கியத்தில் அரசாங்கம் பலவாறு அக்கறை காட்டியுள்ளது. எனினும் பெண்கள் தமது சுகவாழ்வில் விழிப்புணர்வு பெற வேண்டும். இலங்கை ஒரு விவசாய நாடு.. சத்துணவுகளை உற்பத்தி செய்ய வளங்களைத் தன்னகத்தே கொண்ட நாடு ஒவ்வொரு பெண்ணும் தன் சுய வறுமை பட்டினியைப் போக்க சிந்திக்க வேண்டும். முயற்சியுள்ளவளாக மாற வேண்டும். கருவை சுமக்கின்ற தாய் அந்த கருவை ஆரோக்கியமான குழந்தையாக ஈன்றெடுக்க நான் என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்க தொடங்கினாலே சிசு மரணவீதம் கருச்சிதைவு.ஆரோக்கியமற்ற குழந்தைகள் என்ற பேச்சு இல்லாமல் போய்விடும். பெண்களே கணவன் உழைத்து வந்தால்தான் நான் சமைப்பேன் என்பதை விடுத்து நான் உழைத்து என் பட்டினியைப் போக்குவேன் என உறுதி கொள்ளுங்கள். உங்கள் மனைகளை ஓர் அழகான வீட்டுத் தோட்டமாக்கிப் பாருங்கள்.

**இலக்கு 03.**

**நல்வாழ்வு**

இயந்திரமயமான இன்றைய வாழ்க்கைப் போக்கில் ஆரோக்கியமான வாழ்வைப்பற்றி யாரும் சிந்திப்பதில்லை. ஆரோக்கியமான வாழ்க்கை என்பது உளநலத்திலும் ,உடல் நலத்திலும் தங்கியுள்ளது. அவசர உலகில் கணவன் மனைவியுடன் பேச நேரமில்லை. பெற்றோர் பிள்ளைகளின் உடல் நலத்தில் அக்கறைகாட்ட முடிவதில்லை. இதனால் குடும்ப பிணைப்பு(Family attachment) என்பது இல்லாமல் போய் விடுகின்றது. இன்று பிள்ளைகள் அன்பைத்தேடி தடம்மாறி தம் வாழ்க்கையை தீர்மானித்து கொள்ள, வன்முறைச் சூழலுக்கு இலகுவில் அகப்பட்டுக் கொள்ள இவை காரணமாகின்றன. ஒரு குடும்பத்தில் ஆண்,பெண் இருவரும் தம் வேலையை பகிர்ந்து கொண்டால் நேரம் மிச்சப்படும். அந்த நேரம் நீங்கள் குடும்பத்தினருடன் உறவினருடன் உறவாட எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள பொன்னான நேரமாக அமையும்.

**இலக்கு 04. தரமான கல்வி**

ஒரு நாட்டின் சிறந்த மனித வளமாக ஒவ்வொரு மனிதனையும் மாற்றக் கூடியது கல்வி. தேவையான நேரத்தில் பிள்ளைகளுக்கு கடிவாளமிட்டு அவர்களை நேர் வழியில் இட்டுச் செல்லவும், சமுதாய சீர் கேடுகள்,வன்முறை சூழல்களிலிருந்து ஒவ்வொரு பிள்ளையும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள பிள்ளைகளுக்கு கல்வி முக்கியமானது. தறிகெட்டுப பாயும் காளைகளைப் போல் இன்றைய சமுதாயம் சீர்கெட்டுப் போகின்றது என்று பேசுகின்றோம். தீமைகளில் இருந்து தடுத்து. அவர்களை நல்லவர்களாக நாட்டின் நற்குடிமக்களாக, பெற்றோரைப் பேணுபவர்களாக, சுற்றத்தாரை மதிப்பவர்களாக அண்டை அயலவருடன் அன்புடன் பழகுபவர்களாக, மாற்றக் கூடியது கல்வி. இன்று பெண் பிள்ளைகள் தமக்கு வரும் வன்முறைச் சூழலை எதிர் கொள்ள வேண்டும் எனில் இளவயதுத் திருமணம்,தேவையற்ற கர்ப்பம், என்பவற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனில் பெண் பிள்ளைகள் கட்டாயம் கல்வி கற்றிருக்க வேண்டும். இது பெற்றோர்களின் பொறுப்புமிக்க கடமையாகும். நம் தேசத்தின் நிலையான அபிவிருத்திக்கு பெண்களை வலுவூட்டுவதும் அவர்களது பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதும் மிகவும் முக்கியமானதாகும்.

**இலக்கு 05. பால்நிலை சமத்துவம்**

பால்நிலை சமத்துவம் என்பது பொருளாதாரம் அரசியல்,சுகாதாரம்,கல்வி போன்ற பல்வேறு துறைகளில் ஆண்,பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய இருபாலாருக்கும் கிடைக்கும் சந்தர்ப்பங்கள், வாய்ப்புகள் மற்றும் சாதனைகளின் அடிப்படையில் பால்நிலை சமத்துவ இடைவெளி மதிப்பீடு செய்யப்படுகின்றது. இவ் இடைவெளியை இல்லாமல் செய்ய சமூகத்தின் சகலரது ஒத்துழைப்பும் தேவையானது. இன்று சகல நிலைகளிலும் பெண்கள் ஆண்களுக்கு நிகராக அனைத்து தொழில் துறைகளிலும், வேலைத் தளங்களிலும், தரையிலும் ,ஆகாயத்திலும், கடலிலும் ,பெண்கள் தமது சேவையை தடம் பதித்துள்ளனர். பல்வேறு சவால்களுக்கும் மத்தியில் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் தடைகளை உடைத்து பால்நிலை சமத்துவத்துடன் சாதனைகளை புரிந்திட ஒவ்வொரு பெண்ணும் முன்வர வேண்டும்.

**இலக்கு 06. தூய்மையான குடிநீரும் சுகாதார வசதிகளும்**

ஒவ்வொரு பிள்ளையும் குடிநீரை எப்படி பயன்படுத்துவது, குடிநீரின் முக்கியத்துவம்,குடிநீர் மாசுபடுவதனை எப்படி தடுப்பது குறித்தும், நீர் சேகரித்தல் கையாளும் முறை. அசுத்தமான நீரினால் பரவும் நோய்கள் பற்றி தெரிந்திருப்பதுடன் நீரின் உபயோகத்தை முகாமை செய்யாவிட்டால் எதிர்கால சந்ததி வரட்சியான வாழ்க்கையை வாழ நேரிடும் என்பதனை உணர வேண்டும். கல்விக் கூடங்கள் வேலைத்தளங்களில் ஆரோக்கியமான சூழலில் மலசலகூடங்கள் அமைந்திருக்க வேண்டும். பெண்கள் பெண்பிள்ளைகளின் சுகாதாரத்துக்கு இவை முக்கியமானதாகும்.

**இலக்கு 07.தூய, மலிவான சக்தி ஆதாரம்**

மின்சாரம் இல்லாத வாழ்க்கையை எம்மால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. ஒவ்வொரு பிள்ளைக்கும் மின்பாவனை சிக்கனத்தை சொல்லிக் கொடுங்கள். மின் விளக்குப் பாவனை. மின்விசிறி, கிறைண்டர், வாஷிங்மெஷின், குளிர்சாதனக்கருவி, குளிர்சாதனப்பெட்டி, நீர் சூடேற்றி, அயன்பாக்ஸ், கணினி இவைகளை சிக்கனமாக பயன்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.

**இலக்கு 08.பொருளாதார மேம்பாடு கன்னியமான வேலை**

கண்ணியமான வேலை என்பது கோட் சூட் டை கட்டி வேலை செய்வது மட்டுமல்ல ஒருவன் தன்னிறைவுடன் வருமான மீட்டுவதாயின் கூலித் தொழிலும் சிறந்த வேலையே. பெண்கள் உள்ளூரில் எத்தனையோ சுயதொழில் முயற்சிகள் இருக்க மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று வருமானம் ஈட்டுவதனையே விரும்புகின்றார்கள். உங்கள் குடும்ப சூழ்நிலையை கருத்தில்கொண்டு உள்ளூரில் வருமான மீட்ட உள்ள வழிகளை தெரிவு செய்யுங்கள்.

**இலக்கு 09.தொழிற்சாலைகளின் உட்கட்டமைப்பு**

தொழிற்சாலைகள் தனி நபரது லாபம் மட்டும் நோக்காக கொள்ளாது மக்கள் எல்லோருக்கும் பயன்பட அமைய வேண்டும்.

**இலக்கு 10. ஏற்றத்தாழ்வு களைதல்**

ஏழை பணக்காரன் வித்தியாசமின்றி, அயல்நாடு நம் நாடு என்ற வித்தியாசமின்றி ஒற்றுமையாக வாழ எல்லோரும் பழகிக் கொள்ள வேண்டும்.

**இலக்கு 11. நிலைத்த வளர்ச்சியுள்ள நகரங்களும் சமூகமும்**

இன்று நவீனமயமாதல் நிலைத்த வளர்ச்சியுள்ள நகரங்களை எமக்கு தந்துள்ளது. ஆனால் மனித மனங்களின் வளர்ச்சி என்பது குறுகிவிட்டது என்றே கூறலாம். குடும்ப உறவுகளுக்குள் இணைப்பு, அண்டை அயலவருடனான உறவுப் பிணைப்பு, எல்லாமே சுருங்கி விட்டது எனலாம். ஒருவருக்கு ஒருவர் உதவும் மனம் என்பது குறுகிவிட்டால் வன்முறைகள் கட்டவிழ்ந்து விடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்துக்குள் தான் நாம் பயணிக்க வேண்டியிருக்கும். என் வீட்டில் நடந்த வன்முறை, அயல் வீட்டில் என்ன நடைபெற்றது என்றே தெரியவில்லை என்று கூறுவதென்றால் நம் முதியோர் வாழ்ந்த சமூகம் எங்கே??? நாம் வாழும் சமூகம் எங்கே ??? நம் எதிர்கால சந்ததி வாழப்போகும் சமூகம் தான் என்ன????

**இலக்கு 12.பொறுப்பான தயாரிப்பும் பயன்பாடும்**

எந்தவொரு பொருளாக இருந்தாலும் அது அடுத்த தலைமுறைக்கு கிடைக்கும் வகையில் சிக்கனமாக பாவிக்க வேண்டும் என்பதுடன் தயாரித்து வெளியிடப்படும் உற்பத்திகள் சமூகப் பொறுப்புடன் இருக்க வேண்டும்

**இலக்கு 13. சுற்றுச்சூழலுக்கான செயற்பாடு**

நாம் வாழும் உலகைக் காக்க வேண்டுமெனில் நம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு சமூகப் பிரஜையும் தான் வாழும் சுற்றுச் சூழலை பாதுகாத்து பருவநிலை மாற்றங்களை சரி செய்ய கரம் கோர்க்க வேண்டும்.

**இலக்கு 14. நீர் வாழ் உயிரினங்களைப் பாதுகாத்தல்**

நீர் வாழ் உயிரினங்கள் நமக்குக் கிடைத்த அளப்பெரும் செல்வங்கள்.அவற்றைப் பாதுகாக்க இயற்கை நமக்கு கொடுத்த நீர் நிலைகளை நாம் பாதுகாக்க வேண்டும். மண்ணகழ்வு, குளங்கள் தூர்ந்து போதல், கடல் நீரில் கழிவு நீர் கலத்தல் .நீர் மாசு இவற்றைத் தடுக்க ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

**இலக்கு 15.**

**பூமியிலுள்ள அனைத்தையும் பாதுகாத்தல்**

நம் பூமி, நம் காடு, நம் காற்று ஒவ்வொன்றையும் பாதுகாத்து பூமியிலுள்ள அனைத்தையும் பாதுகாக்க நாம் கை கொடுப்போம்.

**இலக்கு 16. அமைதியும் நீதியும்**

எமக்கு கிடைத்துள்ள அமைதியும் நீதியும் என்பது நிலைத்திட இனங்களுக்கிடையில் ஒற்றுமையாக வாழப்பழகுவதுடன், நாட்டில் நடைபெறும் வன்முறைகளைத் தடுத்து நீதியையும் அமைதியையும் நிலை நாட்டிட அரசுடன் நாம் ஒவ்வொருவரும் இணைவோமாக.

**இலக்கு 17. இலக்குகளை அடைய கூட்டாண்மை**

அரசு முன்வைக்கும் ஒவ்வொரு கொள்கைகளும் பாமர மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது எனது எண்ணம்.2030 இல் அடைந்து கொள்ள வேண்டிய நிலையான அபிவிருத்தி இலக்குகள் என அரசாங்கம் இவற்றை முன்வைத்துள்ளது. இவ் இலக்குகளை விளங்கிக்கொண்டு அவற்றை வெற்றி கொள்ளச் செய்ய ஒவ்வொரு குடிமக்களது கூட்டாண்மையும் கட்டாயமானது. நாட்டின் அபிவிருத்தியை உயர்த்திச் செல்ல பெண்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசிய மானது. இவ்வாண்டின் மகளிர் தின தொனிப் பொருளுக்கு அமைவாக "நிலையான எதிர்காலத்துக்கு வலுவான பெண்கள்" என்பதற்கமைய பெண்கள் வலுவூட்டப்படுவதுடன் இவ் இலக்குகளை அடைந்து கொள்ள அனைத்து நாட்டு மக்களும் கூட்டாண்மையுடன் கரம் கோர்ப்போமாயின் நிலையான அபிவிருத்தி நம் உள்ளங் கைகளில்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்

**திரு.தி.புஸ்பகரன்**
ஆசிரியர்,
வ/பட்டிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை

மாணவர்களிற்கு "அறிவொளி" புகட்டுவது சேவை என்ற
உண்மை உணர்வில் எமக்கேன் - ஐயம்
வையத்தில் உயர் சேவையாலே நல்ல
வாண்மைமிகு மாணவர் பயின்றிடும் கலை

ஏடு தூக்கிப் பள்ளியில் அவர் ஏற்றமுற
எண்ணும் எழுத்துமிரு கண்கள் என ஊட்டி நல்
உள்ளங்களை நலமாக வளர்த்து
எம் மொழிப்பற்றை உள்ளத்தில் மதித்திடலாக்கி

உயர்வு தரும் வழியிலே இட்டு வையகத்தில்
இயல், இசை, நாடகம் தனை இனிதாய் - நல்
விளங்கிடவே வழியமைப்போம்
தெய்வீகப் பணியினை செப்பிடுவோம் மறவாமல்
நாளில் ஒரு முறையேனும் நாவில்
நீதி நூல்களைப் புகட்டிடுவோம்
நீதியாக நடந்து கொள்வதற்கே போற்றிடுவோம்.
பெரியோர்களை மதித்திடுவோம் சிறியோரை

ஈசன் அருளால் ஈசனுக்கே உபதேசித்த
குகனின் அருளைப் பெற்று வாழ்ந்திடுவோம் - தரணியிலே
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் - மங்காத
தமிழ் என்று வாழ்ந்திடுவோம் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம்

கலாபூஷணம் தெய்வேந்திரம்பிள்ளை

ஓங்கி வளர்ந்து சடைத்துக் கிளை விரித்து குளிர்ந்த கூடாரமாகக் காணப்பட்ட மாமரம் அந்த மாபெரும் மாமரத்தின் கீழே உள்ள சருகுகளைக் கூட்டித்துப்பரவு செய்துவிட்டு தனது கட்டிலை அதன் கீழ் போட்டு ஆசுவாசமாகப் படுத்திருக்கிறார் ஆறுமுக மண்ணர். தலைமாட்டிலே புதுப்பானையில் நிறைய குளிர் தண்ணீரும் ஒரு சிறு செம்பும் வைக்கப்பட்டுள்ளன. எல்நினோ கால நிலையால் எழுந்து எகிறிச் செய்கின்ற சூரிய வெப்பத்தின் கதிர்களையெல்லாம் இழுத்து விழுங்கி ஏப்பமிட்டுத் தூய குளிர்த் தென்றலைப் பரிசாக அள்ளி வழங்கியது மாமரம்.

ஒரு மரம் பத்து குளிர்சாதனப் பெட்டியின் வேலையைச் செய்கிறது என்பதை படிப்பறிவு பெற்று பட்டதாரியாகி உயர்ந்த பதவி வகித்த அவரால் தெளிவு பெற்ற சமாச்சாரமாகும். குளிர்சாதனப் பெட்டியோ காற்றாடியோ மனிதவுடலுக்கு ஆரோக்கியமானதில்லை என்பதை அவர் அறிவார். அன்றைய வீரகேசரி பத்திரிகையை எடுத்து விரித்த அவரின் கண்களில் ஒரு செய்தி உலுக்கத் தொடங்கிவிட்டது. நூற்றி ஐம்பது ஆண்டுகளிற்கு இல்லாத வெப்ப அதிகரிப்பு பசுபிக் சமுத்திரம் சூடாகி வெப்பக்காற்றுக்களை வீசுவதாலும் மனித நடத்தையால் ஏற்பட்ட பச்சை வீட்டுக் காற்றுப்படையின் துளை காரணமாகவும் இது ஏற்பட்டுள்ளது என்றிருந்த செய்தியானது அவருடைய அடி வயிற்றைக் கலக்கத் தொடங்கியது.

அன்றாடம் பத்திரிகை வாசிக்கும் பழக்கம் பத்து வயதிலே அவரிடம் தொடங்கி விட்டது. அப்பொழுதெல்லாம் பத்திரிகைகள் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவு. தினபதி ஆரம்பத்தில் பத்துச்சதம். பின்னர் பதினைந்து சதம் ஆனால் இன்றோ அடிக்கடி விலையேறி வந்து வீரகேசரியும் முப்பது ரூபாவாகி விட்டது. அத்தோடு முடியப்போவதில்லை திடீரென அரசாங்கம் அறிவிக்கின்ற நள்ளிரவு விலையேற்றம் போல் விலைகள் தெறித்துப் பாய்ந்து ஏறி எகிறி விடலாம். என்னதான் இருந்தாலும் வாசிப்பில் இன்பங்கண்டவர்களிற்கு இதுவெல்லாம் ஒரு பிரச்சினையில்லை. தற்போது வாசிப்போர் தொகை வெகுவாகக் குறைந்து வருகிறது. இதனால் சிந்தனை யாற்றலும் படைப்பாற்றலும் பின்தங்கி விடுவதோடு நன்மை தீமையறியாத முட்டாள் கூட்டங்கள் நாள்தோறும் பல்கிப் பெருகி வருகின்றனர்.

வெப்பகாலம் ஆரம்பத்திலிருந்து தொடர்ச் சியாக மாமரத்தின் கீழே பகற்பொழுதை ஆனந்தமாய் போக்கி வருகிறார் ஆறுமுக மண்ணர். இன்று அவர் பத்திரிகையை கையில் எடுத்த போது இந்தியாவில் நாலாயிரத்துக்கும் அதிகமானோர் வெப்பம் காரணமாக இறந்த செய்தியைக் கண்ணுற் றதும் அவரது இதயம் இரத்தக்கண்ணீர் வடித்தது. தேகமெல்லாம் நடுங்கத் தொடங்கவே அடுத்த அடுத்த பக்கங்களை புரட்டலானார்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மன்னார் போன்ற எமது நாட்டிலும் சிலர் இறந்து போன செய்தியால் மேலும் மனம் குழம்பத் தொடங்கினார்.

மேலும் இவ்வருட நடுப்பகுதியில் எல்நினோ காலநிலை மாறி லாநினோ காலநிலை வருகிறது எனவும் கடுங்குளிர் வெள்ளப் பெருக்கு பெருமழை போன்ற காலநிலைகள் என்றுமில்லாத வகையில் ஏற்படும் எனவும் காணப்பட்ட செய்தியால் நெக்குருகிப் போனார். முதியவர்கள் இவற்றையெல்லாம் தாங்க மாட்டார்கள் சாதாரண காலங்களி லேயே முதியவர்களிற்கு வெயில் வடிவில் காலதேவன் காத்திருக்கிறான். குளிர் காலத்தில் பல முதியவர்கள் மூச்சை நிறுத்தி விடுவதைக் காண்கின்றோம். வயது செல்ல செல்ல இரத்தம் கெட்டு விடுகிறது. அறுபது வயதுவரையில் சுகதேகியாக இருப்பினும் அதன் பின் ஏதோ ஓரு சில நோய்களின் துணைகள் தேடி வந்தடைகின்றன.

நீட்டி நிமிர்ந்து படுத்திருந்த ஆறுமுக மண்ணர் திடுக்கிட்டு எழுந்து கொண்டார். தலைமாட்டில் இருந்த தண்ணீர் பானையிலிருந்து ஒரு செம்பு தண்ணீரை மொண்டு விழுங்கினார். மாமரக்காற்று இதமாகச் சாமரம் வீசியது. ஏதேனும் சிறுசிறு வேலைகள் நிமித்தம் வெளியில் சென்றாலே போதும் தோலெல்லாம் எரியும் கறித்தூளை உடலில் கொட்டியது போல் இருக்கும். அதிக அளவில் வியர்வை பெருகும். நாக்கு வரளும். பெருத்த களைப்பாய் இருக்கும்.

சூரியனை முழுமுதற் பொருளாக பரம்பொருளாக அனைத்து தெய்வங்களின் வடிவமாக வழிபடும் சமயம் சௌராட்டிரம் ஆகும். மந்திரங்களின் சாரமாக மகாமந்திரமாக விளங்குவது காயத்திரி மந்திரமாகும். அனைத்து தெய்வங்க ளிற்கும் காயத்திரி மந்திரம் உண்டு. காயாத்திரி மந்திரத்தின் தலைவர் சூரியனாவார். எந்த தெய்வத்திற்காகவும் காயத்திரி மந்திரத்தை ஒதினால் அது சூரியனையே சேரும்.

எனவே காயாத்திரி மந்திரமாகவும் அதன் பயனாகவும் இருப்பவன் சூரியனேயாவான். சூரியன் அனைத்து கடவுளர்களாகவும் அனைத்து உயிர்களாகவும் முன்னோர்க ளாகவும் உள்ளவன். மழையைத் தருபவன் பனியை அகற்றுபவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய ஐந்தொழில்களும் அவனாலேயே தான் நிகழ்கின்றன.

சூரிய காயத்திரியை நன்கு மனனஞ் செய்துள்ள ஆறுமுகமண்ணர் உதயத்திலும் மறைவிலும் அங்கசுத்தி செய்து சிறிது தண்ணீரை ஊற்றி பூப்போட்டு அந்த மந்திரத்தை நாள்தோறும் சொல்லி வருபவர். நோய்நொடிகளிலிருந்தும் கொடியபகை பேராபத்துக்களிலிருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய காயத்திரி அவரைப் பல தடவை காப்பாற்றி வந்துள்ளது.

போர்க்காலங்களில் காப்பரண்களில் பதுங்கி இருக்கும்போதும் வெட்ட வெளியிலும் வீட்டிலும் பிற இடங்களிலும் அவர் பல தடவை துண்டுதுண்டாகப் பறக்க வேண்டிய தருணங்கள் வந்து சென்றன.

**"ஓம் அச்வஜ்ஜாய வித்மகே**

**பாதகஸ்தாய தமஹி தந்நோ**

**சூரிய பிரசோதயாகி ஓம் அம்**

**ஆதித்தாய நமஸ்தே"**

என்ற அந்த சூரிய காயத்திரி கேட்டவரம் அளிக்கவல்லது. நினைத்தவை நிறை வேறும். பகைத்தவர் பதறுவர். பாவிகளை வேரறுக்கும். "ஓம் என்பது சூரியனே யாவான். வேறு சொற்களை பாவிக்காது "ஓம்" என்று மட்டும் சொன்னால் போதும். பல நன்மைகள் உண்டாகும். சொற்கள் மந்திரமாகும் ஒவ்வொரு சொற்களும் சக்தியடைதலை ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும் என்பார்கள். மந்திரங் களைக் கூறும்போது அந்த தெய்வம் அச்சொற்களை உருவாகக் கொண்டு காட்சி தந்து வேண்டியதை வழங்கி விடும்.

அவ்வாறு ஆறுமுகமண்ணர் காயத்திரி மந்திரத்தைச் செபித்து மழையைக்கூட வரவழைத்திருக்கிறார். வற்றாப்பளை அம்மன் மீது பாடப்பட்ட மழைக்காவியத்தை பல தடவை பாடி மழையை அவர் பல தடவை வரவழைத்திருக்கிறார்.

நேரம் மாலை ஐந்து மணி ஆறுமுக மண்ணர் எழுந்து கிணற்றடிக்குச் சென்று நன்றாக முழுகுகிறார். முழுகி முடிந்ததும் அவருடைய மனமும் உடலும் குளிர்கின் றன. சிறிது நடுக்கத்துடன் பூப் பிடுங்கி செம்பில் தண்ணீர் எடுத்து மேற்குத்திசை நோக்கி நீரை ஊற்றி பூவைச் சொரிந்து திருநீறு பூசி முறைப்படி விநாயகர் போன்ற தெய்வங்களை வணங்கி பின்னர் சூரிய காயத்திரி ஓதத் தொடங்கினார். மாலைநேரச் சூரியன் இன்னும் கோபம் ஆறாதவனாக நெருப்புக்கோளமாக சுழன்றபடி மெல்ல மெல்லக் கீழ் இறங்குவது போல பிறசாடு களிற்கு இடம்மாறுகிறான்.

மழை விட்டு தூவானம் விடாது போல சூரியக்கதிர்களின் சுவாலையை வாங்கி பூமி தன்னிடம் தேங்கிய வெப்பத்தை மெதுமெதுவாக விட்டுக்கொண்டிருந்தது. வானத்தே ஆங்காங்கே மழை மேகங்கள் திட்டுதிட்டாக கறுத்து இருண்டு மின்னி முழங்கி கால்விட்டு எங்கோ மழைபெய்து கொண்டிருந்தது. "சித்திரை சிறுமாரி" சித்திரையில் பெய்யும் மழை சருகொதுக்கி மழை என்றெல்லாம் முதியோர் கூறுவர். பல தடவை தோன்றிய மழைக்கோலம் பஞ்சாய் பறந்து விட்டது. சித்திரை மழையைத் தொடர்ந்து மேற்குத்திசையால் வீசுகின்ற சோளகக் காற்று வரும் வரை வெப்பத்தையும் புழுக்கத்தையும் வெல்ல முடியாது.

இரவு உணவை முடித்த ஆறுமுகத்தார் ஒரு சுருட்டைப் பத்தியபடி முற்றத்தில் சாய்மனைக் கதிரையில் சாய்கிறார். இரவு பத்து மணிவரை புழுக்கமும் வெப்பமும் தான் அதன் பின்பு விடியும் வரை நல்ல குளிர் அந்த நேரம் மட்டுமே இந்த உலகம் இன்ப உலகமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகமும் பாட்டியும்

**திரு.செ.இலக்சுமிகாந்தன்**
ஆசிரியர்.

"சீஸ் "சஸ் "சஸ்" என்ற சத்தத்துடன் வட்டமாக தட்டிய வடைகள் எண்ணெயில் பொறிந்து கொண்டிருந்தன. அடுப்பிலிருந்து வந்த புகையால் கண்ணைக் கசக்கித் துடைத்து புகையை கையால் விரட்டியபடி வடையை திருப்பிப் போட்டாள் வடைப் பாட்டி.

"அன்னம்மா" என்ற இயற்பெயர் கொண்ட அறுபத்தேழு வயதை எட்டி விட்ட மூதாட்டிக்குத் தான் "வடைப்பாட்டி" என்று அவ்வூர் சிறுவர்கள் செல்லமாக பெயர் வைத்துள்ளனர். அவ்வூரில் இருக்கும் பதினான்கு வயது பையன் தொட்டு இருக்கும் சிறுவர்களிற்கெல்லாம் அன்னம்மா வடை சுட்டு கடைக்கு கொடுத்து பிழைப்பு நடத்துவதுதான் தெரியும். எனவே அவளை வடைப் பாட்டி என்றே எல்லோரும் அழைக்கத் தொடங்கி விட்டனர்.

கா..கா.கா.கா. என்று தான் வடை சுடும் விறாந்தை ஜன்னலில் வந்து காகம் கரைய ச்சோய்..ச்சோய் என்று காகத்தை கலைத்தவள் வடை சுடுவதில் தனது காகத்தை செலுத்தினாள்.

அன்னம்மாவிற்கு நான்கு பிள்ளைகள். இரண்டு பெண், இரண்டு ஆண். எல்லோருமே திருமணம் முடித்துக் கொண்டார்கள். ஆம், பதினெட்டு வயதைக் கடந்ததும் அவரவர் தனக்குப் பிடித்தமானவரை திருமணம் செய்து கொண்டு போய்விட்டார்கள். அன்னம்மாவின் கணவர் கனகரத்தினம் இருபது வருடங்க ளிற்கு முன்பே ஓயாத குடி காரணமாக இறந்து போனார். கணவன் இறக்கும் போது மூத்த மகனுக்கு இருபது வயது. நாலாவது பெண் பிள்ளைக்கு பன்னிரண்டு வயது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனின் மறைவை அடுத்து ஒரு வருடத்தில் மூத்தவன் ஒரு பெண் பிள்ளையை கூட்டி வந்தான். தாய்க்குப் பிடிக்கவில்லை பெண் வீட்டாரின் நடத்தை யிலும் திருப்தி இல்லை. எப்படியெல்லாமோ சொல்லிப் பார்த்தாள் அன்னம்மா. அவன் கேட்பதாயில்லை. இறுதியாக உனக்கும் எனக்கும் உறவில்லை என்று பிரித்து விட்டாள்.

மூத்தவன் தனியாகப் போனதும் கவலை ஒருபுறம் வாட்டினாலும் குடும்பத்திற்காக உழைக்கவேண்டிய தேவை அன்னம்மா வுக்கு வந்தது. அன்று தொடங்கியவள் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து வடை சுட்டுவிட்டு, காலை ஆகாரம் செய்வாள். இளைய மகன் எழுந்ததும் வடையை கடையில் கொடுத்து பாடசாலை செல்வான்.

அன்னம்மா கூலி வேலைக்குச் செல்ல இரண்டாவது மகள் வீட்டிலிருந்து சமையல் வேலைகளை கவனிப்பாள். அவளிற்கு தையல் வேலையும் ஒரளவு தெரியும். வீட்டிற்கு வரும் சிறுசிறு தையல் வேலையையும் செய்து சொற்ப வருமானம் பெற்றாள். இப்படி சாதாரணமாக ஓடிக்கொண்டிருந்த குடும்ப வண்டி திடீரென குழம்பியது. வீட்டிலிருந்த வெளியுலகம் தெரியாது வளர்ந்த பெண் ஊரில் உள்ள ஒரு உதவாக்கரை பெடியனுடன் ஓடிப்போனாள்.

அன்னம்மா இடிந்து போனாள். மூத்தவன் தான் அப்படி போனான் என்றாள் வீட்டுக்குள்ளே இருந்த இவளுக்கு என்னவாயிற்று சிந்திக்ககூட அவளால் முடியவில்லை. எங்கு எப்படி தவறு நடந்தது மீண்டும் மீண்டும் யோசித்துப் பார்த்தாள்.

அன்றொருநாள் அப்பெடியன் வீட்டிற்கு வந்திருந்தான். அவனின் தாயாரின் தைத்த சட்டை ஒன்றை வாங்கிச் செல்ல வந்தவன் பெண்ணைக் கண்டு மயங்கிப்போனான். அவளை தன்வசமாக்க அவன் செய்த மிக இலகுவான வழிமுறை அவவிற்கு ஒரு கைபேசியை வாங்கிக் கொடுத்தான். தாய் மகளின் கையில் இருந்த தொலைபேசி பற்றிக் கேட்ட போது தான் வாங்கியதாகவும் எங்கள் வீட்டிற்கும் ஒன்று தேவைதானே என்று கூறி வாயடைக்க வைத்தாள்.

இன்று குடும்ப சுமை அன்னம்மாவிற்கு வரவர கூடிப்போக வளர்ந்த பிள்ளைகளும் வயது வர ஓடிப் போனதுகள். அன்னம்மாவிற்கு ஒவ்வொரு பிள்ளைகளும் ஓடிப்போகும் போதெல்லாம் அவள் சபிப்பதும் கோபப்ப டுவதும் இந்த கைபேசியை நினைத் துத்தான். தனது மூன்று பிள்ளைகள் தெறிகெட்டு ஓடியதற்கு கைபேசி தான் காரணமென்று அவவிற்குத் தெரியும். இருந்தும் அவளால் என்ன செய்ய முடியும். தனது அந்த சிறிய வீட்டில் இதுதான் எனது வாழ்க்கை என்று வாழ்ந்து கொண்டி ருந்தாள்.

பிள்ளைகள் தனியே பிரிந்து சென்றாலும் நன்றாக வாழவில்லை. காரணம் அவர்கள் சென்ற வீடுகளும் வறுமையின் பிடியில் இருந்த வீடுகளே. எனவே அவர்கள் வாழ்க்கையோடு பெரும் போராட்டங்களை நடாத்திக் கொண்டிருந்தார்கள்.

அப்பிள்ளைகளிற்கு என்று ஒரு அடி நிலம் கூட இல்லை. அன்னம்மா தனது பெயரில் இரண்டரை ஏக்கர் காணியை சிறு வீட்டோடு வைத்திருந்தாள். அக்காணியில் தென்னை உட்பட பல்வேறு மரங்கள் காணப்பட்டன. அவை அவ்வப்போது அவரிற்கு சிறு வருமானத்தைக் ஈட்டிக்கொடுத்தது. அன்னம்மா இப்போதெல்லாம் வடை மட்டுமே சுட்டுக்கொடுப்பாள். கூலி வேலைக ளிற்கெல்லாம் செல்வதில்லை. வடையையும் கடைக்காரர் வீட்டிற்கு வந்து எடுத்துப்போவார். அன்னாம்மாவின் வடைக்குப் ஊரில் பெரிய மவுசு.

அன்னம்மாவிடம் இருக்கும் காணியில் தமக்கும் ஒரு பகுதியை தரும்படி நான்கு பிள்ளைகளும் மாறி மாறி வந்து கேட்டார்கள். அன்னம்மா பிடிவாதமாக மறுத்து விட்டாள். தான் விரும்பியபடி ஒரு பிள்ளையும் வாழவில்லை. பிறகு உங்களிற்கு எதற்கு என்னுடைய சொத்து என்று கூறி துரத்தி விட்டாள்.

அன்னம்மாவிடம் ஊர் பெரியவர்கள் கிராம அலுவலர் அமைப்பு பிரதிநிதிகள் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரும் வந்து பேசிப்பார்த்தனர். பலன் கிடைக்கவில்லை. எனக்குப்பின் இக்காணி ஏதாவது ஒரு கோயிலுக்கு போகுமே ஒழிய இந்த தறுதல பிள்ளைகளிற்கு இல்ல என்று திட்ட வட்டமாகக் கூறிவிட்டாள்.

ச்சோச்சோ. என்ன காகம் இது. திரும்ப திரும்ப வந்து கொண்டிருக்கிறது என்று பேசிக்கொண்டு ச்சோ ச்சோ.என்று மீண்டும் காகத்தைக் கலைத்தாள். ஆனால் காகம் செல்வதாயில்லை. மீண்டும் சுழன்று சுழன்று வந்து காகம் கா.கா.கா என்று கரைந்தது. மீண்டும் துரத்த முற்பட்ட அன்னம்மாவிற்கு பாட்டியிடம் வடையை தூக்கிச் சென்ற காகக்கதை ஞபாகத்திற்கு வந்தது. காகத்தைப் பார்த்து சிரித்த அன்னம்மா. என்ன நரியிடம் ஏமாந்த காகமா நீ என்று கேட்ட அன்னம்மா. அது பழங்காலத்து காகம். அது நரியிடம் ஏமாந்தது. அடுத்த யுக காகம் நரியை ஏமாற்றியது. பிறகு வந்த காகம் நரிக்குப் புத்தி சொல்லிற்று. பிறகு வந்த காகம் நரியை உழைத்து சாப்பிட சொல்லிற்று. நீ எந்த காகம்?. அன்னம்மா கேட்டது காகத்திற்கு விளங்கியதோ இல்லையோ தலையை மட்டும் அப்படி இப்படித் திருப்பி பார்த்துவிட்டு கா..கா.என்றது.

காகத்தைப் பார்க்க பாட்டிக்கு பாவமாய் போய்விட்டது. ஒரு வடையை கொடுப்பதால் என்ன வந்திடப் போகுது தனக்குள் கூறிக்கொண்டு ஒரு வடையை தூக்கி போட்டாள்.

வடையைக் கண்டதும் வேகமாகப் பறந்து வந்து தனது அலகில் கௌவிக் கொண்டு அருகில் இருந்த மரக்கிளையில் போய் அமர்ந்தது காகம். பாட்டிக்கு சுவாரஸ்யம் ஏற்பட்டது. நரி வருமா? காகம் வெல்லுமா என்ற யோசனையுடன் காகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். காகம் வடையை தன் காலுக்கு கீழே வைத்துக்கொண்டு அக்கம் பக்கம் சுற்றி சுற்றி பார்த்தது. பின் தன் வாயைத் திறந்து கா.கா என்று இரு திசைக்கும் திரும்பி திரும்பி கரைந்தது. இக்காகத்தின் சத்தத்தைக் கேட்டதும் மேலும் ஐந்தாறு காகங்கள் அம்மரக்கிளைக்கு வந்தன. அவையும் இக்காகத்தைப் பார்த்து கா கா என்று கத்த மீண்டும் இக்காகமும் கத்தியது. காகங்கள் கதைக்குதுகள் போல என அன்னம்மா நினைத்துக் கொண்டாள்.

வடையை காலில் வைத்திருந்த காகம் அதனை கீழே போட்டது. வடை கீழே விழுந்ததும் புதிதாக வந்த காகங்கள் கீழே சென்று மாறி மாறி கொத்தித் தின்னத் தொடங்கின. வடையை கீழே போட்ட காகம் அடிக்கடி அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு இருந்தது.

பாட்டி திகைத்துப் போனாள். தன்னிடம் வந்து வடையை வாங்கிப்போன காகம் தன்னினத்தவரை கூப்பிட்டு வடையை கொடுத்து விட்டு தற்போது வேறு ஏதும் வருகிறதா என்பது போல பார்க்கிறதே. புதிதாக வந்த காகங்களில் சிறிய குரலுடன் கரைந்தவை குஞ்சுக்காகங்களோ!?

எண்ணெய் தாச்சியில் வடை பொரிவதைக் கூட கவனிக்காது காகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

என்ன அன்னம்மா பாட்டி நீங்கள் சொல்லு நீங்கள் என்னால் நம்ப முடியவில்லையே. யார் உங்கட மனச மாற்றியது. கிராம அலுவலகர் திகைத்துப்போய் கேட்டார். யாரும் மனச மாற்ற இல்ல ஐயா. நான் போன பிறகு பிள்ளைகள் சொத்துக்காக அடிபடக்கூடாது. அது தான் ஆளுக்கு அரை ஏக்கரா நாலு பேருக்கும் பிரிக்கச் சொன்னனான். இந்த காலத்துப் பிள்ளைகளை நம்பக்கூடாது. அதுதான் எனக்கும் அரை ஏக்கர் எண்ட காலத்திற்குப்பிறகு அத ஏதும் செய்வம் என்று சொன்ன அன்னம்மா மௌனமாக வீதியில் நடக்கத்தொடங்கினாள்.

அன்னம்மாவின் மனதினுள் முற்கால காகம் நரியிடம் ஏமாந்தது. அடுத்த கால காகம் நரியை ஏமாற்றியது. பின்பு நரிக்கு புத்தி சொல்லிற்று. நரிக்கு உழைக்க வழிகாட்டிக் கொடுத்தது. இது நவீன காலத்துக் காகம். மனிதருக்கும் பாடம் படிப்பிக்குது. என்று சொல்லிக் கொண்டு தனது வீட்டை நோக்கி நடந்தாள் வடைப்பாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன நடக்கிறது

**பிரபாகரன் வேதிகா**
பெரியகுளம், கனகராயன்குளம்.

முகநூலில் மூழ்கிக் கிடக்கிறது
பலரது வாழ்க்கை !
முகங்கள் பல மூழ்கடிக்கப்படுவதும்
முகநூலில் தானாம்!

அறியாத முகவரிகள் தோன்றுவதும்
முகப்புத்தகத்தில் தானாம்!
கள்ளக்கணக்குகள் பல வைத்து
கள்வர்கள் உலாவுரார்களாம்

கடமை கண்ணியம் கட்டுப்பாடு
எல்லாம் பேசப்படுகிறதாம்
பொல்லாத கலாசார சீரழிவு
எல்லையில்லாது தொடர்கிறதாம்

சொந்தங்கள் எல்லாம் சேர்வது
நட்பு வட்டத்திலாம்
கற்புக்கள் கூட அங்கே
களவாடப்படுகிறதாம்

செந்தமிழும் அதிலேதான் நல்லா
செழுமை பெறுகிறதாம்
பசுமை வாழ்வுகள் பலரைத்
தேடி வருகிறதாம்

தேற்றம் விதிகளெல்லாம் அங்கே
அறியலாமாம் சிலரின்
தோற்றப்பாடுகள் கூட அப்படியே
தோன்றுதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிகளும் கட்டுரைகளும் செய்திகளும்
முழுமையாய் தருகிறதாம்
கழுதைகளும் முகநூலில் இருந்து
அசிங்கங்கள் செய்யுதாம்

கவன எச்சரிக்கைகளும் அங்கே தான்
கற்பிக்கப்படுகின்றதாம்
சொற்சிப்பிகள் பலர் இங்கே நம்
வித்தகத்தைக் காட்டுகிறார்களாம்

முகப்புத்தகத்தில் தான் முகவரி
தொலைத்தலும் தேடலும் நடக்கிறதாம்
தொல்லைதரும் புத்தகம் இதுவென
வாதப்பிரதி வாதங்களும் நடக்கிறதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுகைக் கொத்து

**திரு.சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரப்பிள்ளை**
இறம்பைக்குளம், வவுனியா.

கொல்கின்ற வெப்பம் நில்லாதோட வேண்டும்
கொலுவிருக்கும் அதிகாரம் நல்லதையே எண்ண வேண்டும்
சொல்கின்ற சொற்களெல்லாம் மந்திரமாக வேண்டும்
கொல்கின்ற சொல் தன்னை இல்லாதாக்க வேண்டும்
போராலே வந்த துயர் எவராலும் தீர வேண்டும்
பொல்லாத வறுமை இல்லாமல் ஆக வேண்டும்
பேராசை புகழாசை நேராமல் பொதுச்சேவை
சீராகி வாழ்வெல்லாம் சிறப்பாக மாறவேண்டும்

ஏமாற்றும் தந்திரங்கள் எந்நாளும் வேண்டாம்
எல்லோரும் இன்புற்றிருக்க எண்ணாதிருக்க வேண்டாம்
தாமாற்றுங் கடமையிலே தவறுதல்கள் வேண்டாமே
தரணியிலே சொர்க்கமதை உருவாக்க வேண்டும்
நாமார்க்கும் குடியல்லோம் நாமடிமையில்லை
நாளெல்லாம் சுதந்திரமாய் நாம் வாழ வேண்டும்
நாமாற்றல் கொண்டவர்கள் நல்லவர்களென்றே
நம்பி நம்மை உருவாக்கி நாடுபோற்ற வாழ்வோம்.

பூச்சொரியும் பூசகரும் புனிதமறை பேசும்
பாச்சொரியும் பாடகரும் நல்லதையே செய்க
ஆச்சரியம் என்றுலகம் அழைப்பதிலெல்லாம்
ஆத்மாவின் அழகிருக்க அதிசயம் தான் ஏனோ
பேச்சென்னும் பேய்பிடித்து பிதற்றுபவரெல்லாம்
செயலாலே பேசி நிற்கும் செயலறிய வேண்டும்
மூச்சொன்று நின்று விட்டால் காலம் வந்ததென்பார்
மூச்சுள்ள காலங்களைப் பேச்சாலே கொல்வார்

வால்பிடித்தும் கால்பிடித்தும் காலூன்றி நிற்பார்
முன்வரிசை கேட்டு நின்று முட்டி மோதிக் கொள்வார்
கோள்மூட்டி பகை மூட்டி கொடுமை பல செய்வார்
ஆள்திரட்டி திறமைகளை ஆழவே புதைப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிவந்த ஏணியையே எட்டி உதைப்பார்
ஏழைகளைத் தோணியென ஏறியே அமர்வார்
நாறிப்போகும் எரிந்து போகும் நாட்செல்ல மண்ணாகும்
கூறிவைத்தேன் நயவஞ்சகர் குலத்தோடழிய வேண்டும்

போதையின் பாதையிலே போகையிலே மானிடமும்
ஆசைப்பேய் வாட்ட அழிக்கின்றார் அழிகின்றார்
காதை மூடிக்கொள் கண்ணை மூடிக்கொள்
வாதை தரும் பேச்சுவாயை மூடிக்கொள்
ஓசையடங்கும் நடுநிசியில் ஓர் கூட்டம்
வாள்ஏந்தி வந்துவிடும் பலியெடுக்க
மாதை. மாதாவை மக்கள் பிதாவை
மடியச்செய்து பொருள்தேடும் மடமை அழியட்டும்

நூலேந்தும் கைகளிலே சிசுவேந்தி ஒரு
நுண்டிடையாள் தளிர்க்கொடியாள்
நால்மூன்று வயதுடையாள் நடுத்தெருவில்
நடக்கக்கண்டு நான் ஓர்நாள் நடுங்கினேன்
ஆல்போன்று விழுதிறக்கி அவனி போற்ற
அன்று வாழ்ந்த முன்னோர்கள் சென்ற பாதை
கால்போன தடம் மாறிக் கலியின் கோலம்
காட்சிகளாய் விரிகிறதே முடியட்டும் இத்துயரே

விரல்நுனிப் பரப்பில் வியன் உலகைத் தந்து
வியந்திட வைத்தது விஞ்ஞானம் ஆனால்
வரல்முறை வாழ்வின் வரிசையை மாற்றி
வதைபடச் செய்வது முறையாமோ
குறள்நெறி போற்றும் குவலயம் எமது
தமிழ்நெறி அறிந்து பயன்படவே
வரல் ஆறு வடித்து வரலாறாய் வாழ
வரம்பிடுவோம் தமிழின் பண்பாடு

குடியிருக்க காணி வீடு எல்லோர்க்கும் வேண்டும்
குடிபோதை மதுபோதை மற்றுமுள்ள போதையெல்லாம்
அடியோடு மறைய வேண்டும் ஆமாம் எல்லோர்க்கும்
அடிமேலே அடிபோட்டு அகற்ற வேண்டும்
வன்புணர்வு செய்வோரை வகையாய் பிணைத்து
கண்கணாக் காட்டில் கட்டி வைத்தே
உன்செயலுக்கிதுவே உகந்த நீதியெனக்கூறி
பிறப்புறுப்பு அறுப்போடு நலம்போடல் நன்றாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்கள் மூலமாக இந்த உருவங்களை
உலகமெல்லாம் பார்க்க உலவவிடலாம்
பூடகங்கள் தேவையில்லை புதிய வழியில்
புவி திருந்த வேறுவழி புரிவதில்லை
ஆடவர்க்கு மட்டும் அதிக தண்டணையா
ஆரணாங்குகள் எல்லோரும் புனிதர்கள் தானா?
கூடாது என்று இங்கு கூப்பாடு போடுவோரே
கொஞ்சம் பொறுங்கள் கூறுகிறேன் நானே

காமத்தில் எப்பெண்ணும் முந்துவதில்லை
கணப்பொழுதில்  கைவைப்பான் ஆடவனே
சாமத்தில் கோழிபோல் கூவி அந்தச் சண்டாளன் இந்திரனும்
கற்பரசி அகலிகையைக் கணவன் வேடத்தால்
நாமத்தால் நடித்துக் கெடுத்த நரித்தனத்தை
நாமெல்லாம் புராணத்தால் நன்கறிவோமே
ஓமத்தீபோல் உள்ளம் ஓங்கி எரிந்து புகைய
காமத்தீ மட்டும் கருகாது வளர்கிறதே

அநியாயம் செய்தவனை முனியாட்டி கேட்பான்
ஆங்காங்கே கணவத்தனாய் அவன் முழுசிக்கொள்வான்
இனியாவது அவன் திருந்த மாட்டான்
இரகசியத்திட்டத்தில் அவன் இருப்பாவான்
கனியிருப்பக் காய் கவரும் அநியாயம்
கனவிலும் இல்லாத கதை வேண்டும்
புனிதர்களின் வாழ்வரிகள் புரியவேண்டும்
புவிமீது அவர் வாழ்வே மலர வேண்டும்.

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனம்

திரு.ஜெயக்குமார் வனோஜா
கல்மடு. வவுனியா.

ஆண்டாண்டு காலமாய் ஆட்சிபுரிகின்ற
பெண்கள் வாழ்வில்
வேண்டாத விருட்சமாய் வளர்ந்து நிற்கும்
உழைத்து நிற்காத முதுகெலும்பற்ற
ஆண்கள் கேட்டிடும் பிச்சைக்காசு

ஆயிரம் எண்ணங்கள் மனதோடு இருக்க
ஆவலோடு காத்திருக்கும் பெண்
இருமனம் சேரும் திருமணத்தில்
இணைவும் வேண்டுமா? சீதனம்
மணவறை கண்டபெண்
மாங்கல்யம் பெறும் தருணம்
கோலத்தை மாற்றிவிடுகின்ற
கொடியபுயலே சீதனம்

அருகில் நின்று பார்த்த மச்சான்
உருகி உருகி அருகில் வர
சொந்தங்கள் கை கூடும் வேளைதனில்
வந்திடுமே சீதனம்

மறுவீடு போகும் பெண்ணின்
தாய் வீட்டைக் காலிசெய்யும்
மிகவும் கடுமைமிக்க
ஆயுதம் சீதனம்

காலங்கள் கழிந்தாலும்
கோலங்கள் மறைந்தாலும்
மாறாத இந்நிலை
மீண்டும் வருமோ வாழ்வு என்று
மாண்டுகிடக்கும் பெண்ணின்
வாழ்வைத் தட்டியெழுப்பும்
நாள் எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வும் கலாசாரமும்

**மகேந்திரன் சீதா**
சித்தி விநாயகர் கலா மன்றம்

கலாசார விழாவின் முக்கியத்துவம் நம்மவர்க்கு மிகமிக வேண்டப்பட்டதாகும். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் மூலம் இன்பத்தமிழ் வளர்ப்பதை நோக்காகக்கொண்டதாகும். கலாசாரம் என்பது நாடு, நகரம், இடம், ஊர் போன்றவற்றை சேர்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், அறிவு, கலை, ஒழுக்கம், சமயம், சிந்தனை வெளிப்பாடு, சட்டம் என்பவற்றுடன் வாழ்க்கை தொடர்பு கொண்டிருக்கும் பொருள் போன்றவற்றின் கூட்டு மொத்தமே ஆகும். நம் முன்னோர்களால் காலம் காலமாக வளர்த்து வரும் கலைப்பண்பாட்டைக் கூறுவதே கலாசாரம் ஆகும்.

கலை கலைக்காக மட்டுமன்றி கலை ஆன்மீக அனுபவத்திற்காகவே என்னும் கலைத் தத்துவத்தையும் அழகியல் ரசனையையும் அரவணைப்பதாகவே கலாசாரம் அமைந்துள்ளது. உண்மையில் கலையுடன் கலாசாரம் பின்னிப்பிணைந்துள்ளது. கலை உலகியலையும் ஆன்மீக அனுபவத்தையும் இணைப்பதாக உள்ளது. நாகரீகம் வளர்வதற்கு முற்பட்ட காலத்தில் பல்வகை நிலங்களிலும் வாழ்ந்த பல்லின மக்களால் பேணப்பட்ட தத்தம் கலாசாரம் பின்னணிக்கு ஏற்ப கலைகளைப் பயின்று கொண்டனர். இவ்வாறான இசையானது இறைவனது ஆனந்தத் தாண்டவத்தினாலேயே நடனம், நாடகம் என்பன பற்றி அறிந்து இருப்பதற்கு முதன்மை கொடுப்பதாகும். இது எவ்வாறெனில் இந்துக்களைப் பொறுத்த வரையில் ஆலயங்களை மையப்படுத்தியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை வளர்ச்சி கண்டு கொள்ளப்படுகின்றது.

கலைகளின் உறைவிடமாக ஆலயங்கள் உள்ளன. அதிலும் திருமுறைகளில் காணப்படும் கலை கலாசாரமாகவும், பண்ணிசையாகவும், வில்லிசையாகவும், வாத்திய இசையாகவும் பல பரிமணாங்களைப் பெற்றுள்ளன. இதே போன்று கலைச் சுவடுகளை அழியாமல் பாதுகாப்பது கலாசாரமே எனக்கூறின் மிகையாகது. நாட்டார் இசைவழக்கில் கும்மி, கோலாட்டம், சிந்து, வசந்தம் போன்றவையும் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துள்ளது. இதே போன்று தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகையில் தமிழ் மொழியானது எல்லா மொழிகளிலும் தொன்மையான மொழியாகவும் உள்ளது. அத்தமிழின் இனிமை கண்டே பொதிய மாலையில் வாழ்ந்த அகத்தியர் முதற் கொண்டு பல புலவர்களாலும் நன்றாக வளர்க்கப்பட்டு வந்துள்ளது. அதனால் தான் தமிழ் ஏராளமான இலக்கண இலக்கிய நூல்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இவ் இலக்கியங்கள் யாவும் நம்மவர் கலாசாரத்தை பேணுவதாக உள்ளது. காலம் காலமாக வளர்ந்து வரும் கலைகளின் வளர்ச்சிக்கு இதுமே மூலகாரணம் ஆகும்.

நாடகத்தமிழை நோக்கின் ஆங்கில மொழியிலே நாடகங்கள் பல தோன்றினாலும் நாடகம் என்னும் கலை வடிவம் தமிழிலேயே தோன்றி வளர்க்கப்பட்ட தாகும். சுவாமி விபுலானந்தர் மூன்று தமிழையும் ஒப்பு நோக்கி முத்தமிழ் இலக்கியமாக யாழ்நூலை இயற்றித் தந்துள்ளார். இவை யாவும் கலாசாரத்தை பேணுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்வாழ பயிர் வளர்ப்போம்

ல.அட்சஜன்
தரம்: 7, வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்

"வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரின் வார்த்தைகளை கொஞ்சம் நிறுத்தி வாசித்து உரைத்து பார்ப்போம். வாடிய பயிரைக் கண்ட வள்ளலார் வாடினார் என்றால் அது வள்ளலார் பயிரின் மேல் கொண்ட பற்று, பாசமா? அல்லது அப்பயிர் வாடியதால் நானும் உணர்விழந்து வாடிப்போனேன் அதாவது சோர்ந்து போனேன் என்று சொல்லாமல் சொன்னாரா? சற்று சிந்தியுங்கள். வாடிய பயிரை கண்டு மனம் இரங்குவது எம் எல்லோருக்கும் இருக்கும் பொதுவான இயல்பே. அப்படியானால் வள்ளலார் கூறியது மட்டும் அப்படி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வார்த்தையோ!

இங்கு தான் நாம் ஆழ சிந்திக்க வேண்டியுள்ளது. வாடிய பயிரைக் கண்டபோது வாடினேன் என்பது தான் வாடியதாக கொள்ளலாம். ஏனெனில் மனித வாழ்வில் பயிர்களின் செல்வாக்கு மிகப்பிரதானமாக உள்ளது. மனித வாழ்விற்கு பிரதானமாக விளங்கும் பிராண வாயுவை வெளியிடும் மிக முக்கிய தொழிற்சாலையாக பயிர்கள் காணப்படுகின்றது. மனித உயிரினங்கள் வாழ உவப்பான சூழலைக் கொண்ட இப்புவியில் மட்டுமே இப்பிராண வாயு காணப்படுகின்றது. அதுவும் வெறும் நான்கு விதம் மாத்திரமே காணப்படுகின்றது. இவ்வாறு மிகச்சொற்பமாகக் காணப்படும் காற்றைத் தான் கோடிக்கணக்கான மனிதர் சுவாசித்து வாழ்ந்து வருகின்றனர். எனவே மனித வாழ்விற்கு பிரதான இடத்தைப் பிடித்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காற்றை வழங்கும் பயிரைப் பராமரிப்பது மனிதர் ஒவ்வொருவரதும் கடமை யாகின்றது.

அத்துடன் புவி பல்வேறு காரணத்தால் வெப்பமடைந்து வருகின்றது. புவியின் மேற்பரப்பை விட புவியின் உட்கோளவகம் மிக வெப்பமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு புவிக்கு உள்ளும் வெளியும் வெப்பம் அதிகரிப்பதால் உயிரினங்களின் வாழ்க்கை கேள்விக் குறியாகிக் கொண்டுள்ளது. இந்நிலையில் புவியின் வெப்பநிலையை சமநிலையில் வைத்திருக்க காலக்கிரமமாக மழை பொழிய வேண்டியுள்ளது. மழையானது போகத்திற்கு போகம் கிரமமாக பெய்து புவியின் வெப்பநிலையை சமப்படுத்துவதோடு மனிதனது நீர்த் தேவையையும் பயிர் உயிர்களின் வாழ்க்கைக்கும் துணைபுரிய வேண்டும். இவ்வாறு மழை வீழ்ச்சியானது கிரமமாக நடை பெற நீர்வட்டம் அல்லது நீர் சுழற்சி என்பது கூறப்படும் செயற்பாட்டிற்கு அதாவது பூமியின் மேற்பரப்பில் உள்ள நீரை உறிஞ்சி தனது தேவைக்கு எடுத்து மேலதிக நீரை ஆவியாக்கி வளி மண்டலத்தில் சேர்க்கும் பொறுப்பை தாவரங்கள் செய்கின்றன எனவே நீர ஆவியாகும் செயற்பாட்டிற்கும் தாவரங்களின் பங்களிப்பு இன்றியமை யாததாகும்.

தாவரமானது ஒழுங்கான நீர் சுழற்சியை மேற்கொள்ளாது விடின் அதாவது தாவரம் நீரை உறிஞ்சும் செயற்பாட்டை மேற்கொள் ளாது விட்டால் வாடிப் போய் காணப்படும் தாவரம் வாடிப் போனால் நீர் ஆவியாகும் செயற்பாடு தடைப்படும் நீர் ஆவியாக விட்டால் மழை வீழ்ச்சி குறைவடையும் மழை குறைவடைந்தால் புவி வெப்பமாகும். புவியின் வெப்பநிலை அதிகரிப்பதால் உயிரினங்களின் முக்கியமாக பயிர்களின் வளர்ச்சி குறைவடையும். பயிர்கள் வளராவிடின் பிராணவாயுவின் வெளியேற்றம் குறைவடைய ஏனைய நச்சுக்காற்றுக்களின் வீதம் அதிகரிக்கும். இவை மனித வாழ்க்கைக்கு இடையூறா கவும் அச்சுறுத்தலாகவும் அமையும்.

எனவே வள்ளலார் குறிப்பிட்ட "வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று பயிரின் மேல் உள்ள பாசத்தால் என்பதற்கப்பால் நம் உயிர் வாழ்க்கைக்கு மிகமுக்கியமான பயிர்களின் உயிர் வாழ்க்கை பிரதானமாகும். எனவே பட்ட மரம் ஒன்றைத் தறிக்க முன் பச்சை மரமொன்றை வை என்று யாரோ சொன்னதற்கு இணங்க உயிர் வாழ பயிர் வளர்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்த நம் உரிமை

**பிருதுவி சோதிராசா**
தரம்: 12,
வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்

நேற்றுவரை
நேசிக்கப்பட்ட நாம்
இன்று தேடுவாரற்றுக்
கிடக்கின்றோம்

நீண்டு வளர்ந்த
தென்னை மரங்களும்
பல கதை சொல்லும்
மழலை மொழிகளும், புன்சிரிப்பும்
காணாமல் போய்விட்டன

பூலோகமோ மெல்ல மெல்ல
பாவலோகம் ஆகின்றது.
சிறுவர் நம் உரிமையும்
சிதைந்து காணாமல் போகின்றது.

அன்று நம் வாழ்வில்
தென்றலாய் வீசிய காற்றும்
இன்று கந்தகம் கலந்து
தீயாய் சுடுகின்றது நம்மை

நவீனமோ கடல்தாண்டி
விண்தாண்டி வளர்கின்றது
மனித மனங்களோ
பாதாளத்தினுள் புகுந்து
புவியின் மையத்தை தாண்டுகின்றது.

முழு உலகமும் சுழலும்
அன்பு என்ற அச்சாணியோ
உருக்குலைந்து
காணாமல் போய்விட்டது இன்று

மனிதாபிமானம்
மனதளவில் மரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமத பேதங்களும்
காம வெறிகளும்
மூங்கில் காடாகிவிட்டன.

சிறுவர் நம் வாழ்வின்
இலட்சியங்கள் யாவும்
கனவாகவே கலைந்து போகின்றது.

கனவுகளுக்குள் வாழும் நாம்
நிஜத்தை தேடுகின்றோம்.
அன்பைத் தேடுகின்றோம்.
என் தந்தையின் கையிலோ
பியர் போத்தல்
என் தாயின் கையிலோ
தொ(ல்)லை பேசி
தங்கையின் கையிலோ
இரவல் புத்தகம்
என் கையிலோ
என் கூலிச் சம்பளம்

பெற்றவர் கைவிட்டாள்
பிள்ளை
மற்றவர் தயவில்
வாழ்ந்திடும் அவலம்

உடனே
உற்றுக் கேளுங்கள்
உங்களினிதையம் கூட
தடம் மாறித் துடிக்கும்
ஒரு கணம்

சிறுவர் உரிமையாம்
1929ஆம்
இருந்தும் என்ன பயன்
நடப்பது நடந்து கொண்டுதானே
இருக்கின்றது.

முதலில் மனங்களை
சுத்தப்படுத்துவோம்
முழு உலகமும் சுத்தமாகும்
போர்க்கலங்களும்
பூக்கலயங்கள் தாங்கிடும்
எம் வாழ்வும் ஒளிமயமாகிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகடிக்கத் துடிக்கும் சிலுவை மைந்தர்கள்

**வி.சுகன்ஜா**
தரம்: 01. வ/குளவிசுட்டான் அ.த.க. பாடசாலை

இன்றைய சிறார்கள்
நாளைய தலைவர்கள் - எம்
தாய் மணித் திருநாட்டின்
மனித குலத்தை
தக்க வைக்கும் மைந்தர்கள்

சர்வதேசமே சற்று இறங்கிப் பார்
சற்று சல்லடை போட்டுப்பார்
சலனங்களே எம் மனதில் தாண்டவமாடுகிறது
தண்டனை தான் தலை தூக்கி நிற்கிறது.
தயவாகக் கேட்கின்றோம் தங்களிற்குப் புரிகிறதா?

மாங்காப் புகழுடனே
மண்ணுலகம் ஆள வந்தோம்
மனிதநேயம் காக்க வந்தோம்
தங்காதா? எம் உரிமைகள்
இந்த மானிலத்தே

உரிமைகளை வென்றெடுக்க
உணர்ச்சிகளை வெளிப்படுத்த
சிறந்த நல் விழுமியங்கள்
சிந்தையிலே நிழலாட
பெரியோரே எமக்கோர் இடம் வேண்டும்

சிறககொடிந்து முடங்கிக் கிடக்கும் சிட்டுக்குருவிகளே
துயரம் எனும் சேற்றில் மூழ்கிய செந்தாமரை மலர்களே
மரணித்த குயில்களாக வலம் வரும் பட்டாம் பூச்சிகளே
வலிமையோடு புறப்பட்டு வாருங்கள்
ஒக்டோபர் ஒன்று தனில் உரிமைக்காய் குரல் கொடுப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைய இவ் வையகத்தின்
நலியா தலைமைகள் நாம்
எம்மீது கடுஞ்சொல் வீசலோ
கம்பினை எறிதலோ
ஆகாது ஆகாது விட்டுத்தள்ளுங்கள்

பள்ளிப்பருவமதை பக்குவமாய் கழித்திடவே
பல்கலை சென்று பட்டம் பெற்றிடவே
பாலகர் எம் கனவு பகல் கனவாவதேனோ
பாவியர் சிலரின் பாதகச் செயல்
பாவமாகிப் போவதேனோ

முதிரா பிஞ்சுகளை முகர்ந்து சுவைத்து
உதிரா வயதில் உதிர்த்தலும் தகுமோ
சதிராடும் தண்டாளச் செயல் செய்து
எதை வேண்டுகிறீர்

எம் உரிமைகளை அவாக்களை
பெரியோரோ நீர் பெரும் மனதுடன்
பேணி காத்திடல் வேண்டும்
நாம் நாளை மணப்போம்
இப்பூவுலகில் நறுமணப்பூக்களாக

இன்னைய சிட்டுக்கள் நாம்
நாளைய சிறகடிக்க வேண்டும்
இன்னல்கள் இனியும் வேண்டாம்
வீறுநடை போட வேண்டும் இவ்வையகத்தில்
இலட்சிய வேட்கை தனைச்சுமந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கிய விழா - 2016
# போட்டி முடிவுகள்

**கிராமியப்பாடல் :**

மேற்பிரிவு

| | | |
|---|---|---|
| 1) | கனகராயன்குளம் ம.வி. - | 1ஆம் இடம் |
| 2) | நெடுங்கேணி ம.வி. - | 2ஆம் இடம் |
| 3) | ஒலுமடு அ.த.க.பா - | 3 ஆம் இடம் |

கீழ்பிரிவு

| | | |
|---|---|---|
| 1) | ஒலுமடு அ.த.க.பா - | 1ஆம் இடம் |
| 2) | நெடுங்கேணி ம.வி - | 2ஆம்இடம் |

**கிராமியநடனம் :**

மேற்பிரிவு

| | | |
|---|---|---|
| 1) | நெடுங்கேணி ம.வி - | 1ஆம் இடம் |
| 2) | ஒலுமடு அ.த.க.பா. - | 2ஆம் இடம் |

கீழ்பிரிவு

| | | |
|---|---|---|
| 1) | நெடுங்கேணி ம.வி - | 1ஆம் இடம் |
| 2) | ஒலுமடு அ.த.க.பா. - | 2ஆம்இடம் |

**நாடகம் :**

| | | |
|---|---|---|
| 1) | நெடுங்கேணி ம.வி - | 1ஆம்இடம் |
| 2) | விக்கினேஸ்வரா ம.வி | 2ஆம் இடம் |

**ஓவியம் :**

தரம் 3 - 5

| | | | |
|---|---|---|---|
| 1) | இ.பகிர்தா | 1ஆம் இடம் | ஒலுமடு அ.த.க.பா. |
| 2) | இ.கற்சிகன் | 2ஆம் இடம் | விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் |
| 3) | ஜெ.அக்சனா | 3ஆம் இடம் | விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் |

தரம் 6 - 9

| | | | |
|---|---|---|---|
| 1) | க.தவனேசன் | 1ஆம் இடம் | ஒலுமடு அ.த.க.பா. |
| 2) | ப.விஜிதரன் | 2 ஆம் இடம் | ஒலுமடு அ.த.க.பா. |
| 3) | சி.சிவதர்சன் | 3 ஆம் இடம் | ஒலுமடு அ.த.க.பா. |
| 4) | வ.டிவாகர் | 3 ஆம் இடம | விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் |

தரம் 10 - 12

| | | | |
|---|---|---|---|
| 1) | தி.கேசவன் | 1ஆம் இடம் | ஒலுமடு அ.த.க.பா. |
| 2) | ஜெ.சாருஜன் | 2 ஆம் இடம் | விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் |
| 3) | சி.மகிந்தன் | 3ஆம் இடம் | விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் |
| 4) | ம.பானுசன் | 4ஆம் இடம் | விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் |

013576



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேச சபை

## கிளிநொச்சி

## பொது சன நூலகம்

கிளிநொச்சி/முரசுமோட்டை/வட்டக்கச்சி/ ஸ்கந்தபுரம்

இப்புத்தகம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். குறித்த தவணைக்குள் கொடுக்கப்படாத புத்தகம் ஒவ்வொன்றுக்கும் வாரம் ஒன்றுக்கு குற்றப்பணமாக ரூபா 10/- அறவிடப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

Title:

Class No:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIJAY
PRINTING PRESS